15

வைத்திய அட்டவணை

292

116

திருப்பரங்கிரி மருத்துவ மனோதாக் நிலையம்

வைத்திய அட்டவணை.

ஏட்டு 49.

292

தேதி: 28.4.64.
ஓலைச் சுவடியின் பெயர்: "வைத்திய அட்டவணை கட்டு-49"
உரிமையாளரின் பெயர்: கீழ்பாக்கம் மருத்துவ நூல் நிலையம்.
இடம்: கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மனை, சென்னை-10.

***

மதன மேக விலாச உருண்டை செய்கிற விபரம்:-

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, திப்பிலி, குளக்கெண்டை, அதிமதுரம் சீரகம், கருஞ்சீரகம், பூலாங்கிழங்கு, கோஷ்டம், கெண்டு பறங்கி, குருசானி ஓமம், நாகேசரம், வெள்ளறுகு, கற்கடகசிங்கி, சுக்கு, மிளகு, சதகுப்பை, சித்திரமூலம், யேலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், காட்லவம் பிசின், கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிக்காய் தோல் உளுந்தம் பருப்பு, பூமி சர்க்கரைக் கிழங்கு எள்ளு யிந்துப்பு யிவை யிவை கடைச் சரக்கு விராகனிடை.60 யிளநீரில் போட்டுக் குழம்பாக்கி யிந்தச் சூரணம் யிதுவெல்லாம் கூடப் போட்டுக் கல் ப் போலே கிளறி வெந்த பதத்தில் இறக்கி உருண்டை பண்ணிக் கொண்டு வேண்டியபோது கொள்ளவும். ஆனந்த உல்லாசமாயிருக்கும். தீபன முண்டாம். வீரிய விர்த்தினை உண்டாம். பித்த சிலேத்துமந் தீரும். தேன் உழக்குக் கூட்டிக் கொள்ளவும்.

இதுவு மது:-

சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, கிராம்பு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, குளக்கெண்டை விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, சீரகம் விராகனிடைகக, கருஞ்சீரகம் விராகனிடை.க, பூலாங் கிழங்கு, கோஷ்டம் விராகனிடை.க, கெண்டு பறங்கி விராகனிடை.க, குருசானி ஓமம் விராகனிடை.க, நாகேசரம் விராகனிடை.க, சிறுநாகப்பூ .க, வெள்ளறுகு விராக னிடை.க, கற்கடக சிங்கி, சுக்கு விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, சதகுப்பை விராகனிடை.க, கொடிவேலி விராகனிடை.க, யேலம் விராகனிடை.க, லவங்கப்பட்டை விராகனிடை.க, கொசுடி லவங்கப் பத்திரி விராகனிடை.க, முந்திரிப் பழம் விராகனிடை .க, பேரீச்சம் பழம்.க, காட்டிலவம் பிசின்.க, கடுக்காய்த் தோல், தான்றிக்காய் தோல் நெல்லி காய்த் தோல், உளுத்தம் பருப்பு, பூமி சர்க்கரைக் கிழங்கு, எள்ளு இந்துப்பு ஆக 33 பொன்னிறமாக வறுத்து யிடித்து தெள்ளிக் கொண்டு நல்ல சடைக் கஞ்சா தூள் படி.¼, சர்க்கரை விராகனிடை.60.

சுராங்கிஷம்:-

இரதங் கெந்தகம், தாம்பிர பற்பம் இது மூன்றும் சமனிறை யிதுக்கு மூன்றத் தொன்று நாபி இந்த மருந்துக் கெல்லாம் சாதிலிங்கம், ரெண்டு பங்கு கூட்டி நொச் சியிலைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்துப் பாசிப் பயறு பிரமாணம் உருண்டை பண்ணி நொச்சியிலைச் சாத்தில் பதினைந்து மிளகு பொடி பண்ணி ஒரு மாத்தி ரயுங் கூட்டி உரைத்துக் கொடுக்கவும். சறுவ சுரமுடனே வேர்வை யிட்டு மயக்கங் கொடுத்து உடனே நிற்கும்.

விஷ சுரத்துக் குணம்: கசாயம்:-

தலை யெடுக்க ஒட்டாது. மய்க்கமா யிருக்கும். பலங் குன்றிப் போம். அகோரமாய்க் காயும்.

இதுக்கு மருந்து:-

சந்தித் தண்டு, நிலக் குமிள் வேர், நெருஞ்சி வேர், சித்தாமுட்டி வேர், நன்னாரி வேர், செங்கழுநீர் கோஷ்டம், பற்படாகஞ் சுக்குத் திப்பிலி, விலாமிச்சை வேர், நல்ல சீரகம், யிது வெல்லாம் வகைக்கு மூன்று விராகனிடை கூட்டி யித்து யிடித்து மூன்று படி தண்ணீர் விட்டு முக்கால் படியாகக் காய்ச்சி மூன்று நாள் கொடுக்க வும் தீரும். பத்தியம் வெந்நீருஞ் சோறு முண்ணவும். கை கண்டது.

தோஷ குணத்துக்கு விரோசனம்:-

நாக்கு கறுத்து யிருக்கும் மணல் போலேயும் முள்ளுப் போலேயுஞ் சர சரவென்று பல்லு பல்லுக் கறுத்து நாக்குக் குளறிப் பேசும். தாகமாம். நாடி சைக் கினையாய் நடக்கும். காச்சல் புசிணப் போலே காயும் மேலூப்பிச மெடுக்கும்.

இறுக்கு:- ஐந்து கடுக்காய், ஐந்து களிப்பாக்கு அரைத்து ஒரு படி தண்ணீரில் காச்சி அரைப்படி யிறுத்துக் கொடுக்கவும். வயறு விடும். தோஷந் தீரும்.

இதுக்கு கசாயம்:-

வில்வப் பத்திரி வேர், செங்கழுநீர்க் கோஷ்டம், முன்னை வேர், பெருங் குமிள் வேர், சித்தமல்லிகை வேர், நெருஞ்சி வேர், முள்ளி வேர், பற்படாகம் விஷ்ணு கிராந்தி, சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், சீந்தித் தண்டு, துளசி சமூலம், முத்தக் காசு, சுக்கு, திப்பிலி, சிறுதேக்கு, திப்பிலி மூலம் யிது வெல்லாம் விராகனிடை யிடித்துக் காச்சி ரெண்டு நேரமும் மூன்று நாள்க் கொடுக்கவுஞ் சுரம் விடும்.

குண்டிகை அக்கரத்துக்கு:-

பருத்தியிலையும், ஈர வெங்காயஞ் கொஞ்சத்துக் குள்ளே சீரகம் பொரித்து

கூட நருக்கி ரசம் பிழிந்து உள்ளுக்குக் கொடுக்கவுந் தீரும். இதுவெல்லாம் வெகுவாய் நாக்கு வாங்கிப் பேச்சில்லாம லிருந்தால் கோவைக் காய் நெருப்புத் தணலிலே புதைத்து அத்தைத் தொலிச்சுப் போட்டு சீரகமீ பொரித்து யிது இரண்டும் அரைத்து முலைப் பாலிலரைப் படி கலந்து கொடுக்கவும் குணமாம்.

அக்கரத்துக்கு:-

பொன்னாங்கண்ணி வேர், சிறுகீரை வேர், பனை வேர், ஒருக் கொட்டைப் படு தொய்யல் வேர், விலாமிச்சம் வேர், அம்மான் பச்சரிசி, சமூலம், ஆலங் குமிழ், நாவல் கொழுந்து யிது வெல்லாஞ் சரி வர வெடுத்து வென்னீர் வாத்தரைத்து வழித்துக் கொண்டு அதில் மூன்றிலொரு பங்கு நல்ல வெல்லம் நெகிழ்த்துப் போட்டுப் பசுவின் பால் குத்தி யளகின பதமாகக் இழப்பி முழுங்கிடவும். வென்னீர் வார்த்து வாய் கொப்பளிக்கவும் தாகமும், அக்கரமுந் தீர்ந்து நாக்கிலீர முண்டாம். கை கண்டது.

சுரத்துக்கு கசாயம்:-

பேராமுட்டி சமூலம் பிடி யிரை அளவு சுக்கு யிது இரண்டும் ஒரு படி தன்னீர் விட்டரைத்துக் காய்ச்சிக் கொடுக்கவும். சுரம் நாலு நாளைய மாறலும் மூன்று மாறலும் தீரும். கை கண்டது. பத்தியம் வென்னீருஞ் சோறும் உண்ணவும்.

சுது விரோசனம்:-

அதிமதுரம் விராகனிடை.3, அரியகரிசி விரை விராகனிடை.3, மர மஞ்சள் விராகனிடை.3 யிது வெல்லா யிடித்துச் சூரணம் பண்ணி பசுவின் கோமியம் படி.½ சாணிப்பால் படி.¼, நெய் படி.½ யிது வெல்லாங் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வைக்கவும். ஒரு கறண்டி நெய் இடிக்கவும். பசுவின் தயிர், மோர் முறிச்சுக் கொடுக்கவும். ~~பதிமூ~~

பதிமூன்று வகைச் சன்னிக்கு மருந்து:-

முறுக்கு சன்னி பிற சுத்த சத்த சன்னி திகிலு சன்னி, சுக சன்னி, அதிரு சன்னி, வாய்வு சன்னி.

பிடரி தலைப் பாரிப்பு மேலுங் கடுக்கும். உள் சுரம் உள்வாய்வு அதிரு வாய்வு இதுக்கு மருந்து:-

எருக்கம் வேர், நாயுருவி வேர், காட்டு முருங்கை வேர், செம்புளிச்சம் வேர், நிலவேம்பு, வேர், கொடிவேலி வேர், மலைதாங்கி வேர், பூனை தடுக்கி வேர், மூன்று விடாத்தி குட்டிபிராஞ்செடி யென்று சொல்லுவார்கள்.

பெரு மருந்து நீலி வேர், செங்கத்தாரி வேர், சங்கஞ் செடி வேர், முள்ளுச் சுண்டை வேர், வேலிப் பருத்தி வேர், வட்டச் சுள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், நல்ல முள்ளி வேர், சித்தாமுட்டி, பேராமுட்டி வேர், விஷ்ணு கிராந்தி தூத்தி வேர், நிலத் தூத்தி வேர், கஞ்சாங் கோரை வேர், துளசி வேர், கொளிஞ்சி வேர், கல்க் கொளிஞ்சி வேர், சொத்தைக் கிளா வேர், மருக்காரை வேர், துளசி வேர் கவுதும்பை வேர், நஞ்சுண்டான் வேர், மிளகறணை வேர், பெருங் குறிஞ்சா வேர், சிறுகுறிஞ்சா வேர், மென்றி வேர், வேலாம் பட்டை தட்டிக் கொள்ளவும். இவை வகைக்கு மூலம் விராகன்.3 மிளகு விராகன்.3, சாதிபத்திரி விராகன்.3, வெள்வெங்காயக் கட்டி ஐந்து, கருஞ்சீரகம்.3, சாதிக்காய் விராகனிடை.3, சாதிபத்திரி விராகனிடை.3 யிது வெல்லாம் நருக்கி யிடித்து சூரணம் பண்ணி ஒன்பது படி தன்னீர் விட்டுக் காய்ச்சி மூன்று படியானதின் பிறகு ஒவ்வொரு பிடி வெதும்ப வைத்து மூன்று நாளாறு நேரங் கொடுக்கவும். அதுக்குத் தீராதிருந்தால் வெற்றிலை 30, துளசியிலை, தேங்காயளவு, கையாந்தகரை, தேங்காயளவு பிழிஞ்சு அந்தக் கசாயமுங் கூட்டி மூன்று நாள்க் கொடுக்கவும். யிதுக்குத் தீரும் வியாதி சன்னி சுரம், பதிமூன்று வகை சன்னி, சூதக சன்னி திகிலு சன்னி; வலிப்பு, வாங்கு சன்னி, யிழுக்கும் பிறசுத்த் சன்னி அதிரு சன்னி வாய்வு பல் கட்டின சன்னி முறுக்க சன்னி திமிர் வாய்வு சன்னி யிது வெல்லாந் தீரும்.

(அடுத்த 4-ம் ஏடு முறிந்துள்ளது)

சகல சன்னி சுக சன்னிக்கு:-

மருக்காரைப் பட்டை, முள்ளிக் காயளவு, மஞ்சள், மிளகு, வெள்ளுள்ளி, யிது நாலும் அரைத்து யிள வென்னீரில் குளப்பிக் கொடுக்கவும் முறியும்.

(வேறு)

முசுமுசுக்கையை நருக்கிச் சும்மாடு பண்ணி நடுத் தலையில் மஞ்சள் பொடி போட்டு அதின் மேலே வைக்கவும். சன்னி முறியும் தீரும். கை கண்டது.

சுது சன்னி மாங்கிஷ தோஷத்துக்கு மருந்து:-

மூட்டைப் பூச்சி, ஈ, எறும்பு இது மூன்றும் சாட்டறணைச் சாறு கையில் விட்டு கையிலிழைத்து ரெத்தமுங் கூட்டிப் பின்னையும் யிழைத்துக் கண்ணில் போடவும். அதின் பிறகு குமிளம் வேரும் பனை வெல்லமுங் கூட்டி அரைத்து நாக்கு வழிச்சு உள்ளுக்குங் கொடுக்கவும். அதின் பிறகு அரிவாள் காய்ச்சி உச்சி வகிர்ந்து கற்றாழை வேர் நருக்கி அதி பிளியவும். சுக சன்னி முறியும்.

வாதத்துக்கு:-

ஒரு மானம் பூவின் நெய்யில் மூன்று அறணை வால் நறுக்கிப் போட்டு எரித்து ஒரு கொதி கொதிச்சாப் போலே யிறக்கிக் கொண்டு வாயிலே படாமல் முறுக்கிப் பிடிக்கவும். பிறகு கையை நன்றாய்க் கழுவிப் போடவும். இல்லாதிருந்தால் மோசம் வரும். பத்தியம் சுத்த போசனம். யிதுக்குச் சோதனை ஊர்ந்த எருக்கங் கோலெடுத்து நெய்யில் நனைச்சுச் சற்று நேரம் பொருத்து வளைக்கவும் வளையும். வியாதியுந் தீருங். கை கண்டது.

வாய் குளறின சன்னிக்கு:-

சத்தி சாறணைக் கிழங்கு பிடி.க, அமுக்கிலாங் கிழங்கு பிடி.உ, இது இரண்டையுங் கூட்டி யிடித்து மாவானதின் பிறகு புழுங்கலரிசி ஒரு சேர் ஊறப் போட்டு அரைத்து மருந்தும் மாவும் அரிசி மாவும் கலந்து களிக் கிண்டித் தின்னவும். பத்தியங் கார்ப்பு, புளி விடவும்.

மேலுக்கு ஒத்திட மருந்து:-

வெங்கிச்சங் கல்லு சிறு கல்லாய் வறுத்து எருக்கிலையைக் கல்லை தைத்து கல்லையின் மீமே ஒரு சீலையைப் போட்டு நொச்சியிலையை யிடித்துக் கல்லைக் குள்ளே வைத்துக் கல்லைக் கொட்டிப் பொட்டணமாய்ப் பிடித்து தலை சூட சந்து யெல்லா மொத்திடவும் சன்னி யென்றதெல்லாந் தீரும்.

(வேறு)

துத்தி வேர்.க, கண்டங்கத்திரி வேர்.உ, முள்ளி வேர்.க, தூதுவளை வேர்.க, மலைதாங்கி வேர், சிறு குறிஞ்சா வேர் தட்டின பட்டை ஒரு எலுமிச்சங் காயளவு சிறுகீரை வேர்.உ, சாறணை வேர்.க, முசுமுசுக்கை வேர்.க, மூக்கறட்டை வேர்.க, சுண்டைப் பட்டை ஒரு கழல்க் காயளவு மிளகுரணை பட்டை ஒரு கழல் காயளவு சிலந்தி வேர்.க, கோவைத் தண்டு.க, நிலாவாரை வேர்.உ, நார்த்தந் தழை ரெண்டிலை யிந்தக் காட்டு மருந்து வேரெல்லாம் பட்டை தட்டி வைக்கவும். கடைச் சரக்கு வகை கருஞ்சீரகம், திப்பிலி, திப்பிலி மூலம், சீரகம், யேலரிசி, கடுகுரோகணி, லவங்கப் பட்டை, லவங்கப்பூ, அக்கிரக் காரம், செங்கழுநீர்க் கோஷ்டம் வாய் விளங்கம், கொத்தமல்லிகை, அதிமதுரம், ஒரு காசு, மிளகு வெள்ருள்ளி.க, கட்டி யிந்தக் கடைச் சரக்கும் மருந்து வகை ஒன்றுக்கு விராகனிடை.க, வெந்தயம் கால் காசிடை, சிறுகீரை வேர் பிடுங்கி வந்து ஒரு படி தண்ணீரிலே வேக வைத்து வெந்த தண்ணீர் விட்டு மருந்தெல்லா மரைக்கவும். நன்றாய் ரத்த பிறகு உருண்டை முள்ளிக் காயளவு பண்ணி வைத்துக் கொண்டு தினமொரு உருண்டை கீரைத் தண்ணீர வெறுஞ் சட்டியைக் காய வைத்து தாளிதம் பண்ணிக் குடிக்கவும். சன்னி சயித்திய மெல்லாந் தீரும்.

திருகு சன்னிக்கு என்ணை:-

சாறணை வேர் மூன்று, மூக்கறட்டை வேர் மூன்று, அவுரி வேர்.3 முடக் கொத்தான் வேர் பிடி.க, விரை ஒரு சேர சோமநாதப் பெருங்காயம் விராகனிடை.4, ரசம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, வேப்பெண்ணை படி.உ, கடை மருந் தெல்ல மொரு பொட்டணமாகக் கட்டி வேப்பெண்ணையில் வேக வைத்து என்ணை யிறக்கி ரசத்தை நெல்லிக்காய்க் கெந்தகம்----விடவும். அந்த இரண்டு கர்சிடை மருவாதி கணக்கு பார்த்துக் காலம்பற ஒரு---ரண்டு கொடுக்கவும். என்ணையில் வெந்த கடுகை ரெண்டு காசிடை மரியாதி ஒரு ----கொடுக்கவும். ----புகை பிடிக்கவும். யிதுக்குப் பத்தியம் துவரப் பருப்பு, வெள்ளாட்டுப்புக் கண்டம், முருங்கை யிலை யிது வெல்லாம் புளி விட்டு உப்புக் கூட்டவும். இதக்குத் திருகு சன்னி தீரும்.

மண்டை சன்னிக்கு:-

சமுத்திராப் பழம் விராகனிடை.க, செங்கழுநீர்க் கோஷ்டம் விராகனிடை.3 அதிவிடையம் விராகனிடை.3, புரசம் விரை பலம்.3, கஸ்தூரி மஞ்சள் பலம்.3, சாதிக்காய் பலம்.க, சாதிப் பத்திரி பலம்.க, பச்சை நாவி பலம்.க, கிராம்பு பலம்.க, கொட்டிச் சாந்து பலம்.க, வலம்புரிக்காய் பலம்.க, நெறி விஷம் பலம்.த, எட்டின்ணை ஐந்து படி யிப்பால் சமுத்திராப் பழத்தைக் கொண்டு வந்து எலுமிச்சம் பழச் சாற்றில் நசிய மிடவும். இந்த மருந்து கொண்டு வந்து தூள் பண்ணிப் பொட்டணங் கட்டி என்ணையில் வேக வைத்து வைக்கவும். அந்த என்ணைக்கு பதம் ஒரு துளி என்ணையைத் தண்ணீரில் வைத்தால் (திரு பாண்டு) திரண்டு நின்றால் வெந்தது எடுத்துக் கொள்ளவும். அந்த என்ணையை மற்ற நாள் கண்ணில் படாமல் நன்றாய்த் தேய்த்து இலுப்பை புண்ணாக்கிட்டு வென்னீரில் முழுகவும். மண்டை சன்னி தீரும். கை கண்டது.

திமிரு சன்னிக்கு:-

சுக்குச் சீவி நருக்கினது அரைப்படி மிளகு அரைப்படி, வெள் வெங்காயம் அரைப்படி யிவை பொடி செய்து கொடிவேலி வேர், சீந்திக் கொடிவேர், சிறுகுறிஞ்சா வேர், முள்ளி வேர், தூதுவளை வேர், கண்டங்கத்திரி வேர், நொச்சில் வேர், நிலாவாரை வேர், வெள்ளறுகு பிறண்டை வேர் இவை யெல்லாம் ஒவ்வொன்று ஒரு படி கொண்டு வந்து வேக வைத்துக் கல்லு விலே ஆட்டி இந்த மருந்தெல்லாம் தொப்பை உரித்தது தூள் பண்ணி யிது வெல்லாம் ஒன்றாய்க் கூட்டி நல்லெண்ணை ஒரு பிடி வார்த்து பெருங்காயம் போட்டு சட்டி தாளிச்சு சட்டியில் வைத்துக் கொண்டு தினமொரு எலுமிச்சங்காயளவு கொள்ளவும். பலவகைச் சன்னி தீரும்.

சன்னி உடம்புக்கு:-

எழு முள்ளித் தழை கொண்டு வந்து துவைத்து ராகிமா ஒரு படி மாவில் அந்தச் சாறு வார்த்துப் பிசைந்து ரொட்டியாகச்சுட்டுத் தேனில் தொட்டுத தின்னவும். பகலுக்குச் சாமைச் சோறு அசனம் பண்ணவும். இப்படி மூன்று நாளைக்குத் தின்னவும். பத்தியம் உப்பு, புளியாகாது.

குன்மத்துக்கு மருந்து:-

குன்றியிலை ரெண்டு யிளநீரளவுக்கு அரைப்படி உப்புப் போட்டு இடித்து உவர் பதத்திலரைத்து உருண்டை பண்ணிக் கொடுக்கையி லடைத்துக் கொண்டு கொடுக்கவும். குன்ம வாய்வு எட்டும், குன்ம வலி எட்டு வகை கணமும் பத்து வருஉ த்தும் தீரும்.

குன்மத்துக்கு எல்லா மருந்து:-

இந்துப்பு, ஐந்து விராகனிடை சதிரக் கள்ளிப் பால் விட்டரைத்துத் தேங்காய் இளநீர் ஊத்திப் போர்ட்டு அதிலடைத்துக் கண்ணை மூடி விருட்டியில் புடம் வைத்துச் சுட்டு வெடித்த உடனே எடுத்துத் தேங்காயை அரைத்துப் புதுக் கலசத்தில் வைத்துச் சிறு பாக்களவு கொள்ளவும். வயறு விடும். குன்ம வலி எல்லாந் தீரும். கை கண்டது.

வயறு வலிக்கு:-

செங்கல் கொண்டு வந்து புளியங் கொட்டை போலே நறுக்கி நெருப்புப் பறக்க வறுத்துச் சிவந்தவுடனே ஒரு சிறங்கை மிளகு ரெண்டாவது வறுத்து சிவந்த செங் கல்லுக்குள்ளே போட்டு இரண்டு படி தண்ணீர் மூடி எரித்து உழக்கான பிறகு யிறுத்துக் கொடுக்கவும். யிப்படி மூன்று நாள் கொடுக்கவும். மூல குன்மமும் வயறு வலியும் தீரும்.

(வேறு).

கருவேலம் வேர் வெட்டி வந்து சின்ன எலுமிச்சங் காயளவு அரைத்து ஏலரிசி கூட்டிக் காராட்டுப் பாலில் குடிக்கவும். இதுக்கு பத்தியம் நெல்லுச் சோறு பச்சைப் பயறு மிளகு கூட்டிக் கொள்ளவும் தீரும்.

எட்டு வகைக் குன்மத்துக்கு:-

செம்பு விராகனிடை.உ, வெங்காய சருகு போல தட்டித் தகடு பண்ணிக் கெந்தகம் ஒரு விராகனிடை சிந்தன் ரசம் விட்டு தகட்டில் பூசி அதின் பிறகு இரண்டு சிந்தன் பழச் ஒரு பாத்திரத்தில் பிழிந்து அதில் தகடு போட்டு ஒரு நாள் சூரிய புடம் வைத்து ரெண்டா நாள் கையாந் தகரைச் சாறு விட்டு சூரியபுடம் வைத்து மூன்று நாள் துளசிச் சாறு விட்டுச் சூரிய புடம் வைத்து நாலா நாள் குப்பை மேனிச் சாறு விட்டுச் சூரிய புடம் வைத்து ஐந்தா நாள் யுருவிச் சாறு விட்டுச் சூரிய புடம் வைத்து அதற்கு பசுவின் வெண்ணை போலே யுறைஞ்சு போம். அதின் பிறகு ஆறு நாள் எடுத்து மிளகு போலே குளிகை பண்ணிநிழலுலத்திச் சிமிளிலடைத்துக் கொண்டு பசுவின் நெய்யுள்ளங் கையில் குத்தி அதிலே குளிகை கூட்டிக் கொள்ளவும். எட்டு நாள்க் கொள்ளவும் தீரும். பத்தியம் கார்ப்பு, புளி விடவும். வெள்ளாட் டுப்புக் கண்டம் கூட்டிக் கொள்ளவும். குளிகை தின்கிற போது வாய் நீருறினால் கய்யாந் தகரைச் சாத்தில் குளிகை யிடவும். நாடி பிடித்துப் பார்க்க.

உஷ்ண குன்மஞ் சத்தி குன்மத்துக்கு மருந்து:-

சிறுகிளா வேர் பட்டை நற்சீரகம், ஏலரிசி, நல்ல வெல்லம் கருங் குறுவை நெல்லு ஒரு பிடி சூரிய உதைய மூறப் போட்டு அந்திக்கு வடி கொண்டு முளை கட்டிக் கால்மே யிடித்து தேன் ஒரு பங்கு சீனி மருந்து மூன்று குண்டுமணி அளவு சமன் கூட்டி இரண்டு கறண்டி மறப்படா நெய் கூட்டி யிது வெல்லாம் சாரித்துக் குடிக்கவும். பத்தியம் பசுவின் நெய், மிளகு, துவரைப் பருப்பு, சப்பை கூட்டிக் கொள்ளவும். மூன்று நாள் பிறகு பூமி சர்க்கரை கிழங்கு சிந்தன் காய் அளவு விழுது பட அரைத்துக் குறுவை நெல்லு பிடி முளைகட்டி வெல்லம் கூட்டி பசுவின் பாலில் வடி கொண்டு நெய்கால் படி கூட்டி மூன்று நாள் கொள்ளவும். இப்படி ஒன்பது முறை விட்டு விட்டுக் கொள்ளவும். இதுக்கு அசனந் தக்காமல் போனால் ஆறியமாக கூழுமக்கி ஆற விட்டு யிளந் தோச்சத் தயிர் விட்டுக் கலக்கி வயறு முட்டக் குடிக்கவும். யிது கை கண்டது.

பச்சை நாவி, நெறு விஷம், ரசம் யுருவி நாவி, அரிதாரம், கெந்தகம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், திரிகடுகு, சாதிலிங்கம் வெண்காரம், ஆக மருந்து பதினாலு சமன் கூட்டி யிதுக்குச் சமன் சுத்தி பண்ணின நேர்வாளம் கூட்டிக் கரிசலாங் கண்ணிச் சாறு விட்டு யிருபத்தொரு நாளரைத்து துவரைப் பருப்பு பிரமானம் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு கிறாணிக்கு மோரிலிடவும். காச்சலுக்கு சுக்குக் கசாயத்திலிடவும். வாத சுரத்துக்கு கொத்தமல்லிக் கசாயத்திலிடவும். சிலேஷ்மத்துக்கு நல்ல சீரகக் கசாயத்தி லிடவும். அதிசாரத்துக்கு வாழைப் பூச் சாத்திலிடவும். விஷ சுரத்துக்கு அம்மான் பச்சரிசி சாத்திலிடவும். --த்து வலிக்கு வெள்ளுள்ளி தயிலத்திலிடவும்.

குன்மத்துக்கு:-

பேரிச்சம் பழச் சாத்திலிடவும். ஓமக் கசாயத்திலிடவும். பசுவின் கோமியத்தி லிடவும். குப்பை மேனிச் சாத்திலிடவும். காமாலைக்கு புளியிலைச் சாத்திலிடவும். அண்ட வாதத்துக்குப் பசுவின் பாலிலிடவும். மறணவாத வலிப்புக்கு அக்கிரா காரத்திலிடவும். யிடுப்பு நோக்காட்டுக்கு பசுவின் நெய்யிலிடவும். வயற்றுக் கழிச்சலுக்கு காரையிலைச் சாத்திலிடவும். கால் கெண்டை நோவுக்கு கஞ்சாங் கோரைச் சாத்திலிடவும். அம்மான் பச்சரிசி சாத்திலிடவும். சன்னிக்கு சர்க்கரை குன்றி யிலைச் சாத்திலிடவும். சகல ரோகத்துக்கும் தேனிலிடவும். பத்தியம் தினையரிசி, நெல்லரிசி, கஞ்சி காச்சிக் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். கற்பூராதி முற்றும்.

தாளிச பத்திரி வடகம்:-

சுக்கு பலம்.3, திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.உ, மிளகு பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, செவிய்ம் பலம்.க, சித்திரமூலம் பலம்.க, சிறுதேக்கு பலம்.க, சித்தரத்தை பலம்.க, லவங்கப் பட்டை விராகனிடை.3, லவங்கப் பத்திரி விராகனிடை.3, சிறுநாகப்பூ விராகனிடை.3, கிராம்பு விராகனிடை.3, சாதிக்காய் விராகனிடை.3, ஏலம் விராகனிடை.கீ, கடுகுரோகணி விராகனிடை.3, யிது வெல்லா மிடித்துச் சூரணம் பண்ணி யிது ரெட்டி பழ வெல்லம் பாகு பதமாய் வருகிற போது பொடி தூவிக் கிளறித் தேன் விட்டுக் கிளறிக் கழச்சி மருவாதி யுருட்டிக் கொண்டு யிதுக்குத் தீரும் வியாதி ருத்திர வாய்வு, அண்ட வாதம், க்ஷயம், காசம், அதிசார கிருணி, குன்மம், அந்திர வாய்வு, வாத பித்த சிலேஷ்மம், பயித்திய வாய்வு, மேகம் யிது வெல்லாந் தீரும்.

ஆக்கர சஞ்சீவி:-

வேப்பம் பருப்பு வறட்டு அரக்கு மஞ்சள் யிது தற் சமன் வெந்நீர் விட்டரைத்து தூது விளங்காய் பிரமாணம் உருட்டி நிழலுலத்தி வைத்துக் கொண்டு சகல சுரத்துக்கும் வெந்நீரிலிடவும். முலைப் பாலிலிடவும். கணைக் காச்சலுக்கு ஆவாரை யிலை மணத் தக்காளி யிலை தகரையிலை அவரை யிலை, சுரையிலை, அகத்தியிலை யிது ஆறும் சமன் கொண்டு யிடித்துப் புட்ட வித்துச் சாறு புளிந்து அதிலரைத்து மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்கவும். தொண்டையிலிருந்து யிரக் குலை மட்டாய் வெந்திருந்தாலும் பண்ணும். சுரம் நிற்கும்.

வலி குன்மத்துக்கு குணமும் மருந்தும்:-

வயறு ஊதல், யிரைச்சல், ஏப்பம், எரிவு, அடி வயத்திலே இருந்து கெண்டை யேறுகிறுப் போலே யேறுகிறது கல்லிப் பிடிக்கிறதும் ஒரு நேரம் உண்ட சோறு ஒரு நேரம் எடுக்கிறதுமா யிருக்கும்.

இதுக்கு மருந்து:-

தீ யெரிகிற சாராயமாய்க் கொண்டு வந்து ஒரு நேரத்துக்கு ஒரு பிடி மிளகு பொடி செய்து சீலையில் அரிச்சு அந்தச் சூள் தயிலம் விழுகிற விடத்திலே பீங்கான் குப்பி வைக்கவும். இந்தத் தயிலம் இறக்கிறது முந்தின டாப்பில் பார்த்துக் கொண்டு வகையோடே செய்யவும்.

டாப்பில் விபரம்:-

வளையங் குப்பியில் கல்லுப்பு ஆனாலும் பாவையுப்பு ஆனாலும் ரெப்பிக் குப்பியில் சிறு துவாரமாக்கி கோணியால் பை தைத்து அதில் வேலிப் பருத்தி யிலை உணர்த்தி அந்த இலைப் பையிலே போட்டு அதின் மேலே குப்பி கவிழ்த்து வைத்து அந்தக் குப்பி வாயில் ஒரு குழல் வைத்து இருப்பு முக்காலி யாகிலும் யிருப்புச் சட்டியாகிலும் துவாரஞ் செய்து அதின் மேலே பையை வைத்துத் தீ யெரிக்கவும். தயிலம் விழும். அந்தக் காரங்களிலே உப்புகளிலே தயிலம் வாங்கி மருந்துகளில் கூட்டி உண்டாக்கின குளிகை தீயில் போட்டால் புகைஞ்சு போகா தென்றும், ரசம் பாஷாணம் இது முதலானது கூட்டின குளிகை புகையாமல் நிற்கும். பிறயோக முண்டானது சகல வியாதிக்கும் ஆகும். இந்தப் பணிக்கிலே வலி குன்மத்துக்கும் தயிலம் யிறக்கிக் கொள்ளவும்.

சன்னி வாதத்தின் குணம் நடை இதுக்கு மருந்து:-

உடல் வலி தலையும் நொந்து உறுதி சேர் சன்னி வாதம்
குடலது பிறட்டி நோகும் குளப்பியோக் காளம் ஆகும்
கடலெனக் கலங்கிப் பின்னும் கண் சிவப்பாகுந் தூங்கும்
விடையெறு மூஞ்சூற் கோணி விரையவே நடக்கு மென்றே.

இதுக்கு மருந்து:-

நாக்குப் பூடு வெடுத்து வேலிப் பருத்திச் சாத்தில் அரைத்துக் கொடுக்கவும். கை கண்டது. ஆண் பிள்ளைகளுக்கு பெண் பிள்ளை சிறு நீர், பெண் பிள்ளைகளுக்கு ஆண் பிள்ளை சிறு நீரில் தேத்தாங் கொட்டை உரைத்துக் கொடுக்கவும். சுரம் தீரும். கடினமாகப் போறதில்லை. இது கை கண்டது.

வாத சுரக் குணம்: குடிநீர்:-

1. தக்க வாதங் கோபித்தால் சந்து குடைந்து கபாலமும் நோம்
   மிக்க மூரித்லை நோவாம் வீடா தெரியும் வங்கட்கும்

தொக்கு நரம்பு தான் முடங்கும் தூய்ய வாயு முலந்து வரும்
மிக்க குளிரும் உற்ற மாதா மேனி குன்ற வருந் தானே.

இதுக்கு குடிநீர்:-

2. நல்ல திப்பிலி வேர்க் கொம்பு நலமா மிளகு தன்னுடனே
சொல்லு முள்ளி சீரகமும் அலங்கு மோரரொன்றரைக் கழஞ்சு
வல்ல படியே அரைத்திதனை வகையால் வெந்நீருடன் குடிக்க
யில்லை வாத சீத சுரம் என்றே முனிவரியம்பினரே.

3. பேராமுட்டி சுக்குடனே பேனக் காச்சி உழக்காய்க் குடிக்கில்
வாரா வந்த விடசுரத்துடனும் நடுக்க மிகுங் கோபமுள்ளது
மீராமல்லா யிரு நாளை மாற்றும் ஏற்றமா மூன்று நாளையில் மாறலும்
நாலு நாளையில் மாறலும் தனிவரென்று முனிவர் சாத்தி.

4. சீரார் கடுகு ரோகணியும் சிறந்த திராயுங் கடுக்காயும்
மொர சிவதை கொன்றையுட் விச்சயு சிமம் வியாம் வேரும்
நேராக் காச்சி நாலொன்றாய் நிகரி யிந்துப்புடன் குடிக்க
பேராம் வாத சுரம் புரமல் பின்னுங் குணமாயேகிடுமே.

5. கஞ்சாங் கோரை கத்தாளை கருதும் வேப்பில் நாக்குடனே
மஞ்சார் பிரமிக் கடுக்காயும் வரையாஞ் சுக்குடன் கூட்டி
மஞ்சார் குழலாய் நாலிலொன்றாய் மதியா லாமனக் கென்னையுடன்
அஞ்சாதே நீர் குடிப்பிரா யமர்ந்து சீரமும் மிக விடுமே.

6. கற்றுழஞ் சாருடனே கடிய பாக்கு கடுக்காயும் கருவேல் பிரமியுடன் சுக்குங் கூட்டி
பற்றுமல் நாலொன்றாய்க் காச்சிக் கொண்டு பதமுமல் என்னையுடன் பருகுவீராய்
வற்றாதே உடல் வற்றும் சீதம் போக்கும் வடிவான சயங்களுடன் யிருமல் போக்கும்
பெற்றுரென் சீத சுரம் பேதியென்று பேருலகில் ஊமயுவாய் பேசிக் கொள்ளே.

வாத சுர குடிநீர்:-

7. காலுச்சி யள்வாகவே சென்று நரம்பிழுத்து நிற்குமுடனே
மேலுச்சி வர்தமுடன் கா------ன்று பின் மெய்யும் நளிர்ந்து மெலிவாம்
கோலும்---- தோர் பித்த மூன்று வாயிற் சிறந்தி தோரய்யமொடு
வந்திடும் வாலைச் சுர---பெரிய வாகை பெருங் குமிள் பாதிரை ரேன முன்னை
சதாவேரி.

8. விளா வேர் நன்னாரி நெருஞ்சில் பேய்ப் புடல் வேர் ஊரென சீந்திலுடன் பேரா
மட்டியே

8. ஏராருஞ் சித்தமல்லி பேரமல்லி என்டிசை என் சித்தமட்டி ஆடாதோடை
காராருங் கண்டங்கத்திரி முதக் காசு கருது மிலாமிச்சமுடன் அவரி தானும்
சாராரும் செங்கழு நீர்க் கிழங்கு சிறு குறிஞ்சில் சிறந்த சிறுகாஞ் சொறி வேரும்
கூட்டி
பேரான காவளை வேர் சாறணை வேருடனே பேயுர கென் கடைச் சரக்கும் பேசுங்
காலே.

20. தேவதார மரத்தை வசம்பு சேருஞ் சுக்குடனே கோட்டந் திப்பிலி
பூவுளோரென் மிளகு மருந்தெல்லாம் பொருந்த தற் சமன் கொண்டிடித்துப் பின்
மேவும் நீரிரு நாழியுங் கூட்டியே மேவீராறு கழஞ்சிட்டுக் காச்சி
ஏகாவின் நீர் விழியாய் நாலொன்றுக்கியே கருதிக் கொள்ள வாத சுரமேகுமே.

11. வாத சுரத்தின் குணம் குடிநீர்:-

வாத சுரத்தின் குண முன்னோர் வகுத்த வன்ன முறை செய்ய
சீத மிகவு மதிகமாய் சிந்தை கலங்கி நெஞ்சு முறப்
போத வாளாலரிவ தெனச் சந்து குலைந்து பல நோவாம்
பேதமலமும் வறண்டு தாம் பெருகப் பொருமல் தோன்றிடுமே.

12. தோன்று முதரந்தனை நடுங்கத் துவைத்தாப் போலே ஷி வுறு நடுக்கம்
கான்றவுண்ட நெஞ்சது போல் கலித்த சத்தி அருவருப்போ
டென்ற விரவும் பகலுந் தானில்லை யிறக்கந் தாக முறுங்
கான் கை கால் கடுத் தழுன்று கூலஞ்சேர் தந்த முளைந்திடுமே.

13. உலையுங் கிழுப்பு மயிர்க் கூச்சு மொத்தே தாகங் குலைப்புடனே
கலைவுந் தெளிவாங் காந்தி யுண்டாங் கண்டா லிந்தக் குணந் தன்னை
விளையுஞ் சுரங்கள் தனக்கான மிக்க மருந்திது தெனவே தான்
பழைய பண்டிதர் முன்னோர் பகுத்த மருந்து செய்வாயே.

14. இதுவும் வாத சுர லெட்சணம்:-

தலை நொந்து மேலமுன்பு சந்து சந்தெல்லாம் நோகும்
வலமுந்தன் சிறுநீர் கட்டி வயறு நொந்திளைய ஊறும்
--ய் வித்த உடலமைக்கு காட்சியு மிரவுந் தோன்றில்
மலமுற்ற வாத ரோகங் கொண்டதோர் குறிப்புத் தானே.

குடிநீர்:-

15. சீந்தித் தண்டு விலாமிச்சம் வேர், புங்கம் வேர், முதக் காசு,
சுக்கு, நிலவேம்பு, இருவேலி வேர், பற்படாகம், கொத்தமல்லி, சிறுகாஞ்சொறி

ஒவ்வொன்று களஞ்சு நிறை இரு நாழி நீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். உப்புக் கூட்டி வென்னீரும் சோறு முண்ணவும்.

சீத சுரம் குளிர் சுரத்துக்கு:.

பேராமுட்டி, நிலவேம்பு, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், பருப்பு குடப்பாலை வேர், சுக்கு விராகன், திப்பிலி விராகன் கஞ்சாங் கோரை; விராகன் விஷ்ணு கிராந்தி விராகன், துளசி விராகன், இது வெல்லாங் கூட்டி இரண்டு படி தன்னீரில் காய்ச்சி அரைப் படியான வாறே இறக்கி மூன்று நாள்க் கொடுக்கவும். சுரம் விடும். பத்தியம் கைப்பு; புளி தவிர்க்கவும். வென்னீரும் சோறும் ஐந்து நாள் உண்ணவும்.

பித்த சுரக் குடிநீர்:-

நாறுஞ் சீரக மிந்துப்பு நல்ல திப்பிலி யசமோதகம்
வீசுங் கரிய சீரகமும் வேர்க் கொம்போ றொன்றிரு கழஞ்சு
கூறுபடவே பொடியாக்கிச் கொண்டாற்றிவன சரீரமாம்
ஊறும் படுத்தும் பித்த சுரம் மூல ரோக மொதுங்கிடுமே.

இதுவும் பித்த சுரத்துக்கு கசாயம்:-

ஏல மதி மதுர மிருவேலியின் வேர் யிலாமிச்சங்
கோறுங் கலைக் கொம்பிலுப்பைப் பூ கூடிய நன்னரி பேய்ப்புடோல்
அகிலாடா தோடை யிலை சீந்தில் பற்படலஞ் சமனுளித்துக்
கோலமுள பன்னிரு கழஞ்சு நீரிலிட்டுக் காச்சிக் கொள்ளீரே.

வாத சீத சுர கசாயம்:-

பேராமுட்டி யிந்துப்பு பெருத்த சுக்கு வெள்ளி
யாறு நார்த்தையான நொச்சி யிலந்தை யிலை
சேரக் சரியா யிருநாழி நீரில் காச்சி யருந்து வீராய்
பார வாத சீத சுரம் பாறிப் போகுங் கண்டீரே.

தேவதாரம் பற்படாகம் சிறந்த முத்தங் கடுக்காய் சுக்கும்
தாகுங் கண்டங் கத்திரி யளகார் கோஷ்டம் குமிள் வேரும்
மேவதாகும் சிறு தேக்கும் விரவிக் காச்சி யெட்டொன்றுய்
நாவதாரக் குடிப்பீராய் நண்ணிய சுரமு மடையாதே.

இதுவும் அதுக்குச் சேர்ந்தது: குளிர் சுரத்துக்குக் கசாயம்:-

கோட்டந் திப்பிலி கண்டங் கால் கொள்ளுஞ் சிறு தேக்கு சுக்கு
வாட்டமில்லா நிலவேம்பு வன்மை முத்தக் காஞ்சொறி வே
நீட்டுஞ் சீந்தி பற்படாகம் நிறையாய்க் காச்சி யருந்து வீராய்
நாட்ட மன்றிக் குளிர் சுரமும் அகன்றே போகுங் கண்டீரே.

ஆடாதோடை அது சுவலை அரியாகுஞ் சிறுவழுதலை வேர்
பாடாதிலங்கும் பற்படாகம் பங்கம் பாலை வேர்க் கொம்பு
ஏடா சந்தனம் நன்னரி சேரக் கூட்டி யிவை காச்சிக்
கோடா வடித்து குடித்தாரே குளிர மிகவுங் கெடுத்தாரே.

சீட்டா சீந்தில் நிலவேம்பு சிறுகாஞ் சோறி கொத்தமல்லி
வட்டத் திருப்பி மணி முத்தம் மகிழ்ந்து பூசு மிலாமிச்சம்
பட்டத் திசையு பற்படாகம் பாகஞ் சுக்கோடிரு வேலி
வெட்டிக் கூட்டி யமுர்தாதி வெப்புங் குளிரு மாற்றிடுமே.

வாத சுரக் குணம் மருந்து:-

பெரிய வாகை பெருங் குமிள் பாதிரை பாரென முன்
வரு சதாவேலி கூறுவளை வேர் நன்னரி நெருஞ்சி நல்ப் பேய்ப்புடல்
ஊறெனச் சீந்திலுடன் பேராமட்டியே.

ஏராருஞ் சித்த மல்லி போமல்லி என்டிசை என் சித்த மட்டி ஆடாதோடை
காராருங் கண்டங் கத்திரி முத்தக் காசு கருது மிலாமிச்சமுடன் அவிலி தாலும்
சீராருஞ் செங்கழு நீர் கிழங்கு சிறுகுறிஞ்சில் சிறந்த சிறுகாஞ் சொறி வேருங் கூட்டி
பேரான காவளை வேர் சாறணை வேருடனே பேவுரகென் கடைச் சரக்குப் பேசுங் காலே.

தேவதார மரத்தை வசம்பு சேரச் சேருஞ் சுக்குடனே கோட்டந் திப்பிலி
பூவுளோ ரெண் மிளகு மருந் தெல்லாம் பொருந்தச் சமன் கொண்டிடித்துப் பின்னே
வேவு நீர் நாழியுங் கூட்டி யேமே வீராறு களஞ்சிட்டுக் காச்சி
ஏகாவின்னோர் விழியாய் நாலொன்றுக்கிக் குருதிக் கொள்ள வாத சுர மேகுமே.

பித்த சுரக் குடிநீர்:-

ஏல மதிமதுரம் யிருவேலியின் வேர் யிலாமிச்சங் கலைக் கொம்பிலுப்
பூக் கொடிய நன்னரி பேய்ப்புடோல் ஆகிலாடா தோடை யிலை சீந்தில் பற்படாஞ் சமனிழித்து
கோல முள பன்னிரு கழஞ்சு நீரில் காச்சிக் கொள்ளீரே.

சீந்தி தண்டு கொடிவேலி சிறுகாஞ்சொறி பற்படாகம்
வாய்ந்த முத்தங் கொத்தமல்லி வட்டத் திருப்பி நிலவேம்பு
சேர்ந்த பதத்தில் யெட்டொன்றாய்ச் சிறுகக் காச்சிப் பருகுவீராய்
ஏந்த வெதுப்பை விடுவிக்கும் வீடாதாகில் சொன்னோம் விதியிதுவே.

__கசாயம்:-__

பங்கம் பாளை வேர்க் கொம்பு பருத்த முத்தக் காசுடனே
அங்கஞ் சேரறுகில் வேரு மடவே காச்சிக் குடிப்பீராய்ப்
பொங்கக் கழியுஞ் சுர பித்தம் பொல்லா நாற்றமது விட்டுச்
சங்கைப் படாலே மீளும் தப்பா தென்று சாத்தினரே.

சிறு தேக்குப் பற்படாக முத்தக் காசு சீந்தி லொன்று நன்னாரி சிறுகாஞ் சொறி
நறு நாற்றமுள்ள தேவதாரம் கோட்டம் நலந் திகழும் பேய்ப்புடல் தன்னுடனே சுக்கு
எறி காத்துப் படாதிடத் திருந்து காச்சி யிருபோது மின்னீரைப் பருகி விட்டால்
குறியாமல் மூன்று நாளைக் குள்ளே தான் கூறியதோர் நாலு நாளைக் குள்ளேதான்.

பறியாத பழ வெதுப்பும் பாறிப் போமே. பண்டை யோரர் புதுமை பகருங் காலே.

ஈச்சங் குருத்து நெய்தல் கிழங்கு யிருவேலியின் வேரியல்வுடனே
வாச்ச மதுரம் வேடா வெள்ளி லோத்திரம் மருவுஞ் சித்த மட்டியுடன்
சேர்த்துங் கமலஞ் சந்தனமும் சேரு மிலுப்பைப் பவுடனே
பேச்சு மறந்த சுரந் தனக்கு பேணிக் குடிப்பீர் பெரியோரே.

இப்படி நீர்க் கசாயங் தேறு மிடு புடோல் முத்தக் காசு பற்படாகஞ் சீந்தித் தண்டு
பைய்யப் பய்ய வெந்த அப்பினீர் தேனினோடளாவினு றெனக் கேட்டு
வெப்பினர் குளிரினரை வினவினர் விடை கொண்டோரே.

__தோஷ சுரத்துக்கு குடிநீர் கசாயம்:-__

தூதுவளையின் புறலாடா தோடை தூய்ய சிறுகாஞ் சொறி முத்தக் காசு
யேத மில்லாக் கத்தாழை கண்டங் கத்திரி யேற்ற சிறு வழுதலை சுக்கு யிடித்துக் கூட்டி
பேதமறப் பன்னிரண்டு கழஞ்சு கூட்டிப் பெருகு புனலிரு நாழி உரியாய்க் காச்சி
ஓதிய திப்பிலிப் பொடி தேன் தூவிக் கொள்ளில் ஓடி விடும் சேற்பமத்தின் வகைகள்
தானே.

__தோஷ சுரக் குடிநீர் கசாயம்:-__

கடுக்காய் சீராக நன்னாரி முத்தக் காசு காசினி யென் பேய்ப்புடோல் பேராமட்டி
வளக்கமாங் குவளை வேர் குளவிக் கூடு வாத்திடு செவ்வள்ளிக் கொடி செங்கழுநீர்
மூலம்
கழல்ப் பொருந்து நீர் நாழிக் கறு கழஞ்சு உழக்காய்க் காச்சி யிஞ்சி சாறுழக்குடனே
கூட்டித் தினமுங் கொள்ள
நாலு முடைந்தோடுந் தோஷ சுரந்தானே.

__பித்த தோஷக் குண மருந்து:-__

தூய்யசிறுகாஞ் சொறி வேர் வட்டத் திருப்பி வேர் தூதுவளை நன்னாரி வேர்
எய்யுமாடா தோடை சிறுவழுதலையின் வேரினிய கண்டங் கத்திரி வேர்
மெய்யுலாவி நெல்லி முள்ளி சுக்கொடு கடுக்காய் மிகு தான்றி கச்சாசசு நீரில்
உய்யவே தேனொடு திப்பிலி அளவாவிக் கொள்ளோடுந் திரி தோஷ குணமே.

__சத்தி தோஷ சுர குண மருந்து:-__

முருங்கைப் பட்டை சுக்கு, மிளகு, வெள்வெங்காயம் இந்த நாலு மருந்தும்
அரைத்து நாக்கில் தடவி உள்ளுக்குக் கொடுக்கவும்.

(வேறு)

கொத்தமல்லி விலாமிச்சம் வேர், பேய்ப்புடோல் நெல்ப் பொரி
புச்சைப் பயறு இது ஐந்துங் கசாயங் காச்சிக் கொடுக்கவும் தீரும்.

__தோஷத்துக்கு சன்னிக்கு அமரத்துக்கு:-__

முடக் கொத்தான் விரை, மிளகு அகத்தி விரை யிவை மூன்றும் சமன் கூட்டி
வெள்ளாவிப் புச்சாறு விட்டரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு தோஷத்துக்கு
சன்னிக்கு அமரத்துக்கு முலைப்பால் உரைத்துக் கண்ணுக்குப் போடவும். தீரும்.
பேய்ச் சுரை தூளாக்கி அந் நாக்கில் தடவ உடனே பேசும்.

__தலை கிறுகிறுப்புக்கு மருந்து:-__

பேய்ப்புடல், முத்தக்காசு, முசுமுசுக்கை பாசிப் பயறு வில்வலைவேர்
சுக்கு இந்த வகை தண்ணீரில் போட்டுக் காய்ச்சி ஆழாக்காக வத்தின பிறகு
சர்க்கரை போட்டு நாலு நாளாறு நாள் காலமே கொடுக்கவும்.

__சுரம் தோஷம், சுவாச காசம் இந்த வகைக்கு கசாயம்:-__

கண்டங்கத்திரி யிலை, செம்முள்ளி யிலை சங்கிலை, கையாந்தகரை
யிலை வேலிப் பருத்தி யிலை இந்த வகை யெட்டும் வகை யொன்றுக்கு ஒரு பிடி
யிலையாகப் புழுப் பார்த்து யிடித்துப் பிட்டவியலாக அவித்து அந்தச் சாத்தை
யிறுத்துக் கொண்டு யிதில் ஐந்து திப்பிலியும், பத்து மிளகும் பொடி பண்ணிச்

சாத்தில் கலந்து கொடுக்கவும். இந்தப் படி இரண்டு நேரமும் கொடுக்கவும். சன்னி தோஷந் தீரும்.

வாய் பேசாதவர்களுக்கு மருந்து:-

பேய்க் குமட்டி வேர் அரைத்து நாக்கைப் பல்லுக்கும் தேய்க்கவும் பேசும். நெட்டைப் பேய் மிரட்டிச் சாறு ஒரு காசத்தனை சாறு கொடுக்கவும் பேசும். கை கண்டது.

நஞ்சு முறிய:-நஞ்சுக் காச்சல் தோஷ குணத்துக்கு மருந்து:-

நீலிவேர், துத்தி வேர், ஊஞ்சல் பட்டை, மலைதாங்கி வேர் பெரு நஞ்சுத் தழை, சிறுதஞ்சுத் தழை, நஞ்சு விரை, களச்சிப் பருப்பு, மஞ்சள், சுண்டையிலை சின்னியிலை, களச்சி வேர் இது வெல்லாம் சமன் நருக்கிச் சாறு பிழிந்து பாதி பிரித்து சட்டி காய வைத்துத் தாளிச்சுத் தாளியாத பாதியுங் கூட்டி மேல் பொடி சுத்த திப்பிலி பொடித்துப் போட்டுக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும் புளி, கசப்பு விடவும். கை கண்டது.

தோஷ குணத்துக்கு மருந்து:-

அக்கிராகாரம், ஏலம், கலைக் கொம்பு, உத்திராட்சம், அதிமதுரம் திப்பிலி, நல்ல சீரகம், கிராம்பு, பவளம், சுக்கு, திப்பிலி மூலம், பொருமி வேர், சந்தனம், பச்சைக் கற்பூரம், தேத்தாங் கொட்டை, வெள்ளி, பொன், முத்து முலைப்பால் விட்டரைத்து ஒரு நாளைக்கு நாலு விசை நாக்கில் தேய்க்கவும். கண்ணில் தோஷ கலிக்கம் போடவும். ஆடாதோடை வேக வைத்துக் கொப்பளிக்கவும். தீரும் கண்ட விஷ்தம் கை கண்டது.

சகல தோஷத்துக்கும் தோஷ விரேசனம்:-

களச்சிக்காய் சுட்டு வெந்த பிறகு அந்த மேலோட்டுக் கரியை நாக்கில் தேய்த்துக் கொப்பளித்துப் போட்டு உள்ப் பருப்பு அரைத்து வென்னீரில் கொடுக்கவும் தீரும்.

சன்னி சுரத்துக்கு கசாயம்:-

ஈஞ்ச இலந்தையிலை, நன்னாரி, சீந்தில் தண்டு, யிருவிலாமிச்சம் வேர், பூகைம்,

வந்ததொரு பேய்ப்புடல் முத்தக்காசு கன் கோட்டஞ் சுக்குடனே யாடாதோடை
நலம் புகழு முலைப் பாலிஞ்சிச் சாறு சமமு யிரு நாழி நீர் விட்டு
உலந்த தொரு திப்பிலி மென் பொடியே தூவி கலந்து கொள்ளச் சுரம் ஒழிந்து போ(

கத்தாழஞ் சருகு வேப்பந் தண்டு கண்டங் கத்திரி வேர் ***
உற்றன கற்கண்டு கடுகுரோகணியும் சீறுங் கிரும்புடனே
வேற்றுரு முந்திரிகைப் பழமுங் கூட்டிப் பிசைந்து வேற்றுவுழக்காய்
வற்று முலைப்பால் முக்குங் கூட்டிக் கொள்ள வன்னமான சன்னி சுரந் தீருந்தானே.

சத்தி சன்னி சுரத்துக் கசாயம்:-

சொல்ப் பெரிய ஆடாதோடை யிலை சிறுவழுதிலை தூதுவளை நன்னாரி வேர்
கற்புடைய நற்சித்த மட்டி வேர் கலந்த சுக்கு முத்தக் காசுடனே
பற்படாகம் சந்தன மிளப்பைப் புவுடனிவைகள் பன்னிரு கழஞ்சு கொண்டே
பற்பு நீருமிரு நாழி யெட்டொன்றுய்ப் பேசிக் கொள்ளச் சத்தி கெடுமே.

சத்தி சன்னி குணமாம். கை கண்டது. (இடையில் நோய் குணங்கள் விடப்பட்டன

பித்த சேத்தும சுர வதிசாரத்துக்கு மருந்து:-

முந்திரிகைப் பழம், சீந்தி தண்டு, பற்படாகம், முத்தக் காசு, கடுகு ரோகணி இவை சரி சமமாக நிறுத்துக் கொண்டு பனிரெண்டு கழஞ்சு யிரு நாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சிக் கொன்றைப் பழத்தின் களிம்பிழைத்துக் காலமே கொடுக்கவும். வாதமுண்டாகில் சுரமுந் தீரும். கண்டங்கத்திரி வேர், தூதுவளை வேர், மிளகறணை வேர், வாகைப் பட்டை தேற்றுங் கொட்டை, திரிகடுகு கூட்டி இருநாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சி திப்பிலி மேற்பொடி தூவிக் கொடுக்கச் சேற்பம சுரந் தீரும். சுக்கு கடுக்காய், முத்தக்காசு, வசம்பு, அதிவிடையம், தேவதாரம், பனிரெண்டு கழஞ்சு யிருநாழி நீர் விட்டு உழக்காய்க் காய்ச்சிக் கொடுக்கவும். அதிசார சுரந் தீரும்.

ஆடாதோடை நிலவேம்பு ஆனை கோட்ட முத்தமுடன்
பாடாதிலங்கும் பற்படாகம் பருத்த சீந்தி பேய்ப்புடோல்
கோடா கெத்த மல்லியுடன் குலவு தேக்கு மிக்க கூட்டி
கோடாதிரு நாழி தாறுழக்காய்ச் செலுத்தத் தீரும் சன்னி சுரம்.

பேளுமுட்டி யிந்துப்பு பெருத்த சுக்கு வெள்ளுளியும்
யாற நார்த்தை யான நொச்சில் யிலந்தை யிலை சேரச்
யிரு நாழி நீரில்க் காச்சி அருந்து வீராய்
பாரா வாத சீத சுரம் பாறிப் போகுங் கண்டீரே.

தேவதாரம் பற்படாகம் சிறந்த முத்தங் கடுக்காய் சுக்குந் தாகுங் கண்டங்கத்திரி -
அழகார் கோஷ்டங் குமிழ் வேரும் மேவதாகும் சிறு தேக்கு விரவிக் காச்சி
யெட்டொன்றாய் நாவதாரக் குடிப்பீராய் யன்னிருஞ் சுரமு மடையாதே.

வில்வத் வேர், கொத்தமல்லி, சித்தாமுட்டி வேர், நெல்ப் பொரி பாசிப் பயறு சுக்கு யிவை யெல்லா ஒரு படி தண்ணீரில் நருக்கிப் போட்டு ஆழாக்காய் காய்ச்சி யிறுத்துக் கொண்டு இதில் சர்க்கரை போட்டுக் கொடுக்கவும். தாகந் தீரும். காட்டுக் கருணைக் கிழங்கு, மருள் மஞ்சிக் கிழங்கு இது நாலும் மேல்த் தோல் சீவிப் போட்டு ஒரு நேரத்துக்கு ஒவ்வொரு வகைக்கு / இரண்டு விராகனிடை இந்த நாலு வகையுமா எட்டு விராகனிடை அரைத்து புழுங்கலரிசி ஒரு சேரை நனையப் போட்டு அரைத்து மருந்துங் கூட்டி அடை தட்டிச் சுட்டுத் தின்னவும் தீரும்.

<u>கெற்பத்தின் மேல் வீக்கத்துக்கு</u>:- 29.4.64.

அதிமதுரம், நெய்தல் கிழங்கு, பாலிலரைத்து நெய் கலந்து கொ குடிக்கவும் தீரும். சாறணை வேரும், இஞ்சித் தண்ணீரும் பாலுங் கூட்டி ராத்திரி குடிக்கத் தீரும். கெற்பத்தின் மேல் வீக்கம் குடல் பிறண்டு குன்ம ரோகமானல் யிதுக்கு மருந்து:-

சாறணை வேர், தண்ணீரில் வேகக் காய்ச்சி அந்தத்தண்ணீரில் கருப்புக் கட்டியும் நெய்யுங் கலந்து கொடுக்கத் தீரும்.

<u>கெற்பத்தின் மேல் சுரத்துக்கு மருந்து</u>:-

நாகப்பூ, நல்ல பாலை வேர், நன்னாரி வேர், மலைதாங்கி வேர் இருவேலி வேர், முத்தக் காசு இவை ஒவ்வொன்று ஒரு பிடி கூட்டிக் கசாயம் வைத்து மூன்று நாள் கொடுக்கவும் தீரும்.

<u>கெற்பத்தின் மேல் வீக்கத்துக்கு மருந்து</u>:-

சித்தாமுட்டி, வட்டத் திருப்பி, சுக்கு, முத்தக் காசு இவை சரி சமன் கசாயம் பண்ணிக் கொள்ளவும். கழிச்சல் போம்.

(வேறு)

கடுக்காய், வசம்பு, சிறுதேக்கு, சுக்கு, கடுகுரோகணி இது ஐந்தும் தண்ணீரில் காய்ச்சி கருப்புட்டி கலந்து கொடுக்கத் தீரும்.

(வேறு)

<u>கெற்பத்தின் மேல் வாந்திக்கு மருந்து</u>:-

வில்லை வேர், விலாமிச்சம் வேர், நெல்ப் பொரி இவை சமன் காய்ச்சிக் குடிக்கவுந் தீரும்.

<u>பிள்ளைப் பெற்றதின் மேல் சுரத்துககுட</u>.-

பிள்ளைப் பெற்ற தாய் தனக்கு பெருத்த சுரமுந் தலை, வலியும் உள்ள குழலை கபந் திரையும் உற்ற கழிச்சலுடன் பொருமல் மெள்ளக் கொடுத்த உள் மூசசு விழியுந் தெளிவு கொண்டிடில் துள்ளித் துடித்து வாய் காய்ந்து தூக்கியு யிரைப் பறந்திடுஅம.

இதுக்கு மருத்துவாதிக் குளிகை; கொடுககவும்.

<u>சந்தனாதி என்ணை</u>:

இந்த என்ணை 15-ம் ஏட்டில் பார்க்கவும்.

<u>விஷ சன்னி சுர மருந்து</u>:-

இலந்தையிலை, நன்னாரி யிலை வேர், இருவேலி விலாமிச்சம் எழில்
நாகப்பூ, கலந்தொரு பேய்ப்புடோல் முத்தக் காசு, கன கோஷ்டஞ் சுக்கு
டனே யாடாதோடை தலம் புகழு முலைப்பா லெலுமிச்சஞ் சாறுந் தற் சமனாய்க்
குடி நீருஞ் சரியாய்க் கூட்டி உலந்த தொரு திப்பிலி மென் பொடியே தூவி
யுகந்து கொள்ளச் சன்னி சுர மோடுந் தானே,

கற்றாஞ் சருகு வேப்பந் தண்டு கண்டங் கத்திரி யதன் வேர்
யுற்றன கற்கண்டு கடுகு ரோகணியும் நீரிறு கருஞ் சீரும் பூவிறுடனே
பெற்றரு முந்திரிகையின் பழங் கூட்டிப் பிசைந்த சாறொரு கூறாய்
வற்று முலைப்பால் முக்கூறு கூட்டிக் கொள்ள மாறுத சன்னி சுரம் ஓடும்.

<u>வயத்துக் கழிச்சலுக்கு மருந்து</u>:-

ஒரு எலுமிச்சம் பழம் சற்றே மேலே அறுத்துப் போட்டு சத்தே தண்ணீர் பிழிந்து போட்டு ஒரு விராகனிடை பச்சை வெட்டுக் கறுப்பு மூணப் பகுந்து ஒரு பங்கு காய்க் குள்ளே வைத்து நாயுருவி யிலை ... யிலை யிது இரண்டுங் கசக்கி நாலு துளி சாறு காய்க்குள்ளே புளிந்து தீயிலே வைத்துக் கோதி கிழம்பின பிறகு உடனே எடுத்துச் சத்து வித விதென்று இருக்கிற போது எடுத்து ஆற விட்டு பிறகும் அப்படிப் புடமிட்டு எடுத்து ஆற விட்டு பின்னையும் புடமிட்டு எடுத்துக் கையிலே பிழிந்து உள்ளுக்குக் கொள்ளவும். இப்படி மூன்று நாள் பத்தியம் தயிரில் கல்லுக் காயப் போட்டு சோற்றில் கூட்டி உண்ணவும். சுறாய் மீன் கூட்டலாம். கை கண்ட விதி. தப்பாது.

ஆதக வாய்வுக்கு சாதிபத்திரி சுண்டி :-

ஏலரிசி, திரிபாலை, யரிசி வாய் விளங்கம், திப்பிலி, மிளகு, சீரகம், ஓமம், கய்யாந்தகரைப் பொடி, கிராம்பு, வகைக்கு பலம்.½, சதகுப்பை பலம்.க, கொத்தமல்லி பலம்.3/4, சுக்கு பலம்.உ, சீனி சர்க்கரை பலம்.12½ கடைச் சரக்கு மாத்திரம் யிடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு ஒரு படி யாவின் பாலைக் குறுகக் காய்ச்சி சர்க்கரையைப் போட்டுப் பாகு பதமாய்க் காய்ச்சி இந்தக் கடைச் சரக்குத் தூள் பேட்டு இருப்புக் கறண்டியாலே கிண்டி லேகியமே போலே மெழுகு பதத்தில் இறக்கிப் பாக்குப் பிரமானம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு காலை, மாலை நேரத்துக்கு ஒரு உருண்டை இப்படி பதினைந்து நாள்க் கொள்ளவும்.

உருண்டை தின்னக் கசாயம் :-

சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், சித்திர மூலம், எருக்கம் வேர் பட்டை, கண்டங்கத்திரி சமூலம், முசுகாவேளை வேர், சாறணை வேர் இந்த ஒன்பதுங் வகை ஒன்றுக்கு பலமாகக் கூட்டிப் பரும்படியாகத் தானே யிடித்து வைத்துக் கொண்டு ஒரு வெருகடி தூள் சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் கால் படியாகக் காய்ச்சி ஒரு உருண்டை தின்று இந்த கசாயமுங் குடிக்கவும். கரிய போளமும் சுத்தி பசுவின் நெய் யில் போட்டு பொங்கிறுப் போலே யெடுத்து தூள் பண்ணி மருந்திலே கூட்டவும். இதுக்கு தீரும் வியாதி ஆதக வாய்வு, சலக் கிரணி ஆதகப் பொருமல் நளிகை கால் எரிவு, குத்துக் கடுப்பு, விஷபாகம், அக்கினி மந்தம், வயிற்றில் கடி, வயிற்றில் கெண்டை ஏறுகிறப் போல ஏறுகிறதும் அடி வயிற்றில் கிடக்கிற அம்மிக் குளவி போலே யிருக்கிற ஆதக வாய்வினாலே வந்த வியாதிகள் ஆதகத்தில் வந்த விஷபாகம், பாண்டு எல்லாந் தீரும். பத்தியம் உப்பு வறுத்து நச்சுப்புக் கூட்டவும். ஒத் கை கண்டது. பசுவின் பால், துவரைப் பருப்பு, முருங்கையிலை காய் ஆகும். பின்னை யொன்றுமாகாது.

வயற்றுக் கடுப்புக்கு மருந்து :-

மாம்பட்டை, சம்பு, நாவல் பட்டை, நெல்லிக் பட்டை, சிவ்வைப் பட்டை, மருதம் பட்டை, அத்திப் பட்டை, நாவிலிப் பட்டை, அரசம் பட்டை, வேப்பூலாம் பட்டை இந்தப் பட்டை ஒன்பதும் சமனாக எடுத்துக் கொண்டு இடித்து நாலு வாழைப்பூ மேல்ச் சிவப்பெல்லாம் உரிச்சு உள்ளே இருக்கிற வெள்ளைப் பூ உரலில் வைத்து ரசம் பிழிந்து கொண்டு தென்னங் குரும்பையாலும் உப்பிள நீராலும் கொண்டு வந்து யிடித்து ரசம் பிழிந்து இந்த இரண்டு ரசமும் முன்னிடித்த பட்டையும் கூடக் கலந்து பிழிந்து போட்டு ரெண்டு வள்ளத் தண்ணீர் மாத்திரம் வெய்யிலிலே முப்பது நாழிகை இருந்த பிறகு அடுப்பில் வைத்துத் தீ யெரித்துக் காய்ச்சவும். நலக் கோவைப் பிஞ்சாலும் கல்க் கோவைப் பிஞ்சாலும் இந்த இரண்டி லொன்று முப்பது பிஞ்சு கொண்டு வந்து நேக அரைத்து முன் கூட்டின ரச மெல்லாம் ஒரு சட்டியில் வறுத்துக் கொண்டு அத்திக் கொழுந்து எலுமிச்சங் காயளவு அரைத்து இந்த இரண்டு மருந்தும் சாத்தோடே கலந்து கருஞ்சீரகம் தட்டிப் போடவும். திருவிக் காய்ச்சி ராகிக் கூழ் நிறமானால் இறக்கிக் கொள்ளவும்.

கடைச் சரக்கு :- சாதிக்காய்.க, கிராம்பு, நல்ல சீரகம், ஏலரிசி, காவிக் கல்லு, செண்பகப்பூ, குங்குமப்பூ, ஓமம், காசுக் கட்டி ஆகக் கடைச் சரக்கு 11 சாதிபத்திரி, சாதிக்காய் நின்ற நிறை நிறுத்துக் கொண்டு ஒரு மாதளங்காய் பெருங் காய்மீ கொண்டு வந்து நடுவே சரியாய் அறுத்து உள்ளே யிருக்கிற ஊனெல்லா மெடுத்துப் போட்டுச் சடைக் கஞ்சா யிலை கொண்டு வந்து இந்த பிளப்பிலும் அடைத்து கூடப் பொருதி ரெண்டும் ஒரு கோவிலே ஊடுறவக் குத்திச் செம்மண் கொண்டு பொதிந்து தீயிலே சுட்டு அந்த மண் கருகி உதிர்ந்து போனால் மண்ணைத் தட்டிப் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு தென்னங் குரும்பை ரசமாலும் உப்பிள நீர் ரசமாலும் விட்டு இந்தக் காயுங் கடைச் சரக்கும் அரைத்து முன் காய்ச்சி யிருக்கிற மருந்தோடே கலக்கி இலந்தைக் காயளவு உருண்டை செய்து அநுபானம் வயிற்றுக் கடுப்புக்கு தயிரில் கொடுக்கவும். காச்சல், மேல்க் கடுப்புக்கு வெந்நீரில் கொடுக்க வும். மூலக் கடுப்புக்கு முசுமுசுக்கைச் சாத்தில் கொடுக்கவும். வயிற்றுக் கடுக்புக் கெல்லாம் ஆகும். கை கண்ட சித்தி. புளியாகாது.

வெறு வயறு கடுப்புக்கும் மருந்து :-

ஸ்ரீ

பனிச்சை சுத்தி மலைதாங்கி பகரும் பாக்கு வறப்புலா
முனித் தகடு கோட்தி விடையம் முஷிந்த நற்சரகம் அசமோதகம்
தனித்த பிறகு ஒரொன்று தானே கழஞ்சு கொண்டு நெய்யில்
கனிக்க வெதுப்பிக் கொள்வீராய்க் கடுப்பு மிகவு மகன்றிடுமே.

வயிற்றுக் கடுப்புக்கு மருந்து :-

நற்சீரகத்தை ஒட்டிலே வெதுப்பி பொடி செய்து சர்க்கரையும் ரெண்டு கழஞ்சு சிற்றாமணக்கெண்ணெயில் மூன்று நாள் தின்னவும் வயற்றுக் கடுப்புச் சகலமுந் தீரும்.

ரத்தம் விழுந்தால் கஞ்சா யிலையும் தும்பை யிலையும் அரைத்து நல்லெண்ணெயில் மூன்று நாள் கொடுக்கவும். தாகமானால் புங்கங் கொழுந்து வேப்பங் கொழுந்து வாழைச் சருகு, வசம்பு, யிது கெல்லரியில் வேக வைத்து யிறுத்துத் தண்ணீர் கொடுக்கவும். கை கண்டது.

தழை கொண்டு வந்து எருமைத் தயிரிலரைத்து கொடுக்கவும்.

(வேறு)

பருத்திக்காய் கொண்டு வந்து அரைத்துத் தயிரில் கொடுக்கவும். கை கண்டது.

வயறு கடுப்புக்கு மருந்து:-

எலுமிச்சம் பழம் கொண்டு வந்து அறுத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும்.

(வேறு)

கடுப் படக்கி விரை கொண்டு வந்து அரைத்து காராட்டுப் பாலில் கொடுக்கவும். பசிரி மேல் கடுப்புச் சகல கடுப்புந் தீரும். கை கண்டது.

ரெத்தமாய் வயறெடுத்தால் மருந்து:-

நெல்லியிலை கொண்டு வந்து எருமை மோரில் துவைத்துக் கொடுக்கவும். கை கண்டது.

குண்டி யக்கரம் ரெத்தமா யெடுக்கிறதுக்கு மருந்து:-

முசுமுசுக்கை கொண்டு வந்து யீர வெங்காய மிட்டுத் துவைத்து யிள வென்னீரில் பிசைந்து கொடுக்கவும். நில்லா விட்டால் ஈர வெங்காயம் துவைத்துத் தயிரில் பிசைந்து பிளிந்து கொடுக்கவும் தீரும். கை கண்டது.

காச்சல் மேல் ரெத்த மெடுத்தால் வாயேல ரெத்த மெடுத்தால் மருந்து:-

ஆவாரம் பட்டை கொண்டு வந்து சட்டியில் போட்டு அரைப்படி தண்ணீர் விட்டு ஆழாக்காய்க் காய்ச்சி யிறுத்துக் கொடுக்கவும். கை கண்டது.

(வேறு)

ஆவாரங் காயில் விரை யரைத்து பருத்திக் காயளவ பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்கவும். கை கண்டது.

சுரத்துக்கும், சகல வியாதிக்கும் சகல விப்புருதிக்கும் சகல சிலந்திக்கும் மாபலத் தயிலம்:-

சித்தாமுட்டி, சிறுகாஞ்சொறி, சீந்தி தண்டு சிறவழுதலை வேர், தூதுவளை வேர், விஷ்ணு கிரந்தி வேர், சீதேவியார் வேர், செங்கழுநீர் வேர், துளசி வேர், அறுகம் புல்லு, செப்பு நெருஞ்சி வேர், வில்லப் பத்திரி வேர், அமுக்கிருங் கிழங்கு, நத்தச் சூரி வேர், தும்பை வேர், வெட்டி வேர், ஆலம் பட்டை, முடக் கொத்தான் வேர், சிறு நெருஞ்சி வேர், வெத்திலைத் தண்டு, வெள்ளறுகு, செங்கத்தாரிப் பட்டை நன்னாரி வேர், கரியாங் கண்ணிச் சாறு உழக்கு எட்டிக் கொழுந்து, வேருகங் கிழங்கு, ஓரிலை மூவிலை, தென்னம் வேர் ஆக காட்டு மருந்து இருபத் தொன்பது இனிக் கடைச் சரக்கு கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, எட்டிக் கொட்டை, சித்தரத்தை, பேரரத்தை, கருஞ்சீரகம், நற்சரகம், கிராம்பு, சாதிக்காய், பச்சை வெட்டுக் குங்கிலியம், சுக்கு, மிளகு, திப்பிலி மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், ஓமம் உளுந்து ஏலம் யிலவங்கம் செங்கழநீர்க் கோஉட்டம், அதிவிடையம், அதிமதுரம், சதகுப்பை, மருள், மஞ்சி, மஞ்சிட்டி வேர், கற்பூரக் கிழங்கு, நற் சந்தனம், ரெத்தச் சந்தனம், தேவதாரம், அகில் கட்டை, செவியம், வெள்ளுள்ளி, வசம்பு, வெட்டிவேர், விலாமிச்சை வேர், நல்லெண்ணை ஒரு படி அதில் நாலிலொன்று விளக்கெண்ணை உழக்குப் பசுவின் நெய் உழக்கு வேப்பெண்ணை உழக்குப் பன்றி நெய் உழக்கு, புங்கம் பருப்பு பத்து எட்டிக் கொட்டை ஆக மருந்து 65 காட்டு மருந்து 29 கடைச் சரக்குகள் ஒவ்வொன்று நாலு விராகனிடை எல்லாம் நிறுத்துக் கொண்டு வெட்டு மருந்து எல்லா மிடித்து நாலு படி தண்ணீர் வார்த்து வெட்டு மருந்து போட்டுக் காய்ச்சிக் கசாயம் அரைப்படியாய்ச் சுண்டின் பிறகு இறக்கிக் கொண்டு கசாயம் சீலையில் வடித்துக் கொண்டு அந்தக் கசாயத்தில் இந்த ஐந்து எண்ணையும் வார்த்து நிறுத்திருக்கிற கடைச் சரக்குத் தண்ணீர் வார்த்தரைத்து எண்ணையில் போட்டுக் கை விடாமல் துளாவிக் காச்சி பதமாகிற அடையாளம் காஞ்ச எண்ணை ஒரு துளி தண்ணீரில் விட்டால் பணம் போலே வட்டமாம். அப்போ இறக்கிக் கொண்டு சீலை வடி கொண்டு வைத்துக் கொண்டு தினம் உச்சந் தலையிலே யிருந்து உள்ளங் கால் மட்டாகத் தயில மிட்டு ஒரு சாமத்துக்கு ஊற விட்டு பிறகு இலுப்பைப் புண்ணாக்கு யிட்டுத் தேய்த்து முழுகிப் போட்டு பத்தியம் கொள்ளவும். கைப்பு, புளி தவிர்க்கவும். கை கண்டது.

கெற்ப விப்புருதி மாதம் மூன்று நாள் வாரத்துக்கு மருந்து:-

நாயெரிஞ்சி சமூலமும் உதறி அத்தைச் சுட்டுச் சாம்பல் பண்ணி மூன்று எலுமிச்சம் பழம் சாறு பிழிந்து அந்தச் சாத்தில் ஒரு கொட்டைப் பாக்களவு சாம்பல் போட்டுக் கிண்டி உடனே கொடுக்கவும். இப்படி மூன்று நாளும் கொடுக்கவும். அவ பத்தியமாகாது.

கெற்ப விப்புருதி:-

தலை அழுக்கு வந்த மூன்று நாளும் இடது பக்கத்திலே வயறு வலிக்கும். அந்தப் பாரீசம் அசந்து போம்.

இதுக்கு மருந்து:- சர்க்கரை கால் படி எலுமிச்சம் ரசம் கால் படி அகத்திக் கொழுந்து பசுக் கொட்டின கொழுந்து சிந்தன் காயளவு அரைத்து இது மூன்றும்

தலை யழுக்கு வந்த மூன்று நாளும் கொடுக்கவும் வியாதி தீரும். பத்தியம் மூன்று நாள். கை கண்டது.

__கெற்ப சூலைக்கு மருந்து :-__

வெழுத் தீப்பட்டை மரமஞ்சள் மிளகு கடுகு பெருங்காயம்
அழுத்த முடைய சதகுப்பை அதிய யிலவங்கம் சீதாரி
வழுத்து மொளிய காராவின் பால் மருவும் சாதிக்காயுடனிஞ்சி
பருத்த கிராம்பு வசுவாசி பரு நேர்வாள மிரு கழஞ்சே.

காட்டு மருந்து நத்தைச் சூரி கொடுவேலி நல்ல கொள்ளை தூதளையும்
முத்தக் காசு ஆயில் வில்வம் முடக் கொத்தான் விருதில் குமுனும்
மத்துளம் வட்டத் திருப்பியுடன் வாகாய் வேர்கள் மூன்று பலம்
உத்து நருக்கி நாலு படி நீரில் காச்சி ஒரு படியாய்
படியாய்க் கசாயம் தனில் கற்கம் பரிந்தே அரைத்து அதின் பிறகு
அடவாம் சித்தா மணக்கெண்ணை அதிலிரு நாழி கச்சி வடித்த பின்பு
குடியா யெண்ணை கழஞ்சு நக்கில் கொள்ள வல்லீராய்
வடிவாம் கெற்ப ரோக மெல்லாம் வயறு கழிந்து வாய் விடுமே.

விடுமே மெத் தயிலைப்பாலுல் வேண்டு முருங்கையிலை காச்சிக்
கடுகக் குடிக்கில் சோற்றுடனே கலையுந் தீர்ந்து இலைப்பாறும்
விடுமே கெற்ப ரோக மெல்லாம் வெட்டு மிக வாகும்
நட்டம் புரியும் நாயகியே நல்லோர் பிழைக்கச் சொன்னோமே.

__வேறு மருந்து :-__

நாய் நாக்கு வடக்கு வேர் விழுதரைத்து நலம் பெறவே இளநீரில் குடிக்க நன்றாய்
மாயாதே புளியந் தழை தான் மாவிலுடனே மோர்க் கூழ்மா யருந்து
ஓயாமல் ஒடுப் பாயும் கெற்ப ரோகம் உதரத்தில் கிருமியா முள்ள தெல்லாம்
தூயதாய்க் கழிந்திருகில் போகு மென்று தொல்லுலகில் மாமுனிவர் சொன்னதாமே.

__இதுக்கு மருந்து : வேறு :-__

இலைக் கள்ளி வேர் வடக்கே போற வேர் பாக்களவு அரைத்து இளநீரில் கொடுக்கவும் இப்படி மூன்று நாள் கொடுக்கவும். குணமறிந்து ஒன்றை விட்டொரு நாள் கொடுக்கவும். வயறு பேதித்து மெத்த யிளைப்பாலுல் மோருஞ் சோறுங் கொடுக்கவும் நிற்கும். அல்லது மிளகு நீரும் சோறும் குடிக்கவும்.

__பெற மாட்டார்க்கு மருந்து :-__

வாழை குலை, சாச்சது மேற்கு வடக்கு கிழக்கு இந்த மூன்று திக்கிலும் குலை சாய்க்கிற போது விலாவில் வெடிச்சது பார்த்துக் கொண்டு வந்து உலத்திப் பொடி செய்து வைத்துக் கொண்டு அந்தப் பொடி கொஞ்சம் அரைத்து வென்னீரில் கொடுக்கவும். பிள்ளை பிறந்தவுடனே அந்த மருந்து அடி வயிற்றிலே இருந்து மேலே யேத்தித் தடவவும். இல்லா விட்டால் குடல் வரும். வாழை வடக்கே குலை தள்ளினது வேணும். அதுவும் விலாவிலே வெடித்த அதின் காய் வேணும்.

__பிள்ளையுண்டாக மருந்து :-__

கடுக்காய் பலம். 5, மிளகு பலம். 4, சீரகம் பலம். $\frac{1}{2}$, திப்பிலி பலம் $\frac{1}{4}$, சிறுமூலகம் பலம். 3, சுக்கு பலம். 6 அவக்காரம் பலம். உ, இதுகளெல்லாம் பசுவின் நெய் படி இரண்டில் வேக வைத்து பதத்தில் வடித்து ஞாயிற்றுக் கிழமை நாள் தின்னவும். இப்படி நாற்பத்தெட்டு நாள் தின்னவும். பத்தியம் கார்ப்பு, புளி தவிர்க்கவிர்க்கவும் ---- தவிர்க்கவும். பிள்ளை யுண்டாம். திட்டாந்திரம் கை கண்டது.

__மடி வாதத்துக்கு மருந்து :-__

மூன்று வட்டுப் பனங் கருப்புட்டி சுக்கு அரைத்து விழுதும், சின்ன சிந்தன் காயளவு மிளகு அம்மருவாதி கடுகு, அம்மருவாதி நல்ல சீரகம் அம்மருவாதி புளி அம் மருவாதி நெய் விழுது ஒரு குத்து நெய் ஒரு வட்டுக் கருப்பட்டி கூட்டிச் சாரித்து அத்தோடே கொழிஞ்சிக் கொழுந்து சிந்தன் காய் மருவாதிக் கூடக் கூட்டி உள்ளுக்கு எல்லாம் கொள்ளவும். இப்படி மூன்று நாளைக்கு வெவ்வேறே கூட்டிக் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் உப்பு, துவரைப் பருப்பு, நெய் ஆகும். புளி, கிரந்திப் பண்டம் ஆகாது. கை கண்ட சித்தி. கடின வியாதிக் காரருக்கு ஐந்து நாள், ஆறு நாள், அதுக்கு மட்டானதுக்கு மூன்று நாள் போதும்.

உஷ்ண மதிகமா யிருக்கிற பேர்களுக்கு முந்தின மருந்து விழுங்கின பிறகு பச்சை நெல்லுக்குத்தி குத்தி அரிசி நன்றாய்த் தீட்டி ஒரு சேரை அரிசி புதுச் சட்டியில் போட்டு இரண்டு விசை கழுவி யிறுத்துப் போட்டு பிறகு ஒரு செம்புத் தண்ணீர் வூத்திப் பனியிலே வைத்துக் காலமே யெடுத்துத் தண்ணி வேறே யிறுத்து அரிசி நன்று யு யுரஞ்சி யிறுத்த் தண்ணி திரும்ப வூத்திக் கலக்கி இறுத்து யிறுத்த தண்ணீரில் ஒரு சிந்தன் காயளவு நல்ல வெல்லம் இல்லாவிட்டால் சனி சர்க்கரை ஒரு விராகனிடை நல்ல சீரகம் அரைத்துக் கலந்து குடிக்கவும். இப்படி கடின வியாதிக்கு ஐந்து நாள் மத்துவமானதுக்கு மூன்று நாள் முந்தின பத்தியம் வேணும். வயத்து வலி வாய்வுக்கும் பெண் பிள்ளை ரூதக மில்லாமல் சிறுத்துப் போறதுக்கும் நீர்ப் பாட்டுக்கும் மாந்தக் கழிச்சலுக்கும் கண் கொதிக்கும் வாய்வுக்கும் இந்த மருந்து இந்த வியாதி யெல்லாந் தீரும்.

இருக்கு மருந்து:-

பெருங்காயம் பலம். $\frac{1}{2}$, சுக்கு பலம். 3/8, மிளகு பலம். $\frac{1}{4}$, வெள் வெங்காயம் பலம். $\frac{1}{2}$, ஓமம் பலம்1/8 இது வெல்லாம் குறிஞ்சா யிலைச் சாத்தில் அரைத்து ஒன்றாய்க் கலக்கி அடுப்பில் வைத்து ஒரு கருப்புக் கட்டி கூட்டிக் கிண்டிக் குளம்பா யிறக்கி வைத்துக் கொண்டு ஒரு பாக்களவு தின்று வென்னீர் குடிக்கவும். இதுக்கு முன் சொன்ன குணமெல்லாந் தீரும். கை கண்டது.

வயறு வலி குன்மத்துக்கு:-

செங்கல் கொண்டு வந்து புளியங் கொட்டை போலே நருக்கி நெருப் பெழ வறுத்துச் சிவந்த உடனே ஒரு சிறங்கை மிளகு ரெண்டாய் உடைத்துப் போட்டு ரெண்டு படி தன்னீர் விட்டு மூடி எரித்து உழக்கான பிறகு இறுத்துக் கொடுக்கவும். மூன்று நாள் இப்படி கொடுக்கவும். மூல குன்மமும், வயறு வலியுந் தீரும். கை கண்டது.

எட்டு வகைக் குன்மத்துக்கு மருந்து:-

நாழி வரகரிசி கைய்யாந்தகரைச் சாறு விட்டு இரு நாழி சாத்தில் வேகப் போட்டுச் சோருக்கி இதில் பெருங்காயம், நாலு களஞ்சு கடுக்காய். 50, வெள் வெங்காயம் உரிச்ச பருப்பு ஒரு சேரை சீரகம் ஒரு சேரை கருஞ்சீரகம் ஒரு சேரை இந்துப்பு கால் பலம், கடுகு நால சேரை, திப்பிலி ரெண்டு சேரை கழச்சிக்காய் பருப்பு. 50 சாறணை வேர் நாலு சேரை கொடிவேலி வேர் ஒரு பிடி இதுவும் தான்றிக்காய் இருபது நெல்லி முள்ளி ஒரு சேரை இது வெல்லாம் தனித் தனியே பொடி பண்ணி அந்தச் சோத்தில் போட்டு மசிச்சு பாக்களவு உருட்டி வில்லை தட்டி நிழலுலத்திக் கொள்ளவும். ஒரு நாளைக் கொரு வடகம் ஆமணக் கெண்ணெயில் பொரிச்சுத் தின்னவும். பொழுத் தால் இரண்டு தின்னவும். குன்மம் எல்லாந் தீரும். பத்தியம் துவரைப் பருப்பு மிளகு நீர் ஆகும். புளி விடவும்.

வாய்வு கிருணி மருந்து குளிகை:-

ஓமம், நெல்லிக்காய், கடுக்காய், மிளகு, சுக்கு, திப்பிலி, கழச்சிப் பருப்பு இவை யெல்லாம் வகைக்கு ஒவ்வொரு கழஞ்சு நேர்வாளம் ஒரு கழஞ்சு முளை வாங்கிப் போட்டு சிந்தன் பழச் சாத்தில் வேக வைத்து அதுவுங் கூடப் போட்டுக் கையாந்தகரைச் சாத்திலாகுதல், வென்னீரிலாகுதல் கொள்ளவும்.

ஏப்ப மெடுக்கிறதுக்கு:-

முருங்கைப் பட்டை சத்து, உப்பு, புளி, மிளகு இது நாலு மரைத்து உருட்டி ஒரு பிடி சோத்துக் குள்ளே வைத்து நல்லெண்ணை தீப் பறக்கக் காய்ச்சி அந்தச் சோற்று மேலே ஊத்தித் தின்னவும். மூன்று நேரந் தின்னவும் தீரும். கை கண்டது.

(வேறு)

தொட்டால் சுருங்கி யிலை, உள்ச் சுருங்கி சமூலமு மரைத்துக் கருப் புட்டியில் குழைத்துக் கொடுக்கவும். மூன்று நாள் பிறகு காட்டு முள்க் கொட்டை வேரை அரைத்து எருமைத் தயிரில் மூன்று நாள் கொடுக்கவும் தீரும். கை கண்டது.

தன்னீர் தாகத்துக்கு மருந்து:-

கருவேப்பிலைக் கோல் ஒரு பிடி கருக்கி அதிலொரு மானத் தன்னீர் விட்டுக் காச்சித் தன்னீர் யிறுத்துக் கொடுக்கவும். தாகம் நிற்கும். அதின் பிறகு வெந்தயம் அரைத்து ஒன்பது புடம் பண்ணி ஒரு சிந்தன் காயளவு அடை பண்ணித் தின்னவும் தீரும். கை கண்டது. தப்பாது.

சடு ஒடுப்பாறுக்கு மருந்து:-

பொருமி வேர் புரு வேராய் ஒன்று பிடிங்கி வந்து உப்பு ஏழு விசை தடவி ஏழு புடமிட்டு மேல் பட்டை தட்டி யரைத்து வென்னீரில் கொடுக்கவும். கை கண்டது.

தாகத்துக்கு:-

வாழைச் சருகும் காடிச் சோறும் கருக்கி மோர் வார்த்துக் காச்சி கொடுக்கவும் தீரும். கை கண்டது.

(இந்தப் புஸ்தகத்தில் எழுகிற மருந்துகளெல்லாம் கை கண்டதும் குணமுள்ள மருந்துகளும் தெரிந்து திருத்தி எழுதி யிருக்கிறது).

நீர்ப் பாட்டுக்கு மருந்து: கழிச்சலுக்கு:-

ஒரு சுக்கு மிளகு, ஓமம் இது மூன்றும் வறுத்துப் பொடி செய்து சட்டி காய வைத்து அதில் கருப்புக் கட்டி அரைப் பலம் பொடி பண்ணிப் போட்டு நல்லெண்ணை சற்று விட்டு முந்தின பொடி கூட்டிக் கிண்டி உருண்டை பண்ணி ஒரு உருண்டை தின்னத் தாகம் நிற்கும். அதின் பிறகு ஒரு உருண்டை கொடுததால் கழிச்சல் நிற்கும். அதின் பிறகு ஒரு உருண்டை கொடுத்தால் சரீரத்தில் வியாதி யெல்லாந் தீரும். கை கண்டது.

<u>ரத்தப் பீனிசம் சீப் பீனிசம் வறப் பீனிசம் இதுக்கு மருந்து:-</u>

முருங்கைப் பட்டை சாறு ஒரு கண்டங்கத்திரிப் பழச் சாறு ஒரு படி பசுவின் நெய் ஒரு படி வசம்பு, வெள் வெங்காயம் இவை கூட்டி நெய்யில் பொரித்து யிறுத்துக் கொண்டு நாசியில் குத்தவும். மூக்காலே-ெ

<u>மூக்காலே ரெத்தம் விழுகிறதுக்கு ரத்தப் பீனிசத்துக்கு:-</u>

கோழி முட்டை வெள்ளைக் கருவில் சுண்ணம்பு கூட்டி சீலையில் பிடித்து இரண்டு நெறியிலும் பத்துப் போடவும். கை கண்டது. நாவல் பட்டை பன்னிரு கழஞ்சு நருக்கி இரு நாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சிக் கண்டு சர்க்கரை தேனுங் கூட்டிக் கலந்து கொடுக்கவும் நிற்கும்.

(வேறு)

சங்கம் வேர், நாத்தங் காயளவு அரைத்து அரைப்படி பசுவின் நெய்யில் கொதிக்க வைத்து தலைக்குத் தடவவும். உள்ளுக்குக் கொடுக்கவும் நிற்கும்.

(வேறு)

சாதிக்காய் உரைத்து முலைப் பாலில் ஐந்து நாள் நசியம் பண்ணவும்.

(வேறு) வெள்ளாட்டுப் பாலிலே கண்டு சர்க்கரை போட்டு நசியம் பண்ணவும்.

(வேறு)

சிறுகீரை வேரும் கண்டு சர்க்கரையும் முலைப் பாலில் நசியம் பண்ணவும்.

(வேறு)

அருகம் வேர்ச் சாறு நற் கருப்பஞ் சாறு முந்திரிகைப் பழ ரசம், மாதளம் பழ ரசம் இவை நாலுந் தன்னி லொக்கக் கூட்டி நசியம் பண்ணத் தீரும்.

(வேறு)

பருத்தி யிலை யீர வெங்காயம் கூட்டி நருக்கி முலைப் பாலில் நசியம் பண்ணத் தீரும்.

(வேறு)

முசுட்டையிலை தட்டுப் படுத்து அவித்துத் தயிர் வார்த்துப் பிசைந்து தலையில் கட்ட மூன்று நாள்க் கட்டவும் கை கண்டது

(வேறு)

<u>ரெத்த பீனிசத்துக்கு:-</u>

துவக்கத்திலே எருக்கங் கொழுந்து முறித்து மூக்கிலே வாங்கத் தீரும்.

(வேறு)

கோவைக் கிழங்கு ஆகிலும் நல்ல தண்டாகிலும் கொண்டு வந்து மேல்ப் புறணி சீவிப் போட்டு துவைத்து அரைப் படி சாத்தில்ச் பால் விட்டுக் குடிக்கவும்.

<u>நாறப் பீனிசம், சீப் பீனிசம், சீருய்ப் பீனிசம் நீர்ப் பீனிசம் இதுகளுக்கு:-</u>

வெள்ளைச் சோள அரிசி ஒரு படி அரிசி தீட்டி நன்றாய் ஆக்கி எருமைத் தயிர் வார்த்துப் பிசைந்து வெள்ளைக் குண்டு மணி யிலை துவைத்துக் கூடப் போட்டுத் தலைக்கு கட்டவும். இப்படி மூன்று நாள் கட்டத் தீரும்.

(வேறு)

வறப் பூலாங் கொழுந்தும் யீர வெங்காயம் பனை வெல்லமும் நன்றாய் நருக்கி முலைப் பாலில் பிசைந்து நசியம் விடவும். பத்து நாள் எட்டு நாள் விடவும். பூவரசம் விரை பதினொன்று விரை யெடுத்துக் கொண்டு மூன்று மிளகும் கூடப் போட்டு நருக்கிக் காடி வார்த்துப் பொட்டணங் கட்டி மூன்று துளி நசியம் விடவும். கைப்பு புளி விடவும். எந்தப் பீனிசத்துக்கும் வெள்ளாட்டு நெய்யாகிலும் பசுவின் நெய்யாகிலும் குங்குமப்பூ கஸ்தூரி விரை, இது இரண்டும் வண்டு கொல்லிப் பட்டையாகிலும் ஆயில்ப் பட்டையாகிலும் தந்துவக் கணைப் பட்டை வெள்ளறுகு தந்து நெய்யில் கொதிக்க வைத்து முதல் நாள் தலை முழுகி மறுநாள் நாசியில் நெய் கட்டவும் தீரும்.

<u>வாயில் மூக்காலே ரெத்தம் விழுகிறதுக்கு:-</u>

மத்திக் கொழுந்தும் கடுக்காயும் அரைத்துச் சிந்தன் காயளவு தயிரில் கொடுக்கவும்.

(வேறு)

வறப் பலாங் கொழுந்து ஈர வெங்காயம், பனைவெல்லம், முலைப்பால் கூட்டி நசியம் பண்ணவும் தீரும்.

(வேறு)

பூவரசம் விரை 11, மிளகு உ. காடியில் நருக்கி நசியம் பண்ணவும் தீரும்.

<u>வாயில் நாத்தத்துக்கு:-</u>

அரத்தை பொடி பண்ணிப் பாலிலே கொடுக்கத் தீரும்.

(வேறு)

பொன்னாங்காணி சங்கு சங்கம் வேர் இது நாலும் சர்க்கரை கூட்டிப் பசுவின் பாலில் மூன்று நாள் குடிக்கத் தீரும். கை கண்டது.

<u>கல்லடைப்பு, கல்லெரிப்பு, உஷ்ணத்துக்கு:-</u>

சோத்துப் பானையில் தீயில் இருக்க மேல்ச் சோறு எல்லாம் வாங்கிப் வழித்துப் போட்டு அந்தப் பானையில் ஆழாக்கு படி தண்ணீர் விட்டு அரைப் படியாகக்

காய்ச்சி பசுவின் வெண்ணை ஒரு சினைச் சிந்தன் காயளவு கலத்தில் போட்டு அந்தச் சோத்துப் பானையில் கசாயத்தை அத்தி வயத்திலேசுடச் சுட அதி அதிக் குடிக்கவும். கல்லு உடனே தெறிச்சு விழும்.

(வேறு)

பழைய பருத்தி யிலைச் சாறும் நல்லெண்ணையுஞ் சாரித்து அரைப்படி முக்கால் படிக்குத் தக்கது குடிச்சால் உடனே கல்லு விழும். பருங் கல்லா யிருந் தாலும் உடைந்து விழும். கை கண்டது.

கல்லடைப்புக்கு மருந்து:-

கொழுஞ்சிச் சாறு ஒரு படி, வெள்ளுள்ளி கட்டி.க, ஒரு கறி மிளகு சுக்கு, திப்பிலி, ஓமம், சத்து இது ஐந்து மரைத்துச் சாத்தில் கரைத்துக் கொண்டு இரண்டு சிந்தன் காயளவு புளிக் கரைத்து இது வெல்லாம் நன்றாய்த் துளாவிக் காச்சினதின் பிறகு சட்டி காய வைத்து அதில், வெள்ளுள்ளி தட்டிப் போட்டு அதில் விளக்கெண்ணை தேதிச்சுத் தாளிச்ச பிறகு ஆற விட்டுக் கலத்திலே வாத்து அதில் ஆலக் கறண்டியில் விளக்கெண்ணை காச்சி மருந்திலே த்திக் குடிக்கவும். கல்லு உடனே தெறிக்கும். மலஞ்சலம் விடும். மூன்று நாள் குடிக்கவும். வியாதி தீரும். கை கண்டது.

ஒரு விரை வாதத்துக்கு:-

கரு றுவ ளைச்சுக் கழுத்து நரம்பில் சுடவும்.

உள்ருக்கு மருந்து:-

சாம்பிராணி எள்ளுக் கழச்சியிலை, பனைவெல்லம் இது நாலுங் கூட்டி இடித்து மூன்று நாளாத் தின்னவும். வியாதி தீரும். கை கண்டது.

முக சன்னி முக்களப்புக்கு மருந்து:-

சவுக்காரங் கொண்டு வந்து பாக்குப் போலே சீவி நல்லெண்ணை வார்த்து வறுத்துச் சிவந்த பதத்தில் யிறக்கிச் சவுக்கார மெல்லாம் எடுத்து அம்மியில் போட்டு அரைத்துச் சிமிளில் வைத்துக் கண்ணில் போட நல்லெண்ணை கூட்டி யிடவும். மூன்று நேரம். தீரும். கை கண்டது.

தலைப் பாரம், மேல் நோவுக்கு நெஞ் செரிப்புக்கு வயறு கழியிறதுக்கு வாய் நீர் ஊறுகிறதுக்கு மருந்து:-

ஓமம் ஒரு சேரை பெருங்காயம் இரண்டு விராகனிடை உப்பு ஒரு சேரை வெள்ளுள்ளி உரிச்ச பருப்பு ஒரு சேரை இது வெல்லாம் அனலில் புடம் பொடி செய்து வைத்துக் கொண்டு வேண்டிய பொழுது சிந்தன் பழம் ரெண்டு அறுத்து அதில் தென மிப்படி மாத்திரம் ஒரு கீத்தில் நாலு கீத்திலும் வைத்துப் பனி வைத்துத் தின்னவும். வேண்டிய பொழுதெல்லாம் ஈர வெங்காயம், கிரந்திப் பண்டமாகாது. கை கண்டது. இந்தப் பொடி வாய்விக்குமாம். கை கண்டது.

திருகு சன்னிக்கு நசியம்:-

முருங்காரங்காய், சாறணைக் கொழுந்து, நல்ல வேளைக் கொழுந்து ஒருக் கட்டி வெங்காயம் இது வெல்லாம் ஒன்றாய்க் நருக்கிச் சீலையில் பொட்டணம் பிடித்து முலைப் பாலில் துவைத்து வலது புறந் திரும்பினால் இடது நாசியிலுங் காதிலும் புளியிடது புறந் திரும்பினால் வலது புறம் நசியம் தீரும். கை கண்டது.

சிலந் திறக்க மருந்து:-

வெள்ளைப் பாலைப் பட்டையைத் துவைத்துப் பசுவின் பாலாகுதல் ஆட்டுப் பாலாகுதல் விட்டுப் பிசைந்து பிளிந்து ரெண்டு நல்ல சீரகம் நல்ல வெல்லங் கூட்டி உடனே குடிக்கவும். சலந் திறக்கும். மூன்று நாள்க் குடிக்கவும். கல்லு முதலாய் விழும். இது கை கண்டது.

கல்லு விழ மருந்து:-

வெள்ளுள்ளி தொலிச்சது முக்கால் படி ஒரு நேரத்துக் கால் படி அரைத்துச் சீலையில்க் கட்டடி விளக்கில் காச்சித் தயிலம் வாங்கி உள்ருக்குக் கொடுக்கவும். அதின் பிறகு சாம்பலில் வென்னீர் விட்டு எருக்கிலைப் போட்டு மூடிக் கவுழ்த்து படுக்கவும். இப்படி மூன்று நாள்ச் செய்தால் ஒருக்காலும் வராது. இது கை கண்டது.

(வேறு)

கொட்டை யிலந்தை வேர் பட்டை சிந்தன் காயளவும் அரைத்து முடக் கொத்தானிலை அந்த அளவு அரைத்து நல்ரெண்ணை ஒரு படி பனைவெல்லம் ஒன்று இது நாலும் கூட்டி மேலுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டு தின்னவும். மூன்று நாளில் தீரும். பத்தியம் பசுவின் பால், துவரைப் பருப்பு ஆகும்.

(வேறு)

முடக் கொத்தான் சிந்தன் காயளவு கொண்டு வந்து ஈர வெங்காயம் ஒன்று தட்டி அரைப்படி விளக்கெண்ணையில் கொதிக்க வைத்து மூன்று நாள் கொடுக்க வும். புளி விடவும்.

(வேறு)

செம்முள்ளி யிலை களச்சிக் காயளவு மூன்று உருண்டை பண்ணி அதில் நல்லெண்ணை ஒரு காசத்தனை கூட்டி முழுங்கவும். அதின் பிறகு நத்தத்தில் குத்தி வேர் அரைத்து மூன்று உருண்டை பண்ணித் தயிரில் மூடித் தின்னவும். வியாதி உடனே தீரும். கை கண்டது.

நீரளிவுக்கு மருந்து:-

மலைக் கிழங்கு கொண்டு வந்து சிறுகச் சிறுக வெட்டிக் காயப் போட்டு கல்லுரலில் இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு நாலு படி எருமைப் பால் கொண்டு வந்து ஒரு படியாகக் காய்ச்சி மெல்லிய சீலையி லூத்தி அந்தி நேரம் கட்டிப் போட்டு ராத்திரி முப்பது நாழிகை மட்டும் இருந்து காலத்தாலே எடுத்து மூன்றாய்ப் பகுத்து ஒரு பங்கு எடுத்து யிதில் சூரணம் வெருகடிப் பிரமாணம் போட்டுக் கூட்டிக் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கத் தீரும். கை கண்டது.

வண்டு கடி வகைக்கு:-

மாவிலிங்கப் பட்டை திழலிலுத்தி யிடித்துச் சூரணம் பண்ணி நாலு விரல் கொண்ட தாள் வென்னீரில் பதினைந்து நாள் கொள்ளவும். உப்பு, புளி விடவும்.

நீர் வண்டு கடிக்கு:-

கடப்பம் வேர் பட்டை இடித்து மாவொடு பங்கும் கருங் குறுவை மா மூன்று பங்கும் ஒன்றாய்க் கலந்து எருக்கம் பூ ஒரு வள்ளம் பானையில் போட்டு தண்ணீர் விட்டு வேடுகட்டி அதின் மேலே மருந்து கூட்டி கலந்த மாப் புட்டு வைத்து வெந்த பிறகு புட்டெடுத்து போட்டுப் பானையில் ஆவி வெதுப் பிடித்து அதின் பிறகு நல்லெண்ணை பனை வெல்லங் கூட்டிப் பிட்டுத் தின்னவும். பத்தியம் பாலுஞ் சோறு முண்ணவும். கைப்பு, புளிப்பு விடவும். வியாதி தீரும்.

வறு வண்டு கடிக்கு:-

அழிஞ்சிப் பட்டை கொண்டு வந்து பானையிலிட்டு அதின் மேலே எருக்கம் பூ வைத்துத் தண்ணீர் வார்த்து வேடு கட்டி ஒரு பிடி கம்பரிசி யிடித்துப் பிட்டு வைத்து நல்லெண்ணை பனவெல்லங் கூட்டி ஏழு நாள் ரெண்டு நேரந் தின்னவும். வென்னீருஞ் சோறு முண்ணவும். வியாதி தீரும்.

நீர் வண்டு கடிக்கு:- சுனைத் தண்ணீர் வடிந்து புண்ணுனல்

உவியல் மருந்து:-

எருமை யாட்டாங் கொடி துவைத்து எருமை மோரி பிசைந்து வடித்துக் கொண்டு உலைக் கட்டிச் செந்தினை யரிசி ஆக்கி மூன்று நாள் தின்னவும். இரவே சோறு. பத்தியம் ஒன்று மாகாது.

நீர் வண்டு கடிக்கு:-

பொன்னுவாரை வேர், சிந்தன் பழச் சாத்திலரைத்துப் பூசக் கெந்திப் புண்ணும். இந்த வண்டு கடி வகைகள் கை கண்டது.

செய்யான் கடி பூரான் கடி செவ்வட்டை கடிக்கு:-

வரகரிசியானாலும், சாமை யரிசியானாலும் ஒரு சிறங்கை அரிசி பொங்கி வைத்து ஆடு தின்னாப் பாளை வேர் அரைத்தது கொட்டைப் பாக்களவு அந்தச் சோத்துக்குள்ளே வைத்து சோறு கொண்டு மூடிச் சத்து நேரம் பொறுத்து அந்த மருந்தும் சோறும் உண்ணவும். பத்தியம் பசுவின் பால், நெல்லரிசிச் சோறு, உப்பு, புளி, புகையிலை யொன்று மாகாது. இப்படி ஏழு நாள் தின்னவும். கை கண்டது.

எலி கடிக்கு:-

பேய்ப் பீர்க்கங் கூடு கொண்டு வந்து உதிர்த்து அந்தப் பொடி யெடுத்து இரண்டு காசளவு பொடியும் அதின் விரை ஒன்று முளை வாங்கிப் போட்டு இரண்டும் அரைத்துக் காடியில் குடிக்கவும். வாயா லெடுா விட்டால் இரண்டு மூன்று விரை போடவும். எடுத்தால் ஒன்று போதும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். தினம் நெய் தேய்த்து முழுகவும். உப்பு, புளி ஆகாது. கை கண்டது.

அனுபானம் வகை யிறுக்குத் தீரும் வியாதி செங்குட்டம் கருங் குட்டம், பெரு வியாதி சொறி வண்டு கடி செய்யான் கடி செம்பூரான் கடி, நீர் வண்டு, கடி சிராய் வண்டு கடி, செங்கிரந்தி, கருங் கிரந்தி, சொறித் தவளை, கடி பறங்கிப் புண், சூலை, பிரமியம் இருபத்தொன்றும் தீரும்.

ஆறாத புண், அழி கண்ணன் இது முதலான வியாதிகளுக்கு தயிலம் ஒரு காசிடை வெத்திலையில் தடவி உள்ளுக்குக் கொள்ளவும். பதினாறு நாள் உப்பு, புளியில்லாமல் வென்னீரும் சோறும் உண்ணவும். அப்பால் நச்சுப்புத் துவரைப் பருப்பு, நச்சுப்பு, பசுவின் பால், நெய், துவரை, மிளகு நீர் கூட்டவும். முன் சொன்ன வியாதிகளெல்லாந் தீரும். பூமி பிடத் தயிலம் இறக்கவும். கை கண்டது.

பிரமேயம் சீ விழுகிறதுக்கு:-

விளும்பித் தழை களச்சித் தழை, பருத்தி தழை, செருப்படைத் தழை, சாறணைத் தழை இதுகளை யிடித்துச் சாறு பிழிந்து கால்படி சாறு சீனி சர்க்கரை

துட்டெடை யிது இரண்டும் போட்டுக் கொடுக்கவும்.

மூச்சுத் தப்புக்கு:-

வேலிப் பருத்தி வேலி மேலே ஒத்தையாய்க் கிளை விடாமல் படர்ந்து யிருக்கிற வேலிப் பருத்தி வேர் ஞாயற்றுக் கிழமை சுத்திக் கெல்லி வேர் அறுமல் பிடுங்கி மோதிர வளையமாய்க் கட்டி வைத்துக் கொள்ளவும். மூச்சுத் தப்பின இடத்திலே நிலையாய் பிடித்துக் கொண்டு அந்த மூலிகை அவடத்திலே வைத்து அதின் மேலே ஒடு போட்டுப் பிடிக்கவும். மூன்று விசை பிடிக்கவும். பிடித்ததின் பிறகு அந்த ஒட்டையைக் கையிலே வைத்துக் கொண்டு இது என்னென்று கேட்கத் தீரும்.

ஒரு தலை வலிக்கு:-

பேய்ப் பீர்க்கம் விரை முலைப் பாலிலரைத்து மாறு பாகமாக நசியம் பண்ணவும். வாயாலெடுத்துக் கோழையும் தண்ணீயும் சிறுய் போலே விழுந்து வரும் மயக்கமும் யிளைப்பு மாறல் எருமைப் பால் தலையில் தேய்க்கவும். பால் வார்த்துச் சாப்பிடவும் நிற்கும். கை கண்டது.

பெரும்பாட்டுக்கு:-

துத்தி யிலை யரைத்து அப்பஞ் சுட்டுத் தின்னவும். முடக் கொத்தானிலை அப்பஞ் சுட்டுத் தின்னவும் தீரும். கை கண்டது. பற்படாகம் அரைத்துச் சிந்தன் காயளவு சிந்தன் பழச் சாத்தில் கொடுக்கவும். மூன்று நாள் கைப்பு கிரந்திப் பண்டமாகாது. கை கண்டது.

எந்தப் பாம்பு, கடி பேய் நாய் கடி பேய் நரி கடிக்கு மருந்து:-

அரணை கடி, சோளந் தின்ன மாட்டுக்கும் நஞ்சு தின்ற பேர்களுக்குமாம். துரிசு நாலு விராகன் நேர்வாளம் நாலு விராகன் ரசம் இரண்டு விராகன், இது மூன்றும் சிந்தன் பழச் சாத்தில் ஏழு நாளரைக்கவும். நாளொன்றுக்கு நாலு நாழிகை அரைத்து நாக்கில் தடவவும். எந்த விஷமுந் தீரும். கை கண்டது.

முலைப் பாலில்லாதவர்களுக்கு:-

முசுமுசுக்கை யிலை யரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும். பாலூறும். கை கண்டது.

சன்னி வாத தோஷத்துக்கு:-

புழு நாகம் அரைத்து வேலிப் பருத்திச் சாத்தில் கலக்கிக் கொடுக்கவும். கை கண்டது.

சுரத்திலுல் பேச்சு யில்லாத தோஷத்துக்கு மருந்து:-

நெட்டைப் பேய் மிரட்டி சமூலமுந் துவைத்து ஒரு காசத்தனை சாறு உள்ளுக்குக் கொடுக்கவும் பேசும். பேய்ச் சுரை சூ ளாக்கிப் பசுவின் வெண்ணை யில் கொடுக்கவும் பேசும். கை கண்டது.

சுரத்திலுல் வாதபித்த சேற்பன சுரம் தோஷத்துக்கு குளிகை:-

எருமுட்டைச் சாம்பல் அய் விரலிச் பழச் சாறு விட்டு அரைத்து சூ துளங் காய்ப் பிரமாணம் முருட்டி நிழலுலத்தி வைத்துக் கொண்டு வாத சுரத்துக்கு இஞ்சி சாத்தில் கொடுக்கவும். பித்த சுரத்துக்குச் சீரகக் கசாயத்தில் கொடுக்க சேற்பன சுரத்துக் குக்கு கசாயத்தில் கொடுக்க தோஷ சுரத்துக்கு முலைப்பாலில் கொடுக்கவும். கை கண்டது.

சிறு பிள்ளை ஏங்கல் இரைப்புக்கு:-

வெள்ளைக் காவளை வேர் ஒரு விரல் நீளம் ஒமம் சத்து வசம்பு சத்து வெள்ளுள்ளி கட்டி ஒன்று இது வெல்லா மரைத்துக் களச்சிக் காய் பிரமாணம் வென்னீரில் மூன்று நாள் வார்க்கவும். கை கண்டது. புளியாகாது.

வாயில் ரெத்தம் விழுகிற காசிக்கு மருந்து:-

பன்னிக் குட்டி கொண்டு வந்து இருதயத்தில் படுகிறப் போலே சூரியாலே குத்தினுல் ரத்தம் வரும். அந்த ரெத்தம் விழுகிற போதே குடிக்கவும். குடிக்கிற போது உதிர காச மாத்திரை கூட்டிக் கொடுக்கவும். கை கண்டது.

கல் நண்டு உஷ்ணத்துக்கு மருந்து:-

கல் நண்டு அரைத்து முள்ளங்கி யிலைச் சாத்தில் கொடுக்க கல்லுத் தெறிச்சு விழும்.

உஷ்ணத்திலுலே நீரடை பட்டால் வென்னீரில் கொடுக்கவும். உடனே சலந் திறக்கும். கண்ரேவுக்குப் பத்துப் போடவுந் வாசியாம், கை கண்டது.

முலைப் பாலில்லாதவர்களுக்கு மாட்டுக்கு முதலாய் மருந்து:-

பூநாகம் அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு யிள வென்னீரில் கொடுக்கவும். மாட்டுக்கு ஒரு சிந்தன் காய் மாத்திரம் கொடுக்கவும் பாலுண்டாம். கை கண்டது. (52-ம் எடு யிலை)

சகல பித்தத்துக்கு தலை கிறுகிறுப்புக்கு மருந்து:-

தாளிச பத்திரி யோரொன்று தயங்கு மிளகு மீரெண்டு மேலாம் வேர்க் கொம்போர் மூன்றும் விளங்குந் திப்பிலி நாலுங்கும் கோலக் கூகை நீறும் கூட்டிச் சீனி பலமொன்று சால விடித்துப் பொடி தின்றால் தானே போகும் பயித்தியமே.

இதில் நல்ல சீரகம், அதிமதுரம், கொத்தமல்லிகை, சுக்கு இவை முந்தின கணக்கில் கூட்டிக் கொள்ளவும். கை கண்டது.

பிள்ளைஅழிந்து போற தோஷம் இதுக்கு மருந்து:-

சிறு புள்ளடி பிடுங்கி வந்து அரைத்துப் பசுவின் பாலில் மூன்று நாள் கொடுக்க பிள்ளை விழாது.

காமாலை வீக்கம் பாண்டுரோகம் வீக்கம் இதுக்கு மருந்து:-

கரும்பனை வேர் ஒரு பிடி கொண்டு வந்து தட்டி ஒரு சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் ஒரு பிடியாய்க் காய்ச்சி யிறுத்துக் கொடுக்கவும். ஆறு நாள் வீக்கந் தீரும். கை கண்டது.

(வேறு)

சவுக்காரம் ஒரு பணவிடை மோரில் ஏழு நாள் கொடுக்கவும். புளியாகாது. கசப்பு ஆகாது. கை கண்டது.

காமாலை வீக்கத்துக்கு:-

எருமை யீனுக் கிடாரிச் சாணியாகிலும் மற்ற எருமைச் சாணியாகிலும் எடுத்துப் புளிந்து அந்தப் பால் சேரை தயிர் ஒரு சேரை நன்றாய்ச் சாரிச்சு ஆறு நாள் கொடுக்கவும் தீரும். மறுபத்தியம் ஆறு நாள். உப்பு, புளி கசப்புத் தவிர்க்கவும். கை கண்டது.

மாங்கிஷ தோஷம் நெய் தோஷம் இதுக்கு மருந்து:-

பொருமி வேர், சுண்ணும்பு தடவி ஏழு விசை புடமிட்டுப் பட்டை தட்டி அரைத்து வென்னீரில் கலக்கிக் கொடுக்கவும். மூன்று நேரம் தோஷந் தீரும். இது கை கண்டது.

சகல வாய்வுக்கு மருந்து:-

கொழிஞ்சி வேர், பொருமி வேர், மேல்ப் பட்டை சரி சமம் எடுத்து ஏழு அனல் புடமிட்டு வைத்துக் கொள்ளவும். சுக்குத் திப்பிலி யிந்துப்புப் பெருங்காயம், ஓமம், வெள்ளுள்ளி, இதுகள் சரியாய் கூட்டிச் சிந்தன் பழச் சாறு விட்டு ஒரு நாளரைத் சுண்டைக்காய் பிரமாணம் உருட்டி ஏழு நாள் ராவும், பகலும் உணர்த்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை வென்னீரில் கொள்ளச் சகல வாய்வுந் தீருங். கை கண்டது.

எலி கடிக்கு மருந்து:-

முருங்கைப் பட்டை யரைத்துச் சிறுநீரில் கொடுக்கவும். ஆறு நாள்க் கடி வாய்க்கு அந்தப் பட்டையை வைத்துக் கட்டவும் தீரும். கை கண்டது.

பேய் நாய் கடிக்கு கணு மூங்கிலை அரைத்துப் பாலில் கொடுக்கவும். கடி வாய்க்கு கிளுவைப் பட்டையாகிலும் தழையாகிலும் சிறுநீர் வார்த்து வதக்கி வைத்துக் கட்டவும். கை கண்டது.

ஆறாத புண்ணுக்கும் குழி விழுந்த புண்ணுக்கும் மருந்து:-

மயிலெரு என்ற யிலையை மூன்று கவா அதின் தண்டு இரண்டு புறமும் யிலை யிருக்கும். இது பாதிரை யென்னும் பேர். இந்த யிலை கொண்டு வந்து தண்ணீர் வராமல் அரைத்து பசுவின் வெண்ணை கூட்டிக் கலத்தின் மேலிழைத்து செம்பிலும் மிழைத்துச் சீலையில் தடவிப் புண்ணின் மேல் போடவும். ஆறும். கை கண்டது.

[illegible]:- புண்ணுக்கு களிம்பு:-

துத்தம் துரிசு, வெண்காரம், ரசம் யிது நாலும் சரி சமம் புடமிட்டுப் பொடி செய்து செம்பும் கலமும் இழைத்து மெழுகு பதத்தில் கலந்து பாவட்டையிலை தடவித் தீயில் காய்ச்சிப் புண்ணின் மேல் போடவும்.

(வேறு)

தேங்காய், நெய் வெற்றிலைச் சாறு சரி சமம் மெழுகு சத்துக் கூட்டிக் காய்ச்சி மயில் துத்தங் கூடக் கூட்டிக் குழம்பான பதத்தில் புண்ணின் மேல் போடவும். ஆறும். கை கண்டது.

சகல காமாலைக்கு மருந்து:-

செண்டுத் தும்பைச் சமூலமும் அரைத்து முள்ளிக் காயளவு காராட்டுப் பாலிலே கலக்கி மூன்று நாள் கொடுக்கவும். ஆறு நாள் உப்புப், புளி தவிர்க்கவும். தீரும். கை கண்டது.

சகல விஷத்துக்கு மருந்து:-

வெள்ளைச் சாறணை சமூலம், குப்பை மேனி யிலையும் வேரும் புன்குக்குப் பூடு இதுகள் சமமாக அரைத்துக் கடலைப் பிரமாணம் உருட்டி நிழலில் உலர்த்திப்

பிறகு நல்லெண்ணை பத்தத் தடவி நிழலில் வைத்து எண்ணை சுவறின பிறகு வெண்ணை வெண்ணை பதந் தடவிச் சிமிளிலுந் தடவி உருண்டை யதிலடைத்து வைத்துக் கொண்டு யாதா மொருத்தருக்கு விஷந் தீண்டினல் வெகுபாடு பட்டால் ஒரு காசிடை நல்லெண்ணெயில் ஒரு உருண்டை கொடுக்கவும் மீளும். கை கண்டது. சித்தியாகும்.

வாழாத பெண்ணுக்கு மருந்து:-

சாதிக்காய் பொடி செய்து நல்லெண்ணையில் வேக வைத்து யோனியில் தடவி புணரப் பிரியமாவாள்.

(வேறு)

ஆடு தின்னுப் பாளை வேர் ஒரு பிடி கொண்டு வந்து நிழலிலுலத்திக் கோழி முட்டையோடும் வேரும் பொடியும் சிந்தன் மிழி சாத்தில் குழப்பி வரை தண்டில் தடவிப் புணரவும். இது கை கண்டது.

பூப்பட்ட கண்ணுக்கு:-

பரும் பலகரை நாலஞ்சு எடுத்துக் கிழா நெல்லி வேர் ஒரு பலகரைக்கு ஒவ்வொரு வேராய்ச் சுத்தி ஒரு பிங்கானில் யிட்டுப் பலகரை அமுங்கச் சிந்தன் பழச் சாறு விட்டு வெய்யிலிலே வைத்து நீர் சுவறினதின் பிறகு எடுத்து மக்கத்துப் பங்கான் சமிளில் வைத்துக் கொண்டு கண்ணைச் சுழப் பிற வளையம் போடவும். இப்படி இரண்டு மூன்று நாள் பூக் கண் சிவக்கும். கண் சிவப்புமாறும் போது பூப் பறிந்து போய்க் கண் நொந்தாப் போலே யிருக்கும். பயப்பட வேண்டாம். கை கண்டது.

ஆணிப் பூவுக்கும் வெள்ளைப் படலத்துக்கும் மருந்து:-

வெள்ளைக் காக்கணம் வேர் பணவிடை.க, வெள்ளைச் சாறணை வேர் ஆடு தின்னுப் பாளை வேர் எருமைக் கொம்பு, சேவல் நெஞ்செலும்பு, ஓரிலைத் தாமரை வேர், மனுஷர் தலை யோட்டெலும்பு ஆமையோடு முருங்கைப்பூ இவை யெல்லாம் வகைக்கு ஒவ்வொரு பணவிடை வெள்ளிய சீலையில் முடிந்து கள்ளி மரத்தைத் துளைத்து இந்த முடிச்சு அதிலே வைத்து எட்டு நாளிருக்க விட்டு பிறகு எடுத்துப் பசுவின் பாலில் வைத்து பிறகு பால் வாத்தரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி முலைப் பாலில் உரைத்திடப் பூ வெள்ளைப் பட்டதெல்லாந் தீரும். கை கண்டது.

லிங்க முலைக்கு மருந்து:-

ரச கற்பூரம் விராகனிடை.3/4, மிளகு விராகனிடை.க, ஓமம் விராகனிடை.க, கருப்புக் கட்டி விராகனிடை.4, இதை அரைத்து ஆறு உருண்டை பண்ணி மூன்று நாளைக்கு ஆறு உருண்டை கொடுக்கவும். பத்தியம் வென்னீரும் சோறும். அரிதாரம் வெண்ணெயி லரைத்துப் பூசவும்.

கண்ணுக்கு படலம் துர்மாங்கிஷம் இதுக்கு மருந்து:-

கையாந்தகரைச் சாறு அரைப்படி எருமை மூத்திரம் படி ஒன்று யிவை ரெண்டுங் கூட்டி நன்றாய்ச் சுவறக் காச்சிப் பிறகு செவ்விள நீரும் விட்டு நன்றாய் வத்த லேகியமாம். போலே ஆன பிறகு இறக்கி கலப் பிறத்திலிட்டுச் செம்பு கொண்டிழைத்துப் பச்சைக் கற்பூரமுங் கூட்டிச் சிமிளில் வைத்துக் கொண்டு இதுக்கு வேண்டிய பொழுது இடவும். இதுக்கு கண் காசப் படலம் பத்தியிருந்தாலும் சதை கரைந்து நோவு தீரும். முன் சொன்ன வியாதியுந் தீரும். உச்சிதம். கை கண்டது. தப்பாது.

அதிசார கிருணிக்கு கபாட சூரணப் பொடி மருந்து:-

சாதிக்காய், சாதிப்பத்திரி குருசாணிஓமம், கிராம்பு, அதிவிடையம், விளாம்பிசின் யிலவம் பிசின், அவினி மருந்து வாழைப் பிஞ்சு, மாதளம் பிஞ்சு, வில்வப் பிஞ்சு, விச்சிக்காய், மலைதாங்கி வேர், மாங்கொட்டை கருங்காலி மரம், அத்திக் கொழுந்து ஆக மருந்துபதினும் வகைக்கு விராகன் ஒன்று உணர்த்திப் பொடி செய்து ஒரு காசத்தனை பொடி தயிரில் கொடுக்கவும். மூன்று நாள் மாறும்.

காச்சல் மேல் கழிச்சலுக்கு:-

வென்னீருஞ் சோறும் உப்பும் காச்சலில் லாத கழிச்சலுக்கு கொடுத்தால் கல்லுக் காயப் போட்டு சேர்த்து மோர் போட்டுத் தயிர் விட்டுப் புடமிட்டுக் கொடுக்கவும். வியாதி தீரும். கை கண்டது.

வாதத்துக்கும் கை கால் முடங்கின வாதத்துக்கும் மருந்து:-

புலிக் கறி உணர்த்தி வைத்துக் கொண்டு இதில் ஒரு பாக்களவு அரைத்து வேலிப் பருத்திச் சாறு விட்டுக் கலக்கி கொடுக்கவும். மேலுக்குப் பூசவும். பத்தியம் புளி, கிரந்திப் பண்டமாகாது. கை கண்டது. உச்சித சித்தியாம்.

வாதத்துக்கு:-

புங்கிலை துவைத்து நல்லெண்ணையுஞ் சாறுங் கலந்து கொடுக்கவும்.

மருந்தீட்டுக்கு எண்ணை மருந்து:-

நல்லெண்ணை யிரு நாழி திகடை வேர் விரல் நீளம், வெள்ளைச் சாறணை

வேர் ரெண்டு விரல் நீளம் நத்தி வேர் ஒன்று நாயுருவி வேர் ஒரு பிடி பொன்னாங்கன்னி ஒரு பிடி இவை யெல்லாம் நருக்கி என்ணெயில் காய வைத்து அதில் மருந்து போட நுரையாகக் கிளம்பும். நுரை யமர்ந்தால் இறக்கிக் கொள்ளவும். வெது வெது என்றிருக்கிற போது குடிக்கவும். அன்று வயறெடா விட்டால் மறுநாள் சுக்கு கசாயங் கொடுக்கவும். வயறு போம். மறுநாள் காரமுஞ் சோறு முண்ணவும். கோழிக் கறி மிளகு நீர்ச் சோறும் ஆகும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

எல்லாப்_பவுத்திரத்துக்கும்_மருந்து:-

ஆடு தின்னாப் பாளை சமூலமும் கொண்டு வந்து தயில மிறக்கி முந்தி ஐந்து நாள் தினம் அரைக் காசிடை பிறகு ஒரு காசிடை இப்படி புண் ஆறு மட்டும் தின்னவும். புண்ணுக்கு இதுவே மருந்து. சீலையில் தவைத்துப் போடவும். கைப்பு, புளி கிரந்திப் பண்டம் ஆகாது.

(இப்பொழுது எழுதின அன்பத்தெட்டு ஏடுகளும் வண்ணாரக் காட்டு ஞானப் பிரகாசியா பிள்ளையுடைய புஸ்தகத்தைப் பார்த்து நாம் எழுதின் வாகடப் புஸ்தகங் களில் உண்டான பிறகாரம் குணமும் மருந்தும். கை கண்ட மருந்து மாத்திரை சூரணம் தயிலம் வடகம் களிம்பு குடி நீர்களும் வேறே சிலதுகளும் கைக்கு மெய் கண்டதுகளும் எழுதியிருக்கிறது. இந்த வாகடப் புஸ்தகத்தில் யிது நல்ல வகை. வயித்தியஞ் செய்கிறவரு க்குப் போதும். நாடி மாத்திரம் நன்று அறிந்தவருக்கு இனிமேல் வேறு வகை.)

மேகவெட்டை_மேலெடுதத_கிறுனிக்_கழிச்சலுக்கு:-

பீ மரத்துப் பட்டை யிடிச்சது ஒரு விளாங்காயளவு பன்னை வேர் யிடித்து ஒரு விளாங் காயளவு பண்ணிக் கோரைக் கிழங்கு யிடித்தது ஒரு விளாங்காயளவு பானைக்கு வேடு கட்டி இந்த மூன்று வகையும் வெவ்வேறே வைத்து சட்டி கவுழ்த்துப் புட்டுப் போலே வேக வைத்து வெந்ததின் பிறகு இறக்கி இந்த மூன்று வகைச் சாறும் சரியா யளந்து கொண்டு அவ்வளவு எருமைத் தயிர் கூட்டிச் சாரித்து குடிக்கக் கொடுக்கவும். நெல்லரிசி யானாலும் சாமை யரிசியானாலும் சமைத்து எருமைத் தயிர் விட்டுப் பிசைந்து கட்டுச் சோறு போலே உருட்டி பலாயிலை ரெண்டு தைத்து சோத்தின் மேலே புதைத்து நாரிலே சுத்திக் கட்டிச் செம்மண் குழைத்து மேல் பூசி நெல்லரிசிக்கு நெல்லம் புல் சாமை யரிசிக்கு சாமைப் புல் இந்தப் புல்லிலே சோத்தை வைத்துத் தீப் போட்டுச் சுடவும். வெந்து செம்மண் வெடித்த பிறகு எடுத்தாற விட்டு நச்சுப்புக் கூட்டிச் சாப்பிடவும். இப்படிக் காலமே காலமே மூன்று நாள் செய்யவும். இந்த மூன்று நாளைக்கும் ராத்திரிக்குத் தயிருஞ் சோறும் கொடுக்கவும் . பின்னை ஒன்றுமாகாது. இந்த மருந்து மேக வெட்டை மேலெடுதத மூ க் கிறுனிக் கழிச்சலுக்கு கொடுத்துக் கை கண்டது.

ரெத்தக்_கடுப்புக்கு:-

ஊனும் பாலுந் தயிருங் கூட்டிக் கலந்து கசப்பு மாதளங்காய் குள்ளே வெந்தயம் ரொப்பி சட்டியில் மோர் வார்த்து காய் மோரில் படாமல் கட்டித் தூக்கி வேக வைக்கவும். அத்திப் பழம் போலே ஆகும். அதின் பிறகு வெந்த மோர் தின்டும் காயு மரைத்து தயிரில் கலக்கி கொடுக்கவும். அந்த மருந்து கொடுத்து சில நாளைக்குப் பிறகு முருட்டாமைக் குடலும் முள்ளம் பன்றிக் குடலும் சரி கூட்டி முள் கிளுவம் பட்டை---நாலு விரலளவு கூடப் போட்டு சூரணம் பண்ணிக் கொண்டு வெருகடி பிரமாணம் மூன்று நாள் வாங்கிச் குழவை நெல்லுச் சோறுங் கொடுக்கவும். மூளை முக்ங் கரைஞ்சு போகும்.

சயித்தியத்துக்கு_மருந்து:=

ஓமத்தைப் பொரிச்சு நுணுக்கி வென்நீர் தண்ணீரில் போட்டுக் குடிக்கவும். கை கண்டது.

நீரிளிவுக்கு_மருந்து:-

தேத்தான் விரை மேல் புறணி சீவிப் போட்டு கல்லில் தட்டி சட்டியில் ஊற வைத்து ஒரு காசத்தனை சீரகம் 16 ஏலம் 10 யெல்லாம் நேக அரைத்து மருந்துகள் பசுவின் வெண்ணை கூட்டிக் குழைத்து முழுங்கவும். இப்படி ஏழு நாள் கொள்ளவும்.

பறங்கிப்_பட்டைச்_சூரணம்:-

பறங்கிப் பட்டை சேர்.க, பாக்குப் போல் சிறுக நறுக்கிப் புது ஒட்டில் போட்டு சங்கங்குப்பிச் சாறு பட்டை முழுக விட்டு சுவறின பிறகு கரு நொச்சிச் சாறு அரே பிரகாரம் அளிஞ்சிச் சாறு அதே பிர்காரம், கழுதமை துளசி இந்த ஐந்து வகைச் சாறும் விட்டு பதங்கம் பண்ணவும்.

(61 முதல் 70 வரையில் உள்ள ஏடுகள் நாடி சாத்திரம், நோய் பரீட்சைகள் எழுதப்பட்டுள்ளன. அவைகள் பெயர்த் தெழுதாமல் விடப்பட்டன).

வால_கிறிச்சிக்_குணம்_மருந்து:-

விலாமிச்சம் வேரும், தாமரைக் கிழங்கும் அல்லித் தண்டும் சந்தனமும்

பசுவின் பாலில் அரைத்துக் குடிக்கவும்.

ஒரு படி அரிசி சமைத்துக் களியுமாக்கிப் பிச்சைக்காரருக்கு கொடுக்கவும்.

குணம்:-

கெற்பந் தரித்தால் பிள்ளை கொல்லி யென்னும் பேய் அணையும். இதின் குணம்: கெற்பத்தைக் கலக்கும் வாள் காரனமாகச் செலித்த நாள் முதல் காலுங் கையும் நெஞ்சு மெரிக்கும். நோவுண்டாய் உதிரஞ் சிறுகச் சிறுக விழும். விக்கலிக்கும். இதுக்கு மேலே சொன்ன மருந்து கொடுக்கவும். இரண்டாந் திங்களில் சோதி யென்னும் பேயணையும். கெற்பத்தைப் பிசைந்து உதிரமாக நீர் விலங்கில கழுநீர் போல விழும்.

இதுக்கு மருந்து:- கொட்டிக் கிழங்கும், தாமரை வளையமும் கோட்டம் சந்தனம் சமம் கொண்டு அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும்.

மூன்றாந் திங்களில்:- மறுபானென்னும் பேயணையும். இதின் குணம் கண் பருத்திருக்கும். காலுங் கையுங் கடுக்கும். இருமலுண்டாயிருக்கும். உதிர முண்டாயிருக்கும். பல விகாரஞ் செய்யும்.

இதுக்கு மருந்து:- தாமரை வளையமும், நெல்லிப் பருப்பும், கோட்டமும் நீர் வார்த்தரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும்.

நாலாந் திங்களில்:- வங்கிரி யென்னும் பேயணையும். செய்யுங் குணம் கண்ணும் கீழ் வயறு நோவிக்கும். வயறு சிதைவிக்கும். நீர் கட்டியுங் சுதளியுமாய் விழும்.

இதுக்கு மருந்து:- கொட்டிக் கிழங்கும், நெய்தல் கிழங்கும், நெருஞ்சி வேரும், கெந்தகமும் அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கத் தீரும். ஐந்தாந் திங்களில் மாதேவி யென்னும் பேயணையும். செய்யுங் குணம் நீர் செறித்துக் கடுத்து விழும். பல விகாரஞ் செய்யும்.

இதுக்கு மருந்து:- தாமரை வளையமும் தற் கோலமும் கொட்டிக் கிழங்கும் நெருஞ்சி வேரும் நன்னாரி வேரும் பசுவின் பாலிலரைத்துக் கொடுக்கவும் தீரும்.

ஆறாந் திங்களில்:- கெற்பங் கலக்கு யென்னும் மகாளி யென்னும் பேயணையும். செய்யும் குணம்: வயறு கிள்ளக்கும். கீழ் வயறு நோகும். வயறு வலிக்கும். கெற்பக் கொள்கையிலே எட்ட குற்ற முண்டாம். தலை நோம். பல விகாரம் பண்ணும். பலவு மிச்சைப் படுத்தும் தலை நோவுண்டாம். சரீரத்தை நடுக்கும்.

இதுக்கு மருந்து:-

கொட்டிக் கிழங்கு, நெய்தல் கிழங்கும், திப்பிலியும், சந்தனமும் அரைத்துப் பாலில் கொடுக்கவும் தீரும்.

ஏழாந் திங்களில்: கொடி யென்னும் பேயணையும். குண மல்லவும் இச்சைப் படுத்தும். பிள்ளை பெறு மாப் போலே வயறு வலிக்கும். இதுக்கு மருந்து கொட்டிக் கிழங்கும், அத்திப் பட்டையுந் தோலு தாமரை வளையமும் சந்தனமு மரைத்துப் பாலில் குடிக்கத் தீரும்.

எட்டாந் திங்களில்: சுர முண்டி யென்னும் பேயணையும். செய்யுங் குணம்: சரீரத்திலே நோவுண்டாம். வெதும்பும். தலை நோவும்.

மருந்து:- தாமரைக் கிழங்கும், கொட்டிக் கிழங்கும், விலாமிச்சம் வேரும் சமமுக் கட்டி யரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும்.

ஒன்பதாந் திங்களில்:- பலபாலி யென்னும் பேயணையும். செய்யுங் குணம் சரீரத்திலே நோவுண்டாய்த் தலை நோகும். வெதும்பும். விக்கலிடும்.

மருந்து:- நெய்தல் கிழங்கும், அதிமதுரம், மரைத்துப் பாலில் கொடுக்கத் தீரும்.

பத்தாவது:- தெசபுசனென்னும் பேயணையும். செய்யுங் குணம் தூக்கம் வரும். உடம்பு வேதனை யுண்டாம்.

மருந்து:- தாமரை வளையமும் அத்தித் தோலும் பாலிலரைத்துக் கொடுக்கவும். என்னை மந்திரிச்சுக் கொடுக்கவும்.

பிள்ளை பிறந்தால் பாலருக்கு வயறு நொந்தால்:-

தென்னம் பாலை யரைத்து வாயில் வார்க்கத் தீரும். சிறு தேக்குந் திப்பிலியும் பொடி செய்து தேனிலாகுதல், நெய்யிலாகுதல் குழைத்து தாய் முலையிலே தடவிக் கொடுக்கத் தீரும்.

பிள்ளை வயறு வீங்கினால்:-

அதிமதுரம் காடியிலரைத்து வயற்றில் தடவத் தீரும். குடித்த பாலெதிர் எடுத்தால் கொட்டாவி விடில் அசமோதகமும் வெள்ளுள்ளியு மரைத்துக் குடிநீர் காச்சிப் புகட்டவும் தீரும்.

பிள்ளை முலை பசல் குடிக்கக் குடியாவிட்டால்:- அதிமதுரம் முலைப் பாலிலரைத்துப் பஞ்சில் தோய்த்து வாயில் பிழிய முலை குடிக்கும்.

பிள்ளை வயறு கழிய வேண்டினல் அதிமதுரமும் வேப்பந் துளிரும் தேனில் அரைத்துப் புகட்டவும் வயறு கழியும்

பிள்ளைக்கு நீர் கழியாவிட்டால் வெள்ளரி விரையும் எலிப் புழுக்கையு மரைத்து வயத்தில் தடவ நீர் கழியும்.

தலை நொந்தால் பசளை யரைத்துத் தலையிலே தடவத் தீரும். கொதிப் படங்கும்

பிள்ளை கசங்கினல் வெளிச்சப் பிசின் கருஞ்சீரகம், உள்ளி வசம்பு கூட்டி தூதுவளை வேர் பால் பொறி நண்டு நெல்லு நாங் கூழ் யிவை கூட்டி அரைத்துப் பசுவின் நெய்யில் கொடுக்க யிருமல், கக்கல் தீரும். பிள்ளை பிறந்த வன்றும் செரி யென்னும் பேயனையும். செய்யுங் குணம்: கண் விழியாது. இதுக்கு மாதாவைக் குறித்துப் பிட்சை கொடுக்கவும் தீரும். ரெண்டா நாள் காளி யென்னும் பேயனையும். குணம் பல கால் சீறியழும். பலகால் நீர் கழியும். போதாட்டும். சுவாமிக்கு நெய் விளக்கு வைத்துக் காடி மந்திரிச்சு சொரியவும்.

வறக் கணத்துக்கு:-

முள்ளி வேர், செவ்வள்ளிக் கொடி, தன்னி மிட்டான் முசுமுசுக்கை, தூதுவளை, கண்டங்கத்திரி வேரும் கம்பிப் பிசுனம் கருஞ்சீரகமும், மணத்தக்காளி திருகு கள்ளி வேரும் வெள்ளுள்ளி வசம்பு ஒவ்வொன்று இரண்டு விராகன் வெள்ளாட்டுப் பால் பசுவின் பால் முலைப் பால் சமனய்க் கொண்டு சிற்றுமணக்கெண்ணை யிதனைச் சமன் கொண்டு ஒரு படி தான் கொண்டு எரித்து வடித்து உள்ளுங் கொண்டு மேலுந் தடவவும்.

மூல கணத்துக்கு:-

பழம்பாசி சமூலம் வெள்ளாட்டுப் பாலி பாங்குடன் போட்டுத் துளாவியே காச்சிக் குழைந் தொன்றய்க் கரைந்ததினி பின் யிறக்கி யாற்றிக் கொண்டு ஒரு சிந்தன் பழம் பிழிந்து குழம்பான பின் தயிரைக் கூட்டிக் குடிக்கும் போது குணமாகும். மூல (குணம்) கொத்தாய்ப் பின்னை வளங்கு கருவேலம் பட்டை தண்ணீருடனே மூன்று நற்சீரகம் மேலம், அதிமதுரம், கிளந்தே யின்னமும் பெரு மரத்துப் பட்டைதனை வெள்ளாட்டுத் தயிரில் பதங் கரைத்து மேல் கொடுக்கத் தீரும். தீருமால் திரு ஆவின் பால் பருத்திப் பிஞ்சு சீரக மரைத்து மேல்க் கொடுக்கத் தீரும். வரும் விரிச் சாறு தனில் சீரகம் நெய் கூட்டி வைய்யக மருந்தத் தீரும். யிது தானும் பெருகு முற்றிய மாம்பட்டை பாலில் அருந்த பிறங்கணிய மாதளம் பிஞ்சு தயிரோடேயே.

குண்டிகைக் கணம் மருந்து:-

தண்டை வேர் சிந்தான் காயளவு அரைத்து துலங்கு ஆவின் வெண்ணை கூட்டி அருந்தத் தீரும். கண்ட சிறுகீரை வெண்ணையுடன் அருந்த பொன்னங்காணி வேர் ஆகுனும் யிப்படி யருந்தத் தீரும். கொண்டல் ******** கருசலாங்கண்ணியைப் பாக்களவு அரைத்து கூறு நீதமுட னருந்த தீரும். பாவகமாம் பத்தியஞ் சொல்லக் கேளாய் பச்சரிசிச் சோறும் வயங்காவின் பாலும் பத்தியமே.

இதய கணத்துக்கு:-

நாயுருவிச் சாறுழக்கு கரிசலங் கன்னி நருக்கிய சாறுளக்கு வல்லாரையின் சாறுழக்கு தூய்ய தும்பை கண்டங்கத்திரி, நொச்சி யுழக்காழாக்கு துலங்கிய ஆமணக்கெண்ணை ஒரு படி வெள்ளுள்ளி திரிகடுகு திரிபாலையும் யிலங்கும் வசம்பு யிவை ஒவ்வொன்று இரண்டு விராகனிடை உய்ய பதத்தில் வற்றிக் சடுகு சிவந்த பதத்தி லிறக்கி ஓயாமல் எடுத்துக் கொடுக்க எட்டு வகைக் கணங்களையும் மட்டுக்கு வருத்துந் தானே.

சீத கண மருந்து:-

பொன்னங்காணி சிறுகீரை புலா வேருடனே மன்னுங் கடுக்காய் தேத்தாங் கொட்டை வயங்க வருந்த அத்துடனே, முன்னல் முலைப் பாலுடனே தொக்க வீசு சிரத்தில் தப்புவதே. தப்பு மருந்து உலந்துடனே தள்ளி---தட்டி வைக்க செப்பு மருந்து தனைத் தினமும் தின்னப் பத்துத் தான் கொடுக்க கொப்புளைய யிப்படியே மூன்று தினந்தான் கொடுத்தாக்கால் தப்பு வியாதியா யிரும் தீரும். தைய்ய வெனச் சாற்றினரே.

மலக் கணம்:-

சீரகம் கச்சோலம் யிலவங்கம் சாதிக்காய் சிறந்த காசுக் கட்டியுடன் யிலவங்கப் பிசினுஞ் சரி நிறை சமனுகவே நிறுத்துச் சட்டியிலே யிள வறுப்பு வறுத்துக் கொண்டு பொடி செய்து வஸ்திர காயஞ் செய்து தினம் ஒருகடிப் பிரமாணமே எடுத்து நேராவின் வெண்ணையுடன் கலந்துய்யத் தீரும். நேரிளையே யென் அரன் நிகழ்த்தினனே.

மகத கனம் மருந்து:-

நீர் முள்ளி யிருள்ளி திரிபலை யிவை சமனய் நிறுத்து மேல் பசு மோரில் கசாயம் செய்து ஆர வ எட்டொன்றுக்கிக் கொண்டு அதை யிருப்பு மொந்தையில் வார்த்து வைத்துச் சீராகவே ஒரு சங்கு ரெண்டு சங்கு தினங் கொடுக்கத் தீராத கணமுந் தீரும்.

தார் குழலா யிம் மருந்தினேடு சங்கம் வேர் அரத் தொக்கச் சாரித்துக் கொ கொள்ளென மாதாவும் தாமும் அந்த முலைப் பாலில் அருந்து வாறு தன்னல் ஊத மார்யைய் யணையினி லக்கினி மாங்கிஷ மிடுமதனல் பேத அவ்வரை துவரை கடலை அதனை

விழுங்கும் போது மெய்ய லோதும் எட்டு வகை மாந்த முண்டாகு மக் குளவிக் கோ ளேன்றேடியே.

பால மாந்த குணம்:-

பாலது களியும் பாலது வெடுக்கும் பர தவித்திடும் பல விதமாய்ச்
சாலவே கை கால் வெதும்பிடு மதலை யெடுத்திருந் தாமலே மாய்ந்து
சீல மாயத்தை-யு தையலே கேள் மருந்து தனை திகழ் பொடுதலையின் காய் வசுத்துக
கோலமாம் வசம்பு இந்துப்பு உள்ளி அசகி கொள் கசாயஞ் செய்து கொடுத்திடில்
குணமதாமே.

நீல மாந்த குணம் மருந்து:-

தலையது நோவாய் முகமது பிறுமி யெங்கும் தருகியே மலஞகி வந்திடும்
முலையது முகவாதட லெலாம் புண் போல் மூத்திரங் குறைக் கடுத்திறங்கும்
மலை மருந் ருள்ளி மூக்குறட்டை வயங்கு சாறெவ்வொன்ற ஆழாக்கு
யிலம் பெற ஆமணக் கெண்ணையும் சரிவாக கூட்டி சாரித்துக் கொடு யிருமம மூக்கால் நீர் வடியும்
யிடையினில் சுரந் தோன்றும் பொருமி வயறு யிரைச்சலுண்டாய்ப்
போதப் பல வன்னங் கழிந்து செருமும் உடல மெரிந்து தலை நொந்து
செவ்வே யிருக்க வொட்டாது தருமன் தனக்கு கணமாந்த மிது தானெனத் தானறியே.

இதுக்கு:-

புங்கு புளி யூளு நொச்சில் வேம்பு பொடுதலை வேலிப் பருத்தி கருவேப்பிலை
நாரத்தை சங்கு அவுரி பொன்னுவாரை ஒவ்வொன்று ஒரு பிடி தனித் தனியே யெடுத்து
ஒரு சட்டியிலிட்டுத் தங்கு கடுகுரோகணி யிந்துப்புத் தான் முடிந்து தான் போட்டுத்
தண்ணீர் நாழி தான் வார்த்து அங்காளாக்காய் வற்றி முடிந்த மருந்து தனை அவுழ்த்து
அரைத்துக் கரைத்துக் கொடுக்கக் கண மாந்தத்தை யடக்கி யிடுந்தானே.

செரியா மாந்தக் குணம் மருந்து:-

வேலிப் பருத்தி யிலை வாட்டிப் பிழிந்து மிளகு, வசம்புள்ளி சால அரைத்துக் கரைத்து நெய்த் துழிலிட்டுத் தானருந்தக் குணமாம்.

மேலும் எருமை வெண்ணெயில் பிசைந்த மருந்து யிதடுடன் ஓமக் கோதும் பெருந் தும்பையுங் கூட்டி ஏத்து யுகந்திடும் குணமாமே.

பேராமாந்தக் குணம் மருந்து:-

கழுதும்பை, பெருந்தும்பை புளியாரை நொச்சி கருக்கு வாய் வேளைச் சாறு சரி கொண்டு வெறிக்க வதக்கிக் காயக் குழம்பாய் மிளகு இந்துப்பு காயம் சீரகம் ஓமம், திரிகடுகு, சாதிக்காய் யூசிக் காந்தம், கொள்ளு மருந்தும் நிதனைக்கு மூலிகைச் சாற்றால் சமன் செறிந்து யுண்டை சுண்டவிளங்காய் அளவு செய்து தினமும் ஒரு உருண்டை முலைப் பாலில் கொள்ளத் தீர்ந்திடுமே.

கட்டு மாந்தத்துக்கு:-

அடவின் திருடி முலைப்பால் வறக் காலில் பாலிவை யிரண்டும் ஒவ்வொன்று ஒரு உழக்கு
கறந்து
திடமுடன் ஆமணக் கெண்ணை நாழி கூட்டித் திரிபாலை வெள்ளுள்ளி யிவை யிரண்டும் விராக
விடை பொடி செய்து
போட்டதனை எரித்து உள்ளுக்கு ஒரு காசிடை மேல் விலாவில் பூசித்
திடமுடைய கட்டு மாந்தம் கண பேதங்கள் சாராதென்று உமைக் கரிளுர் சாற்றினது
சத்தியமே.

துலை மாந்தம்:-

பாக்களவு வெங்காக்கணத்தின் வேரை அரைத்துப் பாவையர்கள் முலைப்
பாலில் களந்திய
தாக்கறவே வயறு பேதித்த பின்பு தயங்கும் விளக் கெண்ணையுடன் வசம்பு தைவேளையின்
வேர்
ஆக்க முசான முடக் கொத்தான் திரிகடுகு திரிபலையும் அங்கோலம் வேரும்
போட்டெரித்து வடித்தே
தாறெக்கத் தலையுந்தடவி மேல் சரவாங்கமும் தடவ நாடாது துலை மாந்தம் நன்று
தானே.

மோர் மாந்தம்: மருந்து:-

ஏட்டி முறண்டு தயிலமா நெய்யிவை யொன்றொரு படி பள்ளைப் பால் நாழி
மட்டவிரு நொச்சியிலைச் சாறு நாழி வயங் கொடாஞ் சுக்கு மிளகொடு திப்பிலியொடு
திரிபாலை யிந்துப்போடு வெண்காரம் கற்றுழை குமரிப் பாலிலரைத்து எரித்து
நாளும் உள்ளுக்குக் கொடுத்து மேல்த் தடவ நவையறுமே.

குழந்தைகளுக்கு சுரவ மாந்தப் பூபதிக் குளிகை:-

வாய் விளங்கம், அதிமதுரம், திப்பிலி, ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி உள்ளி, வசம்பு, சுக்கு, மிளகு, மாதவன் கிழங்கு, அப்பைக் கிழங்கு, செங்கத்தாரி

வேர் நாய்வேளை வேர், நிலவிளா வேர், நரியுணர் பெரியரிசி, வேர், சிறுகீரை வேர் தகரை வேர்; சுரை வேர், சுழல் பருப்பு, ஆமையோடு; கிராம்பு, நண்டோடு பெருங்காயம் அ்னபேதி; சாதித்திர பேதி, குப்பை மேனிக் கொழுந்து இவ்வ சமன் கூட்டி ஒரு சீலையில் பொட்டணங் கட்டி ஒரு சட்டியில் போட்டு உப்புப் போட்டுக் கம்பு தினை நெல்லுச் சோளம் இவை கூட்டிப் போட்டு உப்புப் பொரியு மட்டும் வறுத்து எடுத்துப் பொடுதலைச் சாறு ஒரு படி மோரு ஒரு படி இரண்டுங் கூட்டிக் குளம்பாகக் காச்சி இது விட்டரைக்கவும். இது முகிஞ்சால் வேலிப் பருத்திச் சாற்றி லொரு ாள் வெந்தயம் அரைப்படி ஒரு சட்டியில் சிவக்க வறுத்து ஒரு படி தண்ணீர் விட்டுக் குழம்பாய்க் காய்ச்சி யிது முகிய மட்டும் விட்டரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை பண்ணி நிழலுலத்தித் தானிய புடம் வைத்து எடுத்து வைத்துக் கொண்டு வெதுப்பில் மேல் வயறு ஒட்டினல் துளசிச் சாற்றில் குளியிடவும். வ ?

<u>வலிப்பு மாந்தத்துககு:-</u>

வேலிப் பருத்தி யிலைச்சாற்றிலொரு குளிகை யிடவும். விடா மெற்கு புளியஞ் சிராந் நிலத்தி லெரித்து தனல் தள்ளிப் போட்டு வேலிப் பருத்திச் சாறும் கோழி முட்டை வெள்ளைக் கருவும் தீய் எரித்த விடத்தில் விட்டுச் சுட லேபனம் பண்ணவும்.

<u>தோஷமுட்டி மாந்தத்துக்கு:-</u>

உண்டையு முருளையுமாய்த் தண்ணீர் போலேயும் கழியும். உச்சி குழிந்திருக்கும். கண் மூடியிருக்கும்.
இதுக்கு:- முடக் கொத்தான் சாற்றிலிடவும். இது தவளை யிடவும். பசு முட்டிக்கு வாந்தி எடுக்கும். வயறு போம். பொருமும். முலைப் பாலிலிடவும். படர் சீத தோஷத்துக்கு: தாக மெடுக்கும். நண்டு வளைத் தண்ணியிலிடவும்.

<u>மகா தோஷத்துக்கு:-</u>

தலையை நட்டுக் கொள்ளும். சாய முகம் பார்த்து உடம்பு கலி சுடிக்கும். இதுக்குப் பிள்ளை முளைச்ச விடத்தில் முளைச்சதிலிட்வும்.

<u>ஊது மாந்தத்துக்கு:-</u>

ஊதிக் கழியும். இதுக்கு சுக்கு, மிளகு, ஓமம், சத்து வெதுப்பி கொளிஞ்சி சாத்திலரைத்திடவும்.

<u>வெக்கை வெதுப்புக்கு:-</u>

வாய் வெளுத்திருக்கும். உடல் காயும். குளிரும். வயறு பேதிக்கும். இதுக்கு மணத் தக்காளிச் சாத்லிடவும். வேலி யணைஞ்சான் சாற்றிலிடவும். முட்டிக்குப் பச்சை நிறமாய்க் கழியும். முட்டி போலேயும் கழியும். கண் மயிர் அம்பு தொடுத்தாப் போலே சிவந்திருக்கும். இதுக்கு கிளுவைப் பட்டைப் பேய் மிரட்டியிலை ஆவாங் கொழுந்து அரசம் பழுப்புக் கருக்குப் பண்ணிச் சறு உள்ளி வசம்பு கூட்டி முலைப் பாலிலிடவும். மேலும் தவளையிடவும். வாந்தி எடுத்தால் வெடா வெள்ளி மாறுகையில் கட்டவும். பத்தியத் தோடே யிருக்கவும். பிள்ளைகளுக்கு மாந்தம் பூபதி கை கண்டது.

<u>பிள்ளைகளுக்குச் சகல வியாதிக்கு உருண்டை:-</u>

சிறு முன்னை வேர், தொட்டால் சுருங்கி வேர், சிறு புள்ளடி நில விளாவேர் வெள்ளாட்டு வாயுதவல் வெள்ளுள்ளி ஒரு கட்டைப் பூடு வசம்பு அசமதாகம் நற்சீரகம் மிளகு யிவை யெல்லாம் சரி சமன் இவை குளிகை பண்ணுகிற வகை சிறு புள்ளடி நில விளா வசம்பு யிவை மூன்றும் சரி சமன் நருக்கிச் சாறு புளிந்து கொண்டு முன் சொன்ன மருந்தெல்லாம் போட்டு அந்தச் சாறு விட்டரைத்து ஊது விளங்காய்ப் பிரமானம் உருண்டை செய்து நிழலுலத்திச் சூரிய புடம் வைத்து எடுத்துக் கொண்டு அநுபானம் நிலவிளாச் சாற்றில் முலைப் பாலில் ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். நடக்கிற பிள்ளைக்கு ஒன்று தவளுகிற பிள்ளைக்கு முக்கால் ஏந்து குழந்தைக்கு அறைக் குழந்தைக்கு கொடுக்கவும். சகல ரோகமுந் தீரும்.

<u>சிறு பிள்ளைகளுக்கு நெய்:-</u>

ஏலம், கோஷ்டம், செஞ்சந்தனம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, கடுககாய் நற்சீரகம், திப்பிலி, மஞ்சள், விலாமிச்சம் வேர், மாசிக்காய், மிளகு இவை ஒரொன்று ஒரு நிறையாகக் கொண்டு சட்டியில் நெய் சாய வைத்துத் ஊது விளங்காய் பட்டை வேலிப் பருத்திப் பூவும் ஒரு படி யீருள்ளி ஒரு படி நெய்யில் போட்டுக் காஞ்சவுடனே யிறக்கிக் கொள்ளவும். ஒரு கலசத்திலாற்றி வைத்துக் கொண்டு இரண்டு காசிடை உள்ளுக்குக் கொடுக்க எல்லா வியாதியுந் தீரும்.

<u>பிள்ளைகளுக்கு வாந்தி பிராந்திக்கு:-</u>

இலந்தைக் கொழுந்தும் பூவரசங் கொழுந்து ஒதியங் கொழுந்து, கருப்பந் தண்டு, வட்டத் திருப்பி, வசம்பு, வெதுப்படக்கித் தண்டு பாவட்டம் புல்லு தவசி முருங்கை கொட்டைப் பாக்கு ஒன்று சீவிப் போட்டுக் கொள்ளவும். இவை சரி சமன் வசம்பு கருக வறுத்துக் கொண்டு மற்ற மருந்தும் வறுத்துக் கொள்ளவும். உழக்காக காய்ச்சி மேற் பொடி கருஞ்சீரகம் ஆமையோடு சுட்டு பொடி பண்ணித் தூவிப் போடவும். இப்படி முப்பொழுது போடவும். வாந்தி பிராந்தி உப்பிசம் பொருமல் கழிச்சல் இது தீரும். தப்பாது திட்டம்.

<u>வீரிய வந்தனைக்கு:-</u>

உஷ்ண வாய்வு, பயித்திய வாய்வு, குன்ம வாய்வு, வயற்று வலி, எரி குன்மம், பயித்திய தோஷம், நெஞ்செரிப்பு, விக்கல், மிடைப்பு, அக்கி தோஷம், கருப்பு தோஷம், குண்டிகை அடைசல், குளிப் புண் மேக வெட்டை அக்கினி மாந்தம் இதுகள் முதலான வியாதிகளுக்கு மருந்து:-

சீரகம் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.½, யேலம் பலம்.½ ஆக பலம்.2½ நெல்லி வத்தல், சமன் பலம்.2½ யிதப் படி தண்ணீரானதை இறுத்துக் குளிக் கல்லிலே மருந்து போட்டு யிறுத்த கசாயம் விட்டு மெழுகு பதமாய் அரைத்து களச்சிக் காய் மருவாதி உருண்டை செய்து முன் சொன்ன வியாதிக் கெல்லாம் இள வென்னீரில் ஒரு உருண்டை கொடுக்கவும்.

<u>விகாள சன்னிக்கு</u> நொச்சிச் சாத்திலிடவும். பத்தியமில்லை.

<u>இருமலுக்கு</u> கடுக்காய் நெல்லிக்காய், சுக்கு இந்த முன்றும் சூரணம் செய்து வெ வென்னீரில் கொள்ள தேனில் கொள்ள இளநீரில் கொள்ள நெய்யில் கொள்ள, விளக்கெண்ணெயில் கொள்ள விரோசனமாம். மிளகு நீரும், சோறு முண்ணவும். வாத, பித்த சிலேற்றும முன்றினால் பட்ட இருமலுந் தீரும்.

<u>எலி கடிக்கு:-</u>

பூனை கஷ்டத்தை எடுத்து வாழப் பழத்தில் முன்று நாள் முழுங்கவும் தீரும்.

<u>நீர்த் தாரை எரிச்சலுக்கு வெண்ணெ:-</u>

பாங்கான கருநொச்சி யெலுமிச்சங் காய் பழச் சாறு பசுவின் பால்
யெள்ளி லெண்ணை வாங்கியே யொவ் வொன்று பிடியதாக மதித் தெரித்து
சாறு சுண்ட யெண்ணை யாக்கி தாங்காமல் கடைச் சரக்கு பச்சை வெட்டு
தனித்த தொரு குங்கிலியம் பலமு முன்று, ஒங்கியதோர் கற்பூர சலாத்து
ரெண்டு உகந்து கல்நார் ரெண்டு பொடி பண்ணிப் போடே.

போட்டு ஒரு கொதி கொதித்து வந்த வாறே புகழ் பெறவே யிறக்கி மறு சட்டி
தன்னில்
வாட்ட மற விட்டதிலே எண்ணெ சாய்த்து வாகாகச் சிலுப்பி யதில் வெண்ணை வாங்கி
நாட்டமற நாலாறு தண்ணீர் விட்டு நயமான பின் தனில் தாளியிலே போட்டு
பாட்டிமையாய் தினந் தினமும் தண்ணீர் விட்டு பாங்காக நிம்பக் காயளவு தின்னே.

தின்று மதிகாலையிலும் பத்து நாள்க் கொள்ள தீராத மேகம் வயற் றெரிச்சல்
நிற்கும்
சொன்ன தண்டில் நீர்த் தாரை யெரிச்சல் பித்தம் கணுக்க முறச் சீ விழுதல் சுகம
தாகும்
கன்னியர்க்கு மிப்படியே கொள்ள மேகம் காந்து மெய் குளிர்ந்து பிள்ளை யுண்டாம்
சொன்னபடி தப்பாது புண்களாறும் தொல்லுலகில் முனி உரைத்தார் வெண்ணெ தானே.

<u>வைத்தியனுக்கு வசிகர மார்க்கண்ட நெய் வைக்கும்படி:-</u>

நளினமடா மோடி விட்டு வைத்தியங் கேளு நன்றான பண்டிதற்கு சொல்வேன் கேளாய்
நளினமடா வெளியிலே நீ போகும் போது நன்றான தட்டெடை தான் கொள்ளு கேளு
நளினமடா ஆவின் நெய் படி சேர் நாலு நாயுருவி புளியாரைச் சாறு கேளு
நளனமடா பிரமிச் சார் துளசிச் சாறும் நற் கதலிப் பூஞ் சாறு மாதுளையின் சாறே.

2. சாறான குமரிச் சார் வில்வச் சாறு தகரைச் சார் வல்லானரைச் சாறுங் கூட்டி
மாறான வற்ப்புலா யிலையின் சாறு மணிக் குட்டித் தக்காளி மேனிச் சாறு
பேறான பொடி தழையும் செருப்பிடியின் சாறு பிசகாதே பதினஞ்சு படி கால்
வீதம்
நேராகச் சாறெல்லாம் நெய்யில் விட்டு நிலவாக வேடு கட்டி வெய்யில் வைய்யே.

3. வைத்ததொரு நெய் தனக்கு மருந்தைக் கேளு வாகான சுக்குடனே மிளகு சீரகம்
வைத்ததொரு கருஞ்சீரகம் தேவதாரம் கற்கடக சிங்கியுடன் பத்திரியுங் கூட
நெய்த்த தொரு மஞ்சியுடன் சாதிக்காயும் லவங்கமுடன் கஸ்தூரி மஞ்சள் சேறு
செத்தவன் போல் திரியாதே வசுவாசி யோடு சென்ன கரப்பட்டையொடு
மகறம் பூவே.

44. பூவோடு குங்குமப்பூ செண்பகப்பூ புன் முருங்கைப் பூவுடனே பதினேழாச்சு
பூவோடே சரக்கெல்லாம் களஞ்சி வீதம் புனிதமாய் ஆவின் பால் தன்னிலாட்டி
அதுவோடு நெய் தனிலே கரைத்து மைந்தா புகழான ஆவின் பால் படிதான்
நாலு
அதுவோடு செவ்விள நீர் பாலில் பாதி பூட்டடா நெய்யோடே உறவு சேரே.

5. சேர்த்த தொரு நெய்யதனை ரவியில் வைத்து தின முன்று சென்ற பின்பு அடுப்பிலேத்தி
நேயமாய் விநாயகற்குப் பூசை செய்து நீ காச்சிடு நெய்யதனை யிறக்கிக்
கொண்டு.
போத்தியே மனோன் மணிக்கு நிவேத்தியஞ் செய் புனிதமாய் வடுகனுக்கு அந்தமாம்
வேத்துமைகளில்லாமல் கொள்வதற்கு விடியு முன்னே தட்டெடை நெய்யுள்ளே
கொள்ளே.

6\. கொள்ளவே பத்தியந்தான் ஒன்றுமில்லை கொடிதான மேகமெல்லா மவிளாப் போச்சு
துள்ளுமே விந்து வந்து கடல் போல் பொங்கும் தூய்ய திருவாய் வெல்லாந் தூலை
தூரம் போகும்

மெள்ளவே தேகமது யிளைக்க் காணும் வீறான காந்தலொடு கண் புகைச்சல்
எவ்வளவு வுண்ட ஒட்டற் யிந்த நெய்தான் யேந்தியதோர் பொருமலொடு யீளை
போமே.

7\. போகுமே குன்மமொடு கிரந்தி சூலை பொல்லாத நீர்க் கடுப்புக் கல்லடைப்பு
சாகுமே வெட்டையொடு அஸ்தி மேகம் தங்காமல் மலக் கட்டு தாளலாரால்
வேகுமே சரீர மெல்லாம் அசதி வெற்ப்பு வேர்வையுடன் வாய் நீரும் பீனிசம் சோகை
யேகுமே யின்னெய்யைக் கண்ட போதே யேங்கியே பறந்தோடு மின்னங் கேளே.

8\. கேளப்பா மூலத்தில் சுழுக்குப் போச்சு கெறவதஞ் செய் ஆபன் என்ற வாய்வு
போச்சு

நீரப்பா ரெத்த பித்தம் கடுப்புப் போச்சு நிலையில்லா நீரளிவு நின்று போச்சு
வாளப்பா தேகமது வலுத்துப் போச்சு மத்ததெல்லாம் செயததில் வீண் பாடப்பா
தேளப்பா கொட்டுதல் போல் அரையாப்புக்கு செய்கிறேன் மருந்து தனை திற
மாய்க் கேளே.

<u>நேத்திரத்துக்கு தயிலம்:-</u>

அதிமதுரம், குங்குமப்பூ, நன்னாரி வேர், சந்தனம், அகில் கோஷ்டம், யேலம், லவங்கம், வசுவாசி நெய்தல் கிழங்கு, தகரம், தன்னி மிட்டான் விலாம்பிச்சி புழுகு செண்பகப்பு முத்தக் காசு, பச்சைக் கற்பூரம், பேரேலம், சாதிக்காய், வெள்ளறுகுக் கிழங்கு, கடுகுரோகணி வகைக்கு விராகனிடை. உ, பால் படி. உ, என்னை படி. உ, செவ்விள நீர் படி. உ, (பாகம் எழுதப்படவில்லை).

<u>பவழ பற்பம் பண்ணும் விபரம்:-</u>

பவழம் விராகனிடை. 10, செவ்வகத்திச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி உலர்ந்த பின்பு புடத்தில் போடவும். பற்பமாம். அனுபானம் பசுவின் வெண்ணெயில் திங்கவும். நீரளிவுக்கும் நல்லது. வெள்ளைக்கு நெய்யிலே திங்கவும். ரெத்தப் பிரமியத்துக்கு நல்லது. இதுக்குப் பத்தியம் காரம், புளி, புகை விடவும்.

<u>சீப் பிரமியம், கிரந்திப் பிறமிக்கு மருந்து:-</u>

அல்லிக் கிழங்கு அரைத்துப் பசுவின் பால் விட்டுக் குழப்பி மூன்று நாள் கொள்ளவும். மறு பத்தியம் உப்பு புளி விடவும்..

<u>பவழ பற்பம் பண்ணுகிற விவரம்:-</u> பவளம் விராகனிடை. 10, முயல் ரெத்தம் விட்டு அரைத்து வில்லை தட்டி ஓட்டில் வைத்து சீலை மண் செய்து கெசபுடம் போடவும் பற்பமாம். அந்தப் பற்பம் நீரளவுக்கு நெய்யில் திங்கவும். நீர்க் கட்டுக்கு திங்கவும். புளி, புகை விடவும்.

<u>அரிதார பற்பம்:-</u>

பொன்னரிதாரம் எருக்கம் பால் விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து புடம் போடவும். பற்பமாம். இந்தப் பற்பம் குளிர் சுரத்துக்கு ஆகும். காமாலைக்கு தேனில் கொடுக்கிறது. கையாந்த கரைச் சாத்திலும் கொடுக்கவும். சூலைக் கட்டுக்கு பாவட்டைச் சாத்தில் கொடுக்கவும். பத்தியம் உப்பில்லாப் பத்தியம்.

<u>சிறு பிள்ளைகளுக்கு நெய்:-</u>

ஏலம், கோஷ்டம், செஞ்சந்தனம், கருஞ்சீரகம், கொத்தமல்லிகை, கடுக்காய், நற்சீரகம், திப்பிலி, மஞ்சள், இலாமிச்சம் வேர், மாசிக்காய், மிளகு இவை ஒரொன்று ஒரு நிறையாகக் கொண்டு சட்டியில் நெய் காய வைத்துத் தூது விளங்காயும் பட்டை வேலிப் பருத்திப் பூவும் ஒரு படி சுருள்ளி ஒரு பிடி நெய்யில் போட்டுக் காஞ்சவுடனே இறக்கிக் கொள்ளவும். சிறு கலசத்தி லூற்றி வைத்துக் கொண்டு காசிடை உள்ருக்கு கொடுக்க எல்லா வியாதியுந் தீரும்.

இலந்தைக் கொழுந்து, பூவரசங் கொழுந்து ஒதியங் கொழுந்து, கருப்பந் தண்டு சுக்கு, வட்டத் திருப்பி வசம்பு வெதுப்படக்கித் தண்டு பாவட்டம் புல்லு, தவசி முருங்கை கொட்டைப் பாக்கு ஒன்று சீவிப் போட்டுக் கொள்ளவும். இவை சரி சமன் வசம்புகருக வறுத்துக் கொண்டு மற்ற மருந்தும் வறுத்துக் கொள்ளவும். உழக்காகக் காய்ச்சி மேல் பொடி கருஞ்சீரகம் ஆமை ஓடு சுட்டுப் பொடி பண்ணித் தூவிப் போடவும். இப்படி முப்பொழுது போடவும். வாந்தி, பிராந்தி, உப்பிசம் பொருமல் மலக் களிச்சல் இது தீரும்.

<u>பூழுக் கடிக்கு:-</u>

ஆவாரங் கொழுந்து கொண்டு வந்து பிட்டாக அவித்துப் பிளிந்து வார்க்கவும். ஆலமா விழுது கொண்டு வந்து ஆவாரப் பூ பருப்பு அரைத்து வார்க்க நிற்கும். கை கண்டது.

<u>~~கடகறைக்கு~~:-</u>

கடகறைக்கு:-

வண்ணக் சிறுய் வாய் பேசாமல் கொண்டு வந்து சற்றே வசம்பு ஒருளிப் பூண்டு சாலடித் தண்ணீரிலரைத்து வார்க்கவும் தீரும். கை கண்டது.

செவ்வாப்புக்கு:-

இண்டங் கொழுந்து அரைத்துப் ப வின் நெய்யில் கலக்கி வார்க்கவும்.

சாமுடிக்கு:-

விடத் தரங் கொழுந்தும் நற்சீரகமும் அரைத்து சால்டித் தண்ணீரில் வார்க்கவும்.

வயறு திக் கழிச்சால்:-

வேலிப் பருத்திக் கொழுந்து சற்றே அரைத்து முலைப் பாலில் கலக்கி வார்க்கவும் தீரும்.

பிள்ளைப் பிணி தோஷ ணும் மருந்து:-

நிழல் தோஷம் கடக்க நிற்று குளித்துப் பிள்ளையை யெடுத்து முகந்த தோஷம். விலக்கச் சீலை வண்ணாக்குப் போடாமல் தோச்சுடுத் தின சீலை முந்தானை அடிபட்ட தோஷம் ஆக யிந்த மூன்று தோஷத்துக்கும்

இதுக்கு செய்யும்படி:-

கும்பந் தாவித்த தண்ணீர் ஒடுகிற ஆற்றுத் தண்ணீர் குளத்துத் தண்ணீர் கிணற்றுத் தண்ணீர், வண்ணான் துறையில் தண்ணீர் இந்த ஐந்து தண்ணீரும் பிள்ளையைக் குளிப்பாட்டவும்.

துவளை:-

விளாவிலை வேலிப் பருத்தி யிலை, முடக் கொத்தானிலை, ஊமத்தையிலை, துவலை செய்யக் குளிப்பாட்டவும். தகடெழுதிக் கட்டவும்.

முகடெடுத்த பிள்ளைக்கு செய்யுங் குணம்:-

உடம்பு கனத்திருக்கும். பருக்க முழிக்கும். பல காலும் தனுக்கு ஏணுக் கென்று அழும். பருப்பு போலே கரைத்தாப் போல் வயறு போம். கண்ணிமை தடித்தி ருக்கும். நாளொன்று நேரத்துக்கு நேரம் ஈ கடிச்சாப் போலே யிருக்கும். முழங்கா க்குக் கீழ் குறுந்திருக்கும். முகட்டைப் பார்த்துச் சிரிக்கும். கலைக் கொழுந்து நட்டமா யிராது. உச்சி குழிந்திருத்குக்கழுத்து நொந்திருக்கும். விலாக் கொடி குழிய வாங்கும். மேலிளைப் புண்டா ம். வயறு பொருமி முலை குடியாது. ஒரு நேரம் முலை குடிக்கும். வயறு கீரை கரைத்தாப் போலே போகும். நீரிந்திரியமாகப் போகும். இதுக்குச் செய்யும் படி ஐந்து தண்ணீர் குளிப்பாட்டி எங்க பிலையும், என்னையும் வெந்து ஐந்து நாள் பூசிக் குளிப்பாட்டவிம்.

தேரைத் தோஷத்துக்கு:-

அணைத் தோஷ எச்சித் தோஷம், முலைத் தோஷம், நாவேறு கண் கொதி மலடிகள் பார்த்துப் பெரு மூச்செறிந்த தோஷம், மாதா பிதாப் பார்த்துக் கண்ணேறு நாவேறு தோஷம் சொறித்த் தவளை குதித்தது கோளி அடை கிடந்து பறந்த தோஷம் செய்யும் குணம்:-

நடை மடக்க வொட்டாது மேல் மூச்செறிந்து குழிய வாங்கி யிளைக்கும். பிரண்டு கொள்ளும் பதினெட்டு வன்மையாகக் கழியும். ஒருக் காலே நாற்றமா யிருக்கும். உடல் சேரக் குளிந்திருக்கும். கொடிவிலாக் குளிரும்.

இதுக்கு மருந்து:-

விளாம் பட்டை, ஆலம் பட்டை, அரசம் பட்டை, மாம்பட்டை, அத்திப் பட்டை, மருதம் பட்டை, நாவல் பட்டை, கல்லத்திப் பட்டை, ஓதியம் பட்டை ஆக இந்த ஒன்பது வகையு மிடித்து ஐந்து வள்ளக் காடியும் விட்டு மிடாவிலே யிட்டு அழுகக் காடி வார்த்து ஐந்து நாள் குளிப்பாட்டவும். ஐந்தா நாள் காவலா யிருக்கிற சமமான சான வரைக் குறித்து மூன்று பேருக்கு பிட்சை கொடுக்கத் தீரும்.

கடகறைக்கு:-

கழுதைக் குழம்பிச் சிறுநீர் விட்டு அரைத்து உள்ளுக்கு கொடுக்கவும். மேலுக்குத் திமிரிடவும். சின்னித் தழை மூன்று விளாந் தழை மூன்று, பிள்ளை தங்காத் தழை மூன்று இது வெல்லாம் நய்யத் தட்டி மேலுக்குப் பூசவும். வசம்பு சற்றே ஒருள்ளிப் பூடு சற்றே போட்டுதுவலை யிடவும்.

குழந்தை முட்டடைப்பாலுக்கு:-

சுண்டைத் தழை நாலு, ஈர வெங்காயம் கூடப் போட்டு தட்டிப் பிழிந்து உள்ளுக்கு வார்க்கவும்.

ஏங்கலுக்கு:-

2.5.64.

ஏங்கலுக்கு:-

பூச்சிக் கூடு மரத்திலே ஒட்டி யிருக்கிறதை எடுத்து அதிலே யிருக்கிற பூச்சி நொய்யரிசி போலே யிருக்கும். அதை எடுத்துச் சற்றே வெல்லம் போட்டு நேக அரைத்து பசுவின் வெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்க வும். கை கண்டது.

தலைச் சிரங்குக்கு:-

சிறு புள்ளடி சமூலமும் பிடிங்கிச் சிறு நீர் வார்த்தரைத்துப் பூசத் தீரும். ஏங்கலுக்கு இதுவும் ஆகும்.

பிள்ளை காலோடே கால் பின்னிக் கிடந்தால்:-

குருவீச்ச மாறு வடக்கே போற வேர் பிடுங்கி வந்து காயப் போட்டு பாலில் ஒரு காசளவு அரைத்துக் கொடுக்கவும். மேலுக்கு திமிரிடவும். அந்த மருந்தை வலது கையில் கட்டவுந் தீரும்.

குழந்தைகளுக்கு முலைப் பாலெண்ணை கணத்துக்கு:-

மரயெண்ணை 3/4, முலைப் பால் 3/4, முசுமுசுக்கைச் சாறு 3/4, மணத்தக்காளிச் சாறு 3/4, நரிப் பயத்தஞ் சாறு 3/4, ஈர வெங்காயச் சாறு 3/4, கற்றாழைச் சாற்றில் கடுக்காய்ப் பொடி போட்டுப் பிசைந்த சாறு 3/4, இந்த ஏழு வகையும் ஒன்றாகக் கலந்து எண்ணைச் சட்டியில் விட்டு யிரா வடுப்பில் வைத்துக் காய்ச்சி சிறு சலங்கைக் கொதியிட்டு அடுப்பில் வைத்து மறுநாள் காலமே எரித்து மெழுகு பதத்தில் வடித்து நற்சீரகம், பொன்னிறமாக வறுத்துக் கலசத்தில் போட்டு அந்த எண்ணை விட்டு நெல்லுப் பானையில் கலசத்தை வைத்துப் பதனஞ் செய்து கொண்டு குழந்தைகளுக்குச் சற்றே சுட வைத்துக் காசிடை போடவும். இதுக்கு தீரும் வியாதி சுளி கணம், வாங்கு கணம், நீர்க் கணம், வறக் கணம், கண மென்னப் பட்டதெல்லாந் தீரும். கை கண்டது.

மாந்தத்துக்கு:-

விளக் கெண்ணையில் கற்றாழைச் சாறு எரித்துப் பிள்ளைக்குத் தக்கது கொடுத்தால் விரேசனமாம். இதுக்குக் கணம் போம், மாந்தம் தீரும்.

அன்று பிறந்த பிள்ளை வயறு கழிய:-

முடக் கொத்தானிலையைத் தட்டி ஒருளிப் பூண்டு கூட்டி ஆமணக் கெண்ணையில் கொதிக்க விட்டு ஆற விட்டுப் புகட்டவும். மேலுந் திமிரிடவும்.

வால கிறிசைக்கு:-

வெள்ளைச் சுண்டை வேர் வடக்கே போற வேர் ஒரு யிறை அளவு பட்டை தட்டி நருக்கி வசம்பு ஒரு பணவிடை. ஒருக் கட்டைப் பூண்டு ஒரு பணவிடை பெருங்காயம் குன்றியிடை காவிக் கல்லு குன்றி யிடை கருங் கம்பிளி சுட்டு ரெண்டு காசளவு காசளவு வைத்து குதிரைக் குளம்பு தண்ணி சுத்தி உரைத்து ஒரு காசளவு எடுத்து மூன்று தட்டின மருந்தைக் கலந்து இது வெல்லாம் துணியில் வைத்து கால் மடி கூட்டி ஒரு சங்கொட்டை பிளிஞ்சு உள்ளுக்கு கொடுக்கவும். உச்சியிலிருந்து பிளிந்து உள்ளங்கால் மட்டுந் தவளையிடவும். மூன்று நாள் சிறகு வீசவும். பத்தியம் வெந்நீர் தண்ணீரியும் சோறும் உப்புத் தவிர்க்கவும்.

கக்குவானுக்கு:-

சீயக்காய் ஒன்று நாயுருவி ஒன்று விட மஞ்சள் ஒன்று இந்த மூன்றையு மரைத் துப் பழந் தண்ணீரில் கொடுக்கவும். நிற்கும்.

பிள்ளை பருக்க:-

பழம் பாசி வேர், வட்டச் சிவசிவப்பை வேர், புளியாரை வேர் சிறு புள்ளடி வேர் சிறுகரை வேர், தகரை வேர் இவை சமன் பிடித்து வேக வைத்து எண்ணை ஒரு படியில் போட்டு சூரிய புடம் வைத்து ஒரு துட்டெடை கொடுத்தால் மேலுந் தவளை யிடப் பிள்ளை பருக்கும். கால் மேல் பின்னின பிள்ளை கால் விடும். வயிற்று கடுப்பு நிற்கும். கணமுந் தீரும். இது கொடுத்தால் உடம்பு சலவை யாகும். பழைய சுரம் விடும். இளைப்பு நிற்கும்.

பிள்ளைகளுக்கு மாந்தக் கழிச்சலுக்கு எண்ணை:-

பெருந் தும்பைச் சாறு படி.௧, வெள்ளாட்டுப் பால் படி.௨, ஆமணக் கெண்ணை படி.௨, கடுகு ரோகணி பலம்.௧, ஆரிய சிவதை பலம்.௲, வெள்ளாட்டு பால் வார்த்தரைத்து எண்ணெயில் சாறுகளும் கூட விட்டு சிவதையும் கடுகு ரோகணியுங் கூடக் கலந்து பதமாகக் காய்ச்சிக் கடுகுடனே கலசத்தில் வைத்துக் கொண்டு பிள்ளைகள் வயதுக்குத் தக்கது மட்டாகக் கொடுக்கவும். மாந்தக் கணம் சீத சுரம், நாலு நாளை மாறல் சுரம் இவை யெல்லாந் தீரும்.

கருக்கு:-

கருக்கு உவான் கொழுந்து முருங்கைக் கொழுந்து நொச்சிக் கொழுந்து

கொழிஞ்சிக் கொழுந்து, பொடுதலை வேலிப் பருத்திக் கொழுந்து, வசம்பு, சுக்கு, ஓமம் ஆக வகை யெல்லாம் சட்டியில் போட்டுக் கருக்கி அந்தக் கருக்கிலே அரைப்படி தண்ணீர் விட்டு வற்றக் காய்ச்சி அந்தத் தண்ணீர் இறுத்துக் கொடுக்கத் தீரும்.

பிள்ளை பருக்க நெய் :-

விஷ்ணு கிரந்தி சமூலமும், வெள் வெங்காயம் ஒருக் கட்டைப் பூடு உரிச்சு நரம் பெடுத்துப் போட்டு இது இரண்டுந் தட்டி ஒரு படி பசுவின் நெய்யில் போட்டு வேக வைத்து பதத்துக்கு வந்த பிறகு இறக்கி ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு அரைச் சங்கு நெய்யும் அரைச் சங்கு முலைப் பாலும் ஒன்றாய்க் குலுக்கிப் புகட்டவும். பிள்ளை பருக்கும்.

பிள்ளைகளுக்கு ஆட்டுத் தந்திரம் :-

வெள்ளாட்டுடலும், கடுகு ரோகணியும் சரி சமன் காடியிலுரைத்துப் பூசக் குழந்தைகளுக்குப் பிணி உள்ள தெல்லாம் போம். காச்சலும் விடும்.

பிள்ளைகளுக்கு கல்லுக்கு மருந்து :-

மாம்பட்டை தட்டிப் பசுவின் பாலில் பிழிந்து ஒரு கொள்ளத் தனை சுண்ணும்பு கரைத்துப் புகட்ட மாறும். பாகலிலைச் சாறும் தேனும் கலந்து கடுக்காய்ப் பொடி தூவிக் கொடுக்க கல் மாறும்.

சிறு பிள்ளை மாந்தத்துக்கு :-

உத்தாமணி பாவட்டை உகந்த சங்கு கார்த்தொட்டி மற்று முள்ள கொழிஞ்சி மதித்த முருங்கை நுணா வேர்க்குப் பொடுதலையும் வேண்டும் ஓமந் திப்பிலியும் உற்ற வசம்பு மருந்துள்ளி உயர்ந்த சீரகம் ஆமை ஓடும் எட்டுக் குணி நீர் எட்டொன்றாய் குறுக்கிய நீர் உற்ற மருந்து அரைத் துண்ண உகந்த ஆமம் ஒழிந்திடுமே.

மிடிக்கு :-

கொழிஞ்சி யிலைச் சாறும், அவரை வேர்த் தொப்பையும் ஆவாரை அரும்பும் பதினைந்து ஒருக் கட்டை வெள் வெங்காயமும் வசம்பு அரைத்து வார்க்கவும். மேலுந் திமிரிடவும். பதத்தில் வார்க்கவும்.

வறமிடிக்கு :-

வற மிடிக்கு அடையாளம் ஆண் பிள்ளைக்கு யிடது முழங்கால் சந்திலே கை வைத்துப் பார்க்க நடு நரம்பு துடிக்கும். உதடு உணர்ந்திருக்கும். கண் மயிர் நட்டமா யிருக்கும். தண்ணீர்த் தவனமாகும். உச்சி தாழ்ந்திருக்கும். பெண் பிள்ளையானால் வலது கை நரம்பு துடிக்கும்.

இருக்கு மருந்து :-

அசித் தரத்தி யிலை, எலுமிச்சங் காயளவு விடத் தோரங் கொழுந்து ஒரு பூண்டு வெங்காயம், வசம்பு யிது நாலையும் அரைத்து வேப்பங் கோல் ஒரு விரல் முக்கால் விரலளவில் நறுக்கி வெள்ளையாகச் சீவிக் கன்னிகையில் நூல் வாங்கிச் சற்று முறுக்கி வேப்பங் கோல் இரண்டு புறமும் கோதைஞ்சு நூல் கட்டி பிள்ளைக்கு மாரடை போட்டு மருந்து முலைப் பாலில் பிள்ளைக்கு வார்த்து மருந்தை நெத்திக்கு பொட்டிட்டு மேலுக்குத் தவலை யிட்டு ஆண் பிள்ளைக்கு பொட்டைக் கோழிப் பிச்சைக் கொடுக்க பெண் பிள்ளைக்கு சேவல் பண்டிதனுக்கு கொடுத்து வளர்க்கச் சொல்லவும். ஞாயிற்றுக் கிழமை யிப்படிச் செய்து பிள்ளையும் தாயும் வெளிப் பிறப்படாமல் யிருக்கவும் தீரும்.

மிடிக்கு :-

வெள்ளாடு அசை யிடுகிற போது மிடறு பிடிச்சு அந்த யிரையை வாங்கி வாய் பேசாமல் கொண்டு வந்து வசம்பு ஒருள்ளிப் பூடு அசமதாகமுங் கூட்டி சாலடித் தண்ணீரில் அரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுந் தவலையிடவும். வேடர் வள்ளி வடக்கே போற வேர் கொண்டு வந்து அரைத்துத் தண்ணீரில் கலந்து உள்ளுக்குக் கொடுத்து நாரை யுரித்து இரண்டு கையிலும் கட்டிக் கழுத்திலுங் கட்டவும்.

வறமிடிக்கு :-

நண்டுக் குழித் தண்ணீர் கொண்டு வந்து நண்டைத் தண்ணீரிலே விட்டு அந்தத் தண்ணீர் வார்க்கத் தீரும்.

மெலிந்த பிள்ளைக்கு நெய் :-

சுக்குட்டியை அடித்து தலையை அறுத்துப் போட்டு நெய்யில் வேக வைத்து மெலிந்த பிள்ளைக்குந் திப்பாலூட்டி வார்க்கவும். பிள்ளை பருக்கும்.

வறமிட பசுமிடிக்கு :-

இந்த வேரை நாரை யுரித்துப் போட்டு கையிலும் காலிலும் கட்டவும்.

(வேறு)

சீறிக் கொழுந்து மாங்காய் நாறி முத் தெருக்கன் செவி பெருந் தும்பைக்

கொழுந்து யிலந்தைக் கொழுந்து மாதளங் கொழுந்து, மயிரோசிகைச் சாறு, பெருங்காயம், வெண்காயம், வசம்பு, மிளகு, ஓமம் இது வெல்லாம் இள வறையாய் வறுத்துக் கொண்டு குதிரைக் காலிற் குளம்பு கூட்டி இது வெல் ாம் நேக வரைத்து சுண்டைக் காயளவு உருண்டை செய்து முலைப் பாலில் மூன்று நாள் ஆறு பொழுது வார்க்கவும். வயற்றுக் கழிச்சலும், வாந்தியுந் தீரும். யிடியுந் தீரும். இதுக்குத்

<u>துவலை மருந்து</u>:-

சீறி யிலை, நிலவிளாவிரி யிலை, பெருந் தும்பை யிலை, வேப்பிலை, வேலிப் பருத்தி யிலை, வசம்பு யீருள்ளிப் பூண்டு இது வெல்லாம் நருக்கிச் சிறு நீரில் பிசறித் துவலை யிடவும். சற்றே எடுத்துப் பொட்டணமாகக் கட்டி ரெண்டு கையிலேயுங் கட்டவும்.

<u>தூ குழி மிட்டுக்கு</u>:-

மல்லிப் பூப் போலே யிருக்கும் அந்த வேரைக் கொண்டு வந்து ஒருக் கட்டைப் பண்டும் வசம்பும் தட்டிப் பிழிந்ததனை சற்று விளாவிலையு மரைத்து திமிரிட்டு உள்ளுங் கொடுத்து மேலுந் திமிரிடவும். இதுகள் வாய் பேசாமல் செய்யவும்.

<u>சாகுழி வாந்தி பிறந்திக்கு</u>:-

பெருமுட்டை தாறியும் பருத்திக் கொட்டையும் துவைத்து உள்ளுக்கும் வார்த்து மேலுந் திமிரிடவும்.

<u>சகல பிணிக்கு மருந்து: துவளை</u>:-

குதிரைச் சிறகு எடுத்து பெண்ணுக்கு ஒன்று ஆணுக்கு கோழி கைக் குதிரை யிலெடுத்து வசம்பு ஒருள்ளிப் பண்டு சற்று அறுகம் புல்லு வேரும் முள்ளித் தழையும் வசம்பும் மஞ்சள் இது வெல்லா மரைத்துத் துவளை யிட்டுத் தண்ணீர் வார்க்கவும். பிறகு எருமைச் சாணி துவளையிட்டுக் கூடத் தண்ணீர் வார்க்கவும். பொருமி யிலையும் வசம்பும் ஒருள்ளிப் பூண்டும் கூட்டி சாறு பிழிந்து உள்ளுக்கு வார்க்கவும். மேலுந் துவளை யிடவும்.

<u>செவ்வாப்புக்கு என்னை வகை</u>:-

சிலந்திக் கொடிக் கிழங்கு அமுக்கிருக் கிழங்கு செங்கத்தாரி வேர், சேப்பு நெருஞ்சி கரு நொச்சி, கறடி நகரிப் பட்டை, சுக்கு, வசம்பு, ஈர வெங்காயம், ஏலம், கஸ்தூரி மஞ்சள், சந்தனம் இது வெல்லாம் சமபாகமாய்க் கூட்டி ஒரு பிடி விள்க் கென்னையில் பதமாகக் காய்ச்சி பதனம் பண்ணி வைத்துக் கொண்டு தினசரி ஒரு பணவிடை என்னை உள்ளுக்குக் கொள்ளவும். பத்தியம் பல கறியுமாகும்.

<u>புள்ளுத் தோஉடத்துக்கு</u>:-

கருங் குட்டித் தக்காழி கரை மூங்கில் யிலை யிந்த மூன்றிலையும் நருக்கிச் சாறு வாயிலேயும் ஒரு துளி வார்த்து மேலுந் துவளையிடவும். இண்டங் கொழுந்து நெய்யுடனே வேக வைத்து மேலும் பூசப் போம்.

<u>குழந்தை ஊற மருந்து</u>:-

அமுக்கிலா வேர், களச்சி வேர், கரும் புண்டக்கு வேர், சிறுகீரை வேர், பன்னை வேர், வெள்ளைச் சாறணை வேர், கல்க் கொழிஞ்சி வேர், நல்ல கொழிஞ்சி வேர், சேப்பு நெருஞ்சி வேர், செங்கத்தாரி வேர், நாய் வேளை வேர், நாயுருவி வேர், ஊமைப் புத்து மேலிருந்த விளிம்பி வேர், விஉஷ்ணு கரந்தை, வேர், முசல்ச் செவி வேர் ஆக வேர் 16-ம் கரடி நகரிப் பட்டை, புங்கம் பட்டை, ஊஞ்சல் பட்டை, வேப்பம் பட்டை, ஒதியம் பட்டை, உகாய் பட்டை, நீலிவேர் கடைச் சரக்கு சுக்கு, மிளகு, நற்சீரகம், வெந்தயம், கடுகு, ஓமம், ஏலம், வசம்பு, யீர வெங்காயம், கருங் குங்கிலியம், களிப் பாக்கு ஆக யிந்த மருந்தெல்லாம் ஆமணக்கென்னை முன் வடிச்சது அல்லாமல் பின் வடிச்ச என்னையில் ஒரு படி என்னையில் ஊறப் போட்டு முகம் மூக்குத் தண்டு ஆண் பாடு, கை விரல் இதுகளெல்லா மிட்டு மத்திச்சு உடம் பெங்கும் தடவவும். மூன்று நாளைக் கொருக் காலை இந்த ஊறின என்னையை வயறு கழிய வார்க்கவும்.

<u>குழந்தைக்கு சுண்டு காரம்</u>:-

பறத்தங் கொழுந்து, பொடுதலைக் கொழுந்து, நெல்லிக் கொழுந்து, நெல்லிக் கொழுந்து, பெருமட்டை, நாறிக் கொழுந்து, தூதுவளைக் கொழுந்து, சின்னி கருவேலா சுரைப் பூசனிக் குருந்தும் பூவும் தும்பை கொழிஞ்சிக் கொழுந்து ஆக 22 ஓமம், கடுகு, சீரகம், வெந்தயம், சுக்கு, மிளகு, வசம்பு, ஒருள்ளிப் பூ, பூண்டு, கருங் குங்கிலியம், களிப் பாக்கு, இது வெல்லாம் அரைத்து கடலைக் காயளவு சுண்டைக் காயளவு உருண்டை செய்து உலத்தி வைத்துக் கொண்டு முழுகின நாள் ஒரு உருண்டை உரைத்து வார்க்கவும். மறுநாள் குருத்தி மருந்து பருத்திக் காயாவது புளி யற்கு ஆவது கொண்டு வந்து ஏலம், சீரகம், விட்டு அரைத்து சங்கும் தேற்றுங் கொட்டையும் கலங் கொம்பும் அரைத்துக் கொண்டு முதலை றப் போட்ட குருத்தியில் நெய் வார்த்து பாலடித் தண்ணீரிலே கலந்து வார்க்கவும். இப்படி வார்க்கவும் தீரும்.

<u>குழுத்தி மருந்து</u>:-

அம்மான் பச்சரிசி வேர், குழி மிட்டான் வேர், செப்பு நெருஞ்சி வேர்,

கீழாநெல்லி வேர், சவரி வேர், விஷ்ணு கிராந்தி வேர், பற்படாகம், கருஞ்சீரகம், ஏலம், திப்பிலி, ஈர வெங்காயம், கடுக்காய், நல்ல சீரகம், தேற்றாம் விரை, கலங் கொம்பு கழச்சிப் பருப்பு இதுகள் பசுவின் நெய்யிலூறப் போட்டுச் சூரிய புடம் வைத்து எருமைப் பசுச் சாணி கொண்டு வந்து சீலையில் பொட்டணங் கட்டி சங்கில் புழிந்து முலைப் பாலுங் கறந்து இந்த நெய்யில் ஒரு காசளவு குத்தி குலுக்கி கலந்து வார்க்கவும். இந்தப் படி ஒன்றை விட்டொரு நாள் விடியக் காலமே வார்க்கவும் தீரும்.

<u>விழி பெருக்க மருந்து:-</u>

கடுக்காய் தட்டி உள் விரையை எடுத்துக் கொண்டு சத்து வாய் பிளக்கத் தட்டி ஈர வெங்காயம் தொலிச்சுத் தட்டி ஒரு முழுக் களச்சியும் இது வெல்லாம் தொட்டெண்ணெயி லூறப் போட்டு சூரிய புடம் வைத்துக் காலமேயும் அந்தியும் ராத்திரி படுத்துக் கொள்ளுகிற போதும் இப்படி மூன்று நேரமுங் கண்ணுக்கு குத்தவும். கண் முழி பருமமாய் நன்றாய் யிருக்கும். கடகரைக் கருங் கம்பிளி கலங் கொம்பு பருந்தினிற் கோழி யிறகு வச்சணைப் பட்டை இது ஐந்தும், வசம்பு ஒருள்ளிப் பூண்டு இதுகளரைத்துக் கொண்டு கம்பிளி யிறகு கொம்பு கருக்கி அரைத்து யிது வெல்லா மரைத்துக் கலந்து உள்ளுக்கு வார்த்து உச்சியும் ரெண்டு பிறத் தள்ளையும் கடகிலேயும் முதுகு பிறத்தாலேயும் யிறங்கத் தடவவும். ஊஞ்சல் பட்டையும் சிறு கடுவாட்டுத் தலையும் ஒருள்ளிப் படு வசம்பு சத்து யிள வென்னீர் வாத்தரைத்து முலைப்பாலில் சாரித்து வார்க்கவும்.

<u>சூடு வைக்கிற விவரம்:-</u>

கருது காயப் போட்டு அள்ளைக் கடகிலே நிலை யறிந்து சிலுவைச் சூடாகச் சுடவும்.

<u>முட்டடைப்பாலுக்கு:-</u>

முள்க் கொருஞ்சி பசுவின் பாலில் கொடுக்கத் தீரும். நாரணன் சுள்ளியைத் துவை துவைத்து தண்ணீரில் பிசைந்து வார்கவும் தீரும்.

<u>பிள்ளைகளுக்கு மாந்தக்கு குளிகை:-</u>

வாய்விளங்கம், அதிமதுரம், அதிவிடையம், திப்பிலி, மிளகு, உள்ளி, வசம்பு, பெருங்காயம், ஓமம், கழச்சிப் பருப்பு, ஆடை ஒடு வேளை விரை இவை சமன் இதுக்குச் சமன் பொடுதலை விரை கூட்டிப் பொடுதலைச் சாறு விட்டரைத்து சூரைக்காய் போலே உருண்டை செய் வைத்துக் கொண்டு கையும் உச்சியும் குழுந் தால் வயறும் நெஞ்சும் சுட ஓமக் கசாயத்திலிடவும். யிருமலெடுத்தால் கண்டங் கத்திரிக் கசாயத்திலிடவும். வயறு திறல் வேலிப் பருத்தி வெதுப்பின சாற்றிலிடவும். வேளை விரை பொதும்பி விரை தகரை விரை, பொடுதலை விரை இவை வறுத்து பொடியும், ஒரு குளிகையும் கூட்டி முலைப் பாலிலிட எல்லா மாந்தமுந் தீரும். கை கண்டது.

<u>பிள்ளை சகல வியாதிக்கு நெய்:-</u>

பறங்கிப் பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, யரத்தை, யிருவகைச் சீரகம், ஏலம், அதிமதுரம், கிராம்பு, கருவாப்பட்டை, கொத்தமல்லி, சென்பகப்பூ, மிளகு, வசம்பு, உள்ளி ஓமம், ஈசுர மூலி வேர், குடபத்திரி வேர், செப்பு நெருஞ்சி வேர், செங்கத்தாரிப் பட்டை, திப்பிலி, திப்பிலி மூலம், கடல் நுரை, கோட்டம் அத்விளாம்பழம், வேர், பற்படாகம், மிளகு, தக்காளி, நெய்க் கொட்டான் பழம், வாய் விளங்கம் பழம் பாசி வேர் தகரை வேர் ஈக மருந்து 33 பசுவின் நெய் படி.க, மருந்து வகை யொன்றுக்கு அரை விராக னிடை அரைக்கி நெய்யில் போட்டுக் காய்ச்சிப் பொன்னிறமானால் இறக்கி வைத்து சிறு பிள்ளைகளுக்கு காசிடை முதிர்ந்த பிள்ளைகளுக்குத் துட்டெடை கொடுக்க மாந்தம் பதினெட்டும், கனம் பதினாறுந் தோஉம் பதினெட்டும் பிணி முப்பத்திரண்டும் சகல வியாதியுந் தீரும்.

<u>அக்கரக் காச்சல் கணைக் காச்சலுக்கு என்னை:-</u>

பழம் பாசி வேர், கணப்பூடு, அம்மான் பச்சரிசி, நரிப் பயத்தம் வேர், முசுமுசுக்கை வேர், தகரை வேர், வெள்ளிண்டங் கொழுந்து, பொன்னாங்காணி வேர், வல்லாரை சிறு புள்ளடி, சிறுகீரை வேர், மணத்தக்காளி வேர், யிதுகளின் யிலை துவைத்துச் சாறு பிழிந்து யிதுகளின் வேர் அளாக்கி விளக்கெண்ணை சாறு விட்டு அந்தத் அரைத்தும் போட்டு ஈர வெங்காயம், சாதிக்காய், சாதிப் பத்திரி, சென்பகப்பூ, கருஞ்சீரகம், ஏலம், அதிமதுரம், நற்சரகம், கிராம்பு இதுகள் பொடி செய்து என்னை காய்ச்சி யிறுத்துக் கொண்ட பிறகு கடைச் சரக்கைப் போடவும். இதுக்கு கணைக் காச்சல் அக்கரக் காச்சல் இதுகள் தீரும்.

<u>மாந்தத்துக்கு:-</u>

வேலிப் பருத்தி வேர், வேளை வேர், கற்றளை வேர், வசம்பு உள்ளி, என்னை பருத்தி-க்குத் தக்கது போட்டு விளக் கெண்ணெயி லெரித்துப் புகட்டவும். பத்தியம் வென்னீருஞ் சோறு முண்ணவும். கத்பு-மசத்த

<u>கற்பு மாந்த என்னை:-</u>

வேலிப் பருத்திச் சாறு ஆனைவிலைச் சாறு முருக்கிலைச் சாறு, கையார்

தகரைச் சாறு, பொடுதலைச் சாறு செருப்படிச் சாறு வெக்காவலை வேர், கோஷ்டம், வசம்பு, திப்பிலி, அசமதாகம், கருஞ்சீரகம், அப்பைக் கிழங்கு, இந்துப்பு, சுக்கு இவை ஆமணக் கெண்ணெயில் வேக வைத்து என்ணை ஒரு காசிடை கொடுக்கச் சுரவ மாந்தமுந் தீரும்.

வெதும்பிய வயறோடும் பிள்ளைக்கு நெய்:-

வட்டத் திருப்பி, நெய் வட்டத் திருப்பி வேர், கூவிளைப்பிஞ்சு, அத்திப் பூ வெள்ளி லோத்திரம் செவியம், அதிவிடையம், மஞ்சள், செங்கழநீர்க் கிழங்கு, சந்தனம், செஞ்சந்தனம், தேவதாரம், சுக்கு யிவை புளியாரைச் சாறு நெய்யில்ரைத்து கொட்டைக் கரந்தை குட்டி வேலா வேர் இது ரெண்டும் அவைத்து தண்ணீரிலூறப் போட்டு யிறுத்து விடிய நாலு நாழிகை யென்னக் குளிப் பாட்டவும். இப்படி எழு நாள் குளியாட்ட மறுஊர் குரலைப் போல பிறக்கும்.

அப்பால் நெய் வைக்க:-

வாளையிலிருந்த தேரை விராகனிடை.க, அதிமதுரம், முடக் கொத்தான் ஈசுரி வேர், கருஞ்சீரகம், திப்பிலி, ஈர வெங்காயம் வகைக்கு விராகன்.க, இவை எல்லாம் நெய் நாழியி லெரித்து வார்க்கவும்.

ஆம சுர உருண்டை குழந்தைகளுக்கு:-

வசம்பு, உள்ளி, அசமதாகம், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கோட்டம் கருஞ்சீரகம், இந்துப்பு, பெருங்காயம், மொட்டு பதம் வறுக்கத் தக்க வறுத்துக் கொண்டு மற்றது சும்மா கூட்டி தற் சமன் கூட்டி அகத்தியிலைச் சாற்றிலாதல் வெதுப்படக்குச் சாத்திலாதல் சாணக்கிச் சாத்திலாதல் பெற்ற தொன்றிலரைத்து தேற்றன் கொட்டைப் பிரமாணம் உருண்டை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு ஆம சுரமான பிள்ளைக்கு முன் சொன்ன சாறுகளில் குளிகையிடவும். கிடையாத போது தேனில் கொடுக்கவும்.

வயறு பொருமல், அணுக் கென்று பிள்ளைகளுக்கு உதிரம் வீழில்:-

கூவிளஞ் சோறு அத்திப் பூ இருவேலி வேர், வெள்ளி லோத்திரம் அத்தித் திப்பிலி இவை ஒக்கக் கொண்டு கசாயமாக்கி ஆற்றித் தேன் வார்த்து நக்குவது. பாலில் புகட்டுவது. திப்பிலி அதிவிடையம் இவை பொடி செய்து தேன் கூட்டி நக்க இருமலும் வெதுப்பும் மேல் நோக்குங்கயுந் தீரும். அதிவிடையம், பொடி செய்து தேனில் குழைத்திடுக. முருங்கை விரை தோல் போக்கி புளிச்ச மோரிலரைத்துப் பாக்களவு மோரில் கரைத்து தேன் வார்த்துக் கொடுக்க உதிரம் விழும்பும் நிற்கும்.

பிள்ளை அஸ்தி சுரத்துக்கு:-

ஓரிலைத் தாமரை சமூலம், சீரகம், ஏலம் இது மூன்றும் சமன் கூட்டிச் சாலடித் தண்ணியி லரைத்து சுண்டைக்காயளவு உருண்டை செய்து ஒரு உருண்டையும் ஈர வெங்காயமும் சாலடித் தண்ணீரில் மூன்று நாள் கொடுக்கவும். அஸ்தி சுரம், காமாலை, யிளைப்பு சோகை தீரும். உப்பு, புளி விடவும். கை கண்டது.

விக்கலுக்கு:-

சர்க்கரையும் முலைப் பாலும் ரெண்டு துளி நசியம் விட் நிற்கும்.

ஏங்கு கணத்துக்கு:-

கடுக்காய்.4, வசம்பு.4, கற்றாழை, ஈர வெங்காயம், சிறுநீரை வேர் பாப்பார் முள்ளி வேர் இது பிட்டவித்துச் சாறு பிழிந்து மிளகரைத்து ஈர வெங்காயம் விளக்கெண்ணை விட்டுத் தாளித்துக் கொடுக்கத் தீரும்.

குடலேத்தத்துக்கு:-

கொழிஞ்சி வேர், பெருந் தும்பை, சிறுவழுதலை இது மூன்றும் கன்னிகையில் நூல் வாங்கி சுத்திக் கட்ட தீரும்.

மூலக் கடுப்புக்கு:-

முருக்கு மேல்த் தோல் சீவிப் போட்டு உள்த் தோல் வெட்டி எடுத்து எலு மிச்சங் காயளவு அரைத்துக் காராம் பசுவின் பாலில் கொள்ளத் தீரும். இசங் கொழுந்து அரைத்து நல்லெண்ணையில் குழைத்து முழுங்க உள்மூலந் தீரும்.

பேய் வீக்கத்துக்கு:-

சேனைக் கிழங்கும், செம்பூறி யாட்டுப் புழுக்கையும் இரண்டும் நேக அரைத்து பேய் வீக்கத்துக்கு தடவவும். வீக்க மெற்றப் பட்டதுக் கெல்லாம் ஆகும்.

மாதேவிக்கு மருந்து:-

சிறுகீரை வேர், குப்பை மேனிக் கீரை வேர், பன்னை வேர், நீலி வேர், துளசி வேர், நாய்த் துளசி வேர், பொருமி வேர், தகரை வேர், சாறணை வேர், நாய்த் துளசி வேர், பொருமி வேர், தகரை வேர், சாறணை வேர், Tபூளை வேர், ஊஞ்சல் பட்டை புங்சம் பட்டை கோவை வேர், மாதவன் கிழங்கு, பொறிசம் பட்டை, வசம்பு, பருத்தி விரை அளவு மஞ்சள் பருத்தி விரை அளவு வெள்ளுள்ளிப் பூண்டு ரெண்டு ஓமும் ஒரு விரல் கொண்டது நற்சீரகம் ஒரு விரல் கொண்டது விளக் கெண்ணெயில் எரிக்கவும்.

<u>இருமலுக்கு:-</u>

அமுக்கிலாங் கிழங்கு, பிரமியிலை, திப்பிலி, வசம்பு யிது வெல்லாம் மூன்று நாள் தேனில் கொள்ளவும். ஒரு சேரை மலையாளக் குளிகை: அதில் பாதி திப்பிலி சீனக் காரம் விராகனிடை பொரித்துப் பொடி பண்ணி வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ளவும். ஒரு ஈர வெங்காயத்தில் ஒரு மிளகு பிரமாணம் அவின் வைத்துக் கருதில் குத்திச் சுட்டுத் தின்ன வியாதி தீரும். கை கண்டது.

<u>இருமலுக்கு:-</u>

மிளகறணையிலை ஒரு குத்து உரலிலே துவைத்து வென்னீரில் பிழிந்து வடி கட்டி ஒரு படி தண்ணீர் குடிக்கவும். இப்படிப் பத்து நாள் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். மாங்கிழங்கு மாகாது.

ஆடாதோடைச் சாறு, உழக்கு தூதுவளைச் சாறு உழக்கு, கண்டங் கத்திரிச் சாறு உழக்கு, குப்பை மேனிச் சாறு உழக்கு, கையாந்தகரைச் சாறு உழக்கு இந்தச் சாறெல்லாம் ஒன்றாய்க் கூட்டி கன கன மிளகு ஐந்து உழக்குப் போட்டு இந்தச் சாறு சுவற மட்டும் உலர்த்திப் பொடி செய்து நிறுத்து சுக்கு, திப்பிலி, கிராம்பு, இந்துப்புக் கடுக்காய் இவை ஒவ்வொன்று பொடி முந்தின மிளகு பொடிக்கு ஐந்தில் ஒரு பங்கு நிறுத்துக் கொண்டு ஒன்றாய்க் கலந்து வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ளவும். வறச்சி யிருமலானால் பசுவின் நெய்யில் கொள்ளவும். சிலேட்டும காசம், சுவாசம், க்ஷயரோகம் இருமல் இது வெல்லாந் தீரும்.

<u>சுரனம்:-</u>

நெல்லிப் பட்டை, அஞ்சல் பட்டை, பொறிசம் பட்டை, சிறுகிளா வேர், செங்கத்தாரி வேர், சிறுகுறிஞ்சா வேர், சுண்டை வேர், பழுபாகல் கிழங்கு, மிளகறணை வேர், புளியறணைக் கிழங்கு, அமுக்கிலாங் கிழங்கு, தூதுவளை வேர், நெல்பொரி சர்க்கரை யிது வெல்லாஞ் சரி சமன் கூட்டிப் பொடி வஸ்திர காயம் பண்ணி திப்பிலி தேனிலூறப் போட்டுக் கொண்டு சுரணம் அந்தத் தேனில் வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். உடனே திப்பிலி இரண்டு வாயில் போட்டுத் தின்னவும். இப்படி அந்தி சந்தி இரண்டு நேரமும் திப்பிலி சுரணம் தின்று வருகிறது. கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும். பால், நெய், துவரைப் பருப்பு, வெள்ளாட்டுப்புக் கண்டம், புழுங்கலரிசிச் சோறு, உப்பு, மிளகு அரைவாசி கூட்டவும்.

<u>அழல் காமாலைக்கு:-</u>

கண்ணெரியும். உடம்பனலும் கால், கை அசந்து போம். பித்த மதிகரிக்கும். இதுக்கு ஊறும் பழுப்பு. ஒரு முள்ளிக் காயளவு அரைத்து அரைப்படி பசுவின் பாலில் ஒரு சேரை நெல்லரிசி போட்டு வேகிற போது மருந்து போட்டு மை போலே வெந்த பிறகு அந்தச் சோற்றை நெய் வார்த்து அசனம் பண்ணவும். அன்றைக்கு உடம்பு அதிகமாய் அழலும் குணமாம். கை கண்டது.

<u>ஊது காமாலைக்கு:-</u>

அரிதினை அரைப்படி நனைச்சு நல்ல வெல்லம் கூட்டி தண்ணீர் மிட்டான் கிழங்கு ஒரு பிடி பிடிச்சுப் பாதி பச்சை மாவாய்த் தின்னவும். பாதியைச் சுட்டுத் தின்னவும். வியாதி போக மட்டுந் தின்னவும். பத்தியம் பாலும் சோறும்.

<u>நிலையாவாரை பற்பம்:-</u>

நிலையாவாரை சமூலம் நிழலிலுலர்த்திப் பொடி செய்து இப்பொடி பசுவின் பாலில் குடிக்க வீரிய முண்டாம். நீரில் குடிக்க வயிற்றிலுண்டான வியாதி விலகுந் தீரும். இப்பொடியுந் துளசியுந் தின்னக் குளிர் வெப்புத் தீரும். தண்ணீரில் குடிக்க கண்ணோவு தீரும். இப்பொடியும் கொன்றை மேல் வறப் பட்டையும் ஒரு மண்டலந் தின்னக் குட்டந் தீரும். வென்னீரில் குடிக்க இருமல் தீரும். இப் பொடியுந் துளசியுந் தின்னச் சூலை தீரும். இப்பொடி கோதும்பை மாவில் தின்னச் குன்மந் தீரும். எருமை மோரில் குடிக்க வயத்தில் நோவு தீரும். தேனில் தின்ன உடம்பு மெலியும். நெய்யில் தின்ன உடம்பு பருக்கும். வென்னீரில் குடிக்கச் சீரி விழும். பாலில் குடிக்கத் திருமேனிப் புழு விழும். மோரில் குடிக்கச் செரியாக் குணம் தீரும். ஆட்டுக் கோமியத்தில் குடிக்க அகவை தீரும். குன்மமுந் தீரும். காராட்டுப் பாலில் குடிக்கப் பிள்ளைகளுக்கு வாற கருஞ் செவ்வாப்புத் தீரும். எருமைச் சாணகப் பிழிந்து அந்தச் சாத்தில் கொடுக்க மிகுந்த பாண்டு ரோகந் தீரும். எருக்கம் பாலில் கூட்டி வெதப்பி பிளிந்து கொடுக்க அறணை கடி தீரும். குப்பை மேனிச் சாத்தில் புசத் தேள் கடி தீரும். நிலவாகை பற்ப முற்றும்.

மூலத்துக்கு: குணமும் மருந்தும்: ஆழி மூலத்துக்கு குணம்:-

பவனஞ்சுத்தித் தடிச்சு சுருங்கங் கொடுத்து முளை உள் வாங்கி நிற்கும் ரெத்தம் கொஞ்சம் தீராது.

குதை மூல குணம்:-

ஆசனம் அடைத்துக் கொண்டு பிருமணக் கொன்றை போன்று வரி கண்டு நடுவே மலம் வரும். இதுவும் தீராது. உள்ளுக்கு மருந்து.

வாழைக் குலை மூல குணம்:-

வாழைப் பூப் போலே முளை காணும். பின்னை உள்ளே வாங்கிப் போம். இதுவும் தீராது. சிலை மூலத்துக்கு உள்ளே முளை யிருந்து ஆசனங் கடுக்கும். சீ விழும். புளியாரை நெய் பண்ணிக் கொடுக்கவும் தீரும்.

உள்மூலம் குணம்:-

தொப்புள் வலியுண்டாய் ஆசனங் கடுத்து ரெத்தமுஞ் சீயும் விழும். இதுக்கு முன் மருந்து கொடுக்கத் தீரும்.

பிறமூல குணம்:-

முளை பிரவேசமாய் ஒரு வேளையிலே வலத்தை யிறக்கி ஆசனங் கடுத்து ஊன் தண்ணியும் ரெத்தமும் விழும். ஊன் தண்ணி விழாமலிருக்கிற முளையு முண்டு. வலம் ஒதுங்கி விழும்.

இதுக்கு கார வகை:-

வெள்ளைப் பாஷாணம் விராகனிடை.க, சீனக் காரம் விராகனிடை.க, புது ஓடு பொடி பண்ணினது பலம்.க, சீலையில் வடிகட்டி வெள்ளைப் பாஷாணம் சுத்தி பண்ணுகிறது. பசுவின் பாலிலே பதினைந்து நாழிகை ஊறப் போட்டு எடுத்துச் சுத்து ஊர்ந்த பிறகு பாகற்காயிலாகிலும் பாகலிலையி லாகிலும் சுத்தி பண்ணிப் பிற்பாடு இந்த மூன்றும் நன்றாய் அரைத்துக் கொடுக்கையிலடைத்துக் கொண்டு மருந்து போடும் போது தலை முழுகி பாகலிலைச் சாறு விளக்கெண்ணை உழக்கும் சாரித்து கொடுக்கவும். வயறு கழியும். பிறகு மருந்து போடவும். போடுகிற விதம் அந்த மருந்தை முலைப் பாலில் குழைத்து முளையைச் சுத்திப் போடவும். இப்படி மூன்று நாளாறு பொழுது சீலையில் தடவிப் போடவும். ஊன் தண்ணி வடியும். நன்றாகக் கழுவி கவுசியையாய்ப் போடவும். இதில் வேகாதிருந்தால் பின்னையும் இரண்டு பொழுது போடவும். முளை வெந்து கன்னினதுக் கடையாளம் குத்திப் பார்த்தால் மரம் போலே யிருக்கும். பிறகு மாத்து வைத்துக் கட்டவும். மாத்துச் சுடு சோறும் எருமைத் தயிர் வடி கட்டினதும் இரண்டும் அரைத்து வைத்துக் கொண்டு அதை முளை மேலே வைத்துக் கட்டவும். அந்தி சந்தி கட்டவும். இதில் வெந்ததோ வேகவில்லையோ வென்று பார்த்து முன் மருந்து குழைத்து வேகாத விடத்தில் போட்டு மாத்து வைத்துக் கட்டவும். மருந்து போடும் போது செய்யும் குணமேதென்றால் வலத்தை யிறுக்கினால் பச்சை விளக்கெண்ணை ஆழாக்குக் கொடுக்கவும். அதிலும் விடாதிருந்தால் விளக்கெண்ணை பசுவின் பால் பாகலிலைச் சாறு மூன்றும் சாரித்து கொடுக்கவும். வயறு விடும். சலங் கட்டினால் முருங்கையிலை கொண்டு வந்து உப்புப் போடாமல் அவிச்சு அந்தத் தண்ணீரில் கொடுக்கவும். அதில் விடாதிருந்தால் இரண்டு பணவிடை வெங்காரம் பொரித்து அந்தக் கசாயத்தில் மேன் பொடி யிட்டுக் கொடுக்கவும். அதில் விடாதிருந்தால் யிளநீர் முகில் திறந்து ஒரு பானையில் பதக்கு தண்ணீர் விட்டு அவித்து அந்த யிளநீர் வத்திக் கொண்டு முன் பொடியிட்டுக் கொடுக்கவும். பத்தியம் தயிருஞ் சோறும் யிச்சா பத்தியம். பால்மோர் நெய், தயிர் யிது விடாமல் கூட்டவும். காரம் போட்டு முகிஞ்சாப் போலே விளக்கெண்ணை யிட்டு முழுகி மாத்து வைத்துக் கட்டவும். அடிக்கடி மூன்று நாளைக் கொருக்கால் தலை முழுகி வரவும். முளை விழுந்து போன பிறகு அந்தப் புண் வாயில் புளியிலை காச்சித் தண்ணீர் விட்டுக் கொண்டு வரவும். புண்ணுக்கு ஒயம் ளசியும், புளியிலை பொடுதலை, நொச்சிலை யிவை யெல்லாந் துவைத்து வதக்கி வைத்துக் கட்டவும். இது கட்டா திருந்தால் வெள்ளைக் குங்கிலியம் சேர்வை செய்து போடவும். சுக சரீரத்துக்கு காரம் போட்டால் எரியும். தாங்கப் படாமல் எரிவுக்கு முலைப் பால் மேலே சற்றே சற்றே குத்தி வரவும். தீரும். அசன வாய் தடித்து வங்கி எரிவு மகாப் பிறமாதமா யிருக்கும். காரத்துக்குப் பின் வாங்காமல் செய்யவும். திடம் கை கண்டது. நன்றாய் அன்டம் கழுவிப் போட்டு மருந்து கட்டவும். வென்னீரில் நன்றாய் அலம்பிப் போட்டு மருந்து வைத்துக் கட்டவும் தீரும்.

மூலத்துக்குச் சூரணம்:-

நிலப்பனைக் கிழங்கு வெருகங் கிழங்கு, காட்டுக் சுறணைக் கிழங்கு, புளி நறணைக் கிழங்கு, மருள் கிழங்கு, நல்ல கருணைக் கிழங்கு, பிறண்டை இவை யெல்லாம் சரி சமன் பசு மோரில் ஆகுதல் ஆட்டு மோரிலாகுதல் அவிச்சு உலத்திச் சூரணம் பண்ணி புளியாரைச் சாறு விட்டுப் பிசறிக் காய வைக்கவும்.

சித்திர மூலம் பலம்.க, சீரகம் பலம்.க, ஏலம் பலம்.$\frac{1}{2}$, கொத்தமல்லி பலம்.$\frac{1}{2}$, கருஞ்சீரகம் பலம்.$\frac{1}{2}$, சாதிக்காய் பலம்.$\frac{1}{4}$, சாதிப் பத்திரி பலம்.$\frac{1}{4}$, அதிவிடையம் பலம்$\frac{1}{2}$ இவை யெல்லாம் சூரணம் பண்ணி தேனிலே ஆகிலும், நெய்யிலே ஆகிலும் சர்க்கரையிலே ஆகிலும் கொள்ளவும். கசப்பு, புளி விடவும். நாற்பது நாள் கொள்ளவும் தீரும். மூல மென்னப் பட்ட தெல்லாம் தீரும்.

புளியாரை நெய் :-

வட்டத் திருப்பி மாதளை வறச் சுண்டி முத்தக் காசு இது நருக்கி கசாயம் . மாங்கொட்டைப் பருப்பு சிந்தன் காயளவு கருவேப்பந் தண்டு, அரைத்து அவ்வளவும் சீரகம் பலம்.१, சுக்கு ஓமம் மிளகு, திப்பிலி ஏலம், அதிமதுரம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கோட்டம், இலவங்கப் பட்டை அதிவிடையம் ஒரொன்று விராகனிடை.உ, புளியாரைச் சாறு.உ, நெய்.உ, இவை யெல்லாம் கூட்டி அரைத்து எரித்து மெழுகு பதத்தில் லேகியமாய் யிறக்கிக் கொள்ளவும். அந்திக்கு ஒரு முட்டி காலமே ஒரு முட்டி கொள்ளவும். கற்பு, புளிப்பு விடவும். மாங்கிஷ மாகாது. துவர் கறி கூட்டவும். இதுக்குத் தீரும் வியாதி சகல மூலமுந் தீரும். கை கண்டது.

ஏலாதிக் குளிகை :-

ஏலம், கோட்டம், அதிமதுரம், மஞ்சிலை, கோரோசனை இவை தற் சமன் மகுக் கொழுந்து யிருவேலிச் சாற்றிலரைத்துக் கடுகு பிரமாணம் உருண்டை பண்ணி காயூா சுரம் விடாச் சுரத்துக்குப் பழந் தண்ணீரில் இடவும். யிருவேலித் தண்டு குடி நீரிலிடவும். தோஷ சுரத்துக்கு ஒரிலைத் தாமரைச் சாத்திலிடத் தீரும்.

பீனிசத்துக்கு நெய் :-

குங்குமப்பூ மாதளம் பூ, கரிசலாங் கண்ணி வாய் விளங்கம், அதிமதுரம், கோஷ்டம், சுக்கு வகை ஒன்றுக்கு விராகனிடை.க, பசுவின் நெய் உழக்கு அருகம் வேர் சாறு உழக்கு, பசுவின் பால் உழக்கு இவை யெல்லாம் வரையலரைத்து பதத்தில் வடித்து நாசியில் மூன்று துளி விடவும். தலைக்கு முக்கூட்டெண்ணை தேய்த்து முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி ரெத்தப் பீனிசம் சுக்கிலப் பீனிசம் சலப் பீனிசம் மூக்கில் நாத்தம், சீழப் பீனிசம் இவை யெல்லாந் தீரும். குளிர்ந்த தண்ணீர் பழஞ் சோறு காடி தவிர மற்றது கூட்டவும்.

பீனசத்துக்கு :-

தேங்காய் நெய் உழக்கு அருகம் வேர்ச் சாறு உழக்கு பசுவின் நெய் உழக்கு ஏலம் விராகனிடை.3, கோஷ்டம் விராகனிடை. , வெள் வெங்காயம் விராகனிடை.3, இவை யெல்லா மரைத்து மெழுகு பதத்தில் வடித்து ஒரு குடுவையில் வேடு கட்டி வைத்துக் கொண்டு ரெண்டு காதிலும் விட்டுத் தலைக்குத் தேய்த்து முழுகவும்.

அக்கர சஞ்சீவி :-

சீரகம், கருஞ்சீரகம், ஏலம் கூகை நீர் அதிமதுரம், கல்நார், சாத்திர வேதி இது வெல்லாம் சரி சமன் கூட்டிச் சிந்தன் பழச் சாத்திலரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொண்டு சர்க்கரையில் பசுவின் வெண்ணெயில் கொடுக்கவும். பத்தியம் கீரை துவரைப் பருப்புக் கூட்டவும்.

அக்கரத்துக்கு :-

நல்ல சந்தனம், கலங் கொம்பு, நற்சீரகம், ஏலம், கருஞ்சீரகம், நற் பவளம், அதிமதுரம், ருத்திராட்சம் நல்ல வெல்லம் இது வெல்லாம் சரி சமன் பச்சரிசி கழுவின கழுநீரி லரைத்து துவரைப் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொண்டு அத்துடன் தன் தண்ணீரில் கொடுக்கவும். நாக்கு அக்கரம், குண்டிகை அக்கரம் உள்ச் சுரம் இது வெல்லாந் தீரும். இது இரண்டும் கை கண்டது.

சன்னிக்கு சஞ்சீவி பூவதி :-

எருக்கஞ் சுண்ணமும், திரிகடுகும் இஞ்சிச் சாற்றினூற வரைத்து
வருக்கன் தேற்றும் விரை யளவு மாத்திரை யிஞ்சி சாற்றிலிட
யுருக்கு வாலேந்திரனுடனே யோங்கும் பிள்ளை பிறந்த சன்னி
தருக்குஞ் சன்னி பதிமூன்றுந் தவிர்க்க நல்ல சஞ்சீவி தானிதுவே.

தவிர்க்கும் வகை கேள் பத்தியந் தான் தானே தென்னில் சாற்றக் கேள்
புவிக் குளிறி கைப்போடு புளிப்பும் பொருந்தா திதுக்குத் தோஷ வகை
விருக்குஞ் சடல மழகேறம் வென்னீர முதிலார் முண்ணச்
செவிக்குள்ச் சன்னி யுள்ள தெல்லாம் செடத்தை விட்டு அகன்றிடுமே.

தலை மண்டை வியாதி செய்யுங் குணம் மருந்து :-

தலை சொறியும் போது ஒட்டின் மேலே சொறியிருப் போலே யிருக்கும். மூளை சுருளும். மயிருதிரும். முகத்தாரை வலிக்கும். முகம் கனக்கும். தலையில் நரம்பு தெறிக்கும். உச்சி யிடிக்கும். நாசி வறளும். பல்லுக் கொறு கொறு வென்றும் அலகு திறக்க ஒட்டாது. சுழி பிடரிக் சேகும் வலிக்கும். நிமிர்ந்தால் திமிரமாய் வலிக்கும். நாசியிலே மோர் போலே விழும். இதின் குணம் ஆரோசிகமில்லை . வாந்தியில்லை.

இதுக்கு மருந்து :-

கெட்டி மிளகை வேண்டு மென்றது எடுத்துத் திருகு கள்ளிப் பாலிலே ராத்திரி பகலாக மூன்று நாள் நிழலில் உலத்தி அந்த மிளகை நல்லெண்ணெயில்

சிவப்பு நிறமாய்ப் பொரித்து என்ணெயில் போட்டு அரைத்து நாளுக்கு மூன்று தரம் பூச மூன்று நாளைக் கொரு தரம் தலை முழுக இது குணமாம்.

புழு வெட்டு தலை மயிர் உதிர்ந்து போனதும் முளைக்கும். ஆரோசகம், மலப் பதம், விஷபாகம், பான்டு, காமாலை, க்ஷயரோகம், வெறு வயறு கென்டை யிடுப்பு வலி, வாத சூலை, குடல் வாதம், சர்வ. ரோகமுந் தீரும். பத்தியம் புளி, கிரந்திப் பன்டம் தவிர்க்கவும். கை கன்டது.

பீனிசத் தலை நோக்காட்டுக் குணம்:-

தலை சொறியும் போது ஒட்டின் மேலே சொறியிருப் போலே யிருக்கும். மயிருதிரும். முகம் வலிக்கும். முகம் அதைக்கும். தலை நரம்பு தெறிக்கும். உச்சி யிடிக்கும் நாசி வறளும். பல்லுத் தயையும் கொட்டாவி விடும். பிடரி நோகும். நிமிர்ந்தால் ததிகாம் வரும். நாசியிலே மோர் போலே விழும். மிளகு நீர் போலே விழும். அமுத்தினல் ரெத்தம் போலே காணும். வெடி நாறும். நெறி வாய் நோம். உடலுலைக்கும். உடம்பு கடுப்புன்டாகும்.

இதுக்கு மருந்து:-

பசுவின் நெய், நிமத்தவும். இதிலே நில்லா விட்டால் லவங்கம் பலம்.உ, பச்சைக் கற்பூரம் பனவிடை. , சிறுதேக்கு விராகனிடை.உ, சந்தனம் நெல்லிப் பருப்பு, சென்பகப்பூ, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், பொன்னுங்காணி, சிறுகீரை; வட்டத் திருப்பி வேர்; சிறுகாஞ்சொறி வேர், காட்டுப் பசளைக் கிழங்கு, எலுமிச்சம் பழச் சாறு முலைப்பால் வாத்தரைத்துப் பசுவின் நெய் நாழி விட்டுப் பதத்தில் வடித்துத் தலை யிலே தேய்த்து நாசியிலும் விடவும்.

மன்டை நாறின பீனிசத்துக்கு:-

துளசிச் சாறும், வெள்ளைக் குங்கிலியமும் பொடி செய்து பொடி நசிய மிடவும். எல்லாப் பீனிசத்துக்கும் ஆமணக்கம் வேர், கெந்தி தகரம், சதகுப்பை, சிந்தி நன்டு அரத்தை, கிராம்பு, இந்துப்பு, வாய் விளங்கம், கோட்டம், அதிமதுரம், சுக்கு இது வகைக்கு இரு களஞ்சு வெள்ளாட்டின் பாலில் அரைத்து நல்லென்ணை ஒரு படியில் கையாந்தகரைச் சாறு நாலுபடி இதுகளெல்லாம் கூட்டி அரைத்து எரித்து நசியம் பண்ணி காதில் விடத் தலை முழுக யிதக்குப் போம் வியாதி தலை மயிர் உதிருகிறதும், பல் வலி, பிடரி வலி, ஆறு வகைப் பனிசம் நிற்கும். கன்வலி பீனிசம் பயித்தியம் நாழி நெய்யி லெரிக்கவும்.

சகல காச்சலுக்கும் உருன்டை:-

ஆடு தின்னாப் பாளை வேர் கொன்டு வந்து தூவைத்தால் வெள்ளையாக நரம் பிருக்கும். அதை எடுத்துப் போட்டு மத்ததுகளை எடுத்துக் கொன்டு இலவங்கப் பட்டை கொன்டு வந்து இடித்து இரன்டு தூக்கும் சரியாகக் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து நன்று யரைத்ததின் பிறகு பருத்திக் கொட்டைப் பிரமாணம் உருன்டை செய்து நிழலுலத்தி வைத்துக் கொன்டு காச்சல் கன்ட ஐந்தாறு நாளைக்கு பிறகு ஒரு நேரம் வென்னீரில் கொடுக்கவும். ஒரு நேரம் முலைப்பால் முறிச்சு அதில் ஒரு உருன்டை கொடுக்கவும். ஒரு நேரம் சிறு நீரில் கொடுக்கவும். சகல காச்சலும் பெரு வாரிக் காச்சலும் தீரும். கை கன்டது.

கன் புகைச்சல் ரத்த காசம் தலை மயக்கம் இவைக்கு என்ணை:-

நல்லென்ணை படி.க, முலைப்பால் படி.க, கையாந் தகரைச் பொன்னுங் காணி, முசுமுசுக்கை, தாழை விழுது, செவ்விள நீர் இவைக்கு படி.க, சந்தனம், விலா மிச்சம் வேர், வெட்டி வேர் செங்கழு நீர்க் கோஷ்டம் வகைக்கு விராகனிடை.க, கிராம்பு பனவிடை.5, குங்குமப்பூ பனவிடை.உ, நொச்சிலைச் சாறு விட்டு மூன்று நாள் சூரியப் புடம் இட்டு நாலா நாள் கடைச் சரக்குப் போட்டு அடுப்பில் வைத்து மெழுகு பதமானல் கையிடலாம். இது பதமாக இறக்கிக் கொள்ளவும். அடுப்பிலே வைத்து ஒரு கொதி வந்த போது கடைச் சரக்குப் போடவும். நாலு கொதிக்குச் சந்தனம் போடவும். தாழம் பூவில் மிளகரைத்துத் தடவிப் போடவும். பத மறிந்து இறக்கிக் கொள்ளவும். உசிலம் பொடி சீயக் காயிட்டு முழுகவும். எட்டு நாளைக் கொருக்கால் முழுகவும். வியாதி தீரும்.

சூரணம்:-

இரதம், கெந்தகம், நாபி, மனேசிலை, வெங்காரம், ஒரொன்று களஞ்சு இது எல்லாத்துக்கும் மிளகு எட்டத் தினை குழிக் கல்லில் போட்டுப் பொடியாக்கி ஒவ்வொரு மிளகாகச் செலவழியு மட்டும் பொடி செய்து சூரணம் பன்னி யெடுத்து ஒரு பனவிடை அள் வெத்திலை யிலிட்டு மடித்து தின்று சற்று சுடு தன்னீர் குடிக்க இதுக்குத் தீரும் வியாதி அந்தி யிருமல், ஒயாயிருமல், எட்டு வகைப் பான்டு, உள் மாந்தை, அக்கினி மந்தம் எட்டு வகை விய்வும் வந்தித்து வந்த காசம், மந்தாக்கினி நித பான்டு வட்டத்தே சுரமுந் தீரும்.

பிளித் தேக்குக்கு:-

நொச்சிக் கொழுந்து கொடிவேலி வேர்ப் பட்டை, ஒமம் இவை ஒவ்வொன்று பாக்களவு கடுக்காய் சுக்குப் பெருங்காயம் அரைக் களஞ்சு இவை எல்லாம் மோர் வார்த்தரைத்து ஒரு படி மோரிலாவது காடியிலாவது கலந்து காச்சிக் கொடுக்க பசி தாகமுன்டாம். நீர் மேல் நெருப்பு உலத்திப் பொடி செய்து எலுமிச்சம்

பழச் சாத்தில் குடிக்கப் பிளித் தேக்கு தீரும். கள்ளிக் கொழுந்து வென்னீரில் கொள்ளத் தீரும்.

கிருனிக் கபாடம்:-

அதிவிடையம் சாதிபத்திரி, சாதிக்காய், காசுக் கட்டி, களிப் பாக்கு, சீரகம், மாங்கொட்டைப் பருப்பு, புளியங் கொட்டைத் தோல், முள்ளிலவம் பிசின் விளாம்பிசின் அவினி மிருந்து கஞ்சாப் பெர்டி இவை ஒரொன்று சமன் கொண்டு மாங் கொட்டைச் சாறு வாத்தரைத்துக் குண்டு மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி வைக்கவும். கிருனிக் களிச்சல் தீடுப்புக்கு வட்டத் திருப்பி வேர், வறப்பூலா வேர், மாதளை வேர், இது நாலும் நருக்கிப் போட்டு நாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சி உருண்டை ஒன்று உரைத்துக் கொடுக்கவும் தீரும். கை கண்டது.

வயறு யிரைச்சல் பிரமல் செரியாமலுக்கு பசி தாகத்துக்கு:-

இரும்பைச் சிவக்கக் காய்ச்சி எரு முட்டைக் குவியலில் கஞ்சி காய்ச்சி இறக்கு மட்டும் வேறே யிரும்பு காச்சிக் கஞ்சியை இறக்கி இரும்பைக் கஞ்சிக் குள்ளே போட்டு மூடித் திறந்து சோத்துப் பருக்கையும் யிரும்பும் எடுத்து முத்தத்திலே சுசங் காகங் குருவி தின்னப் போட்டு அந்தக் கஞ்சியைக் குடிக்கவும். இந்த வகை யெல்லாந் தீரும்.

சர்க்கரை சூரணம்:-

ஏலம், சீரகம் பலம்.3, சுக்கு பலம்.½ இது மூன்று சிந்தன் பழச் சாத்திலரைத்து மூன்று புடம் போடவும். கற்றாழைச் சாற்றில் மூன்று புடம் கையாந் தகரைச் சாற்றில் மூன்று புடம் உலத்தி யிடித்துச் சூரணம் பண்ணி ராயப்பூர் சர்க்கரை பலம்.4, கலந்து தின்னவும். உப்புக் கூட்டிப் புளிப்பு கசப்பு விடவும். எரி குன்மம் குலை எரிவு நிற்கும்.

க்காச்சலின் மேல் தோஷத்துக்கு:-

மூன்று விரல் கொண்ட நெல்லுமியில் நாகப் பாம்பு முடிந்து போட்டு சித்திலந்தை யிலையுங் கூட்டி இரு நாழி நீர் ஆழாக்காக்கி மேன் பொடி திப்பிலி கூட்டிக் கொடுக்கவும்.

நாவறட்சிக்கு:-

முள்ளிப் பழச் சாத்தில் அக்கிரு காரமுரைத்து நாக்கில் தேய்க்கவும். முசுத்து முட்டையும் முசுமுசுக்கையும் முலைப் பாலில் குழைத்து நாக்கில் தடவவும்.

கெற்ப சுரம் சன்னிக்கு:-

கல்நார் கோட்டம், அதிமதுரம், சாதிபத்திரி, நற்சீரகம் இவை எல்லாம் இளநீர் விட்டரைத்துக் குண்டு மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலத்தி வென்னீரிலிடவும்.

இஞ்சிக்குழம்பு:-

வெருத்தப் பிசின், பாவட்டம் பட்டை வேர், மரமஞ்சள், மிளகு, கடுகு பெருங்காயம், சதகுப்பை, லவங்கம், குங்கிலியம், சாதிக்காய், சாதிபத்திரி நேர்வாளம் இவை சரி சமன் இது வெல்லாம் இஞ்சிப் பழச் சாறு விட்டரைத்து குண்டுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணி வென்னீரிலிடவும். ஏழு நாள் இடவும். கவிச்சுப் புளி விடவும். இதுக்குத் தீரும் வியாதி ஆமை சூலை, கெற்ப சூலை, சூதக வாய்வு, கண்டு நோவு இவை யெல்லாந் தீரும்.

பீனிசப் புகை:-

பொன்னரிதாரம் விராகனிடை.க, கோரோசனை விராகனிடை.க, பச்சைக் கற்பூரம் விராகனிடை.½, குங்குமப்பூ விராகனிடை.½, பசுவின் வெண்ணை விட்டு அரைத்து மெல்லிய சீலையில் தட்வி நிழலுலத்தி வைத்துக் கொண்டு பசுவின் நெய் வார்த்து விளக்குக் கொளுத்தி பிறகு திரி கொளுத்தி அவிச்சுக் கண்ணில் சீலை போட்டுக் கட்டி இரண்டு நாசியில் பிடிக்கவும். மூன்று நாள் அந்தி சாயப் பிடிக்கவும்.

பீனிசத்துக்கு:-

முடக் கொத்தான் சாறு குறிஞ்சாச் சாறு, ஈர வெங்காயச் சாறு, நல்லெண்ணை இலுப்பைக் கட்டி இது வெல்லாம் எரித்து மூன்று நாளைக் கொருக்கால் நாலு நாளைக் கொருக்கால் முழுகவும். நசியம் வெள்ளைச் சாறணை வேர் ஒன்று மிளகு. , வெள்ளைப் பூண்டுத் திரி.3, நற்சீரகம் ஒரு காசத்தனை முலைப் பால் யிவை யெல்லாம் நருக்கிப் பஞ்சில் தவைத்து ரெண்டு நாசியிலும் மூன்று துளி விடவும். வாயில் அரிசி கொடுத்து நசியம் விடவும். ஞாயிற்றுக் கிழமையில் விடவும். மூன்று ஞாயறு விடவும்.

அட்ட சூரணம்:-

கருஞ்சீரகம், நல்ல சீரகம், திப்பிலி, சுக்கு ஓமம், பெருங்காயம், இந்துப்பு இது வெல்லாம் இள வறையாய் வறுத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி பசி தாகம் உண்டாம்.

5.5.64.

திப்பிலி நெய் :-

சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, கிராம்பு விராகனிடை க, திப்பிலி பலம்.3, இது வெல்லாம் வெவ்வேறே யிள வறையாய் வறுத்துக் கொள்ளு கிறது. எல்லாம் பொடியாக்கி அரைப்படி பசுவின் நெய்யில் வெள் வெங்காயப் பருப்பு மூன்று நாலு போட்டுச் சிவந்து கொதிக்கிற பதத்திலே இந்தப் பொடியெல்லாம் போட்டுக் கிளறி இறக்கிக் கொள்ளவும். அந்தி சந்தி ஒரு கரண்டி கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி ஏங்கல், இருமல், க்ஷயரோகம், காசி இவை யெல்லாந் தீரும்.

விரோசனத்துக்கு:-

வெள்ளைக் காக்குரட்டான் வேர் கொண்டு கொன்னைக் கொழுந்தும் பட்டையும், வெள்ளைப் பூத் தாழி ஆட்டுத் தவல் பெருங்காயம் சற்று இது வெல்லாம் சரி சமன் எல்லாம் ராவடுப்பில் தண்ணீர் விட்டுச் சுவறக் காய்ச்சி வேக வைத்துக் காலையிலே எடுத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு நன்றாய் நேக அரைத்துக் கடலைப் பிரமாணம் உருண்டை செய்து சின்னதும் பெரியதுமாக உருட்டிக் காய வைத்துக் கொள்ளவும். வேண்டினவர்களுக்கு வென்னீர் தண்ணீரில் அரைத்துக் கொடுக்கவும். பெரியவர்களுக்கு இரண்டு சிறு பிள்ளைகளுக்கு ஒன்று கொடுக்கவும். மிளகு நீருஞ் சோறும் உண்ணவும். அதிகமானால் மோருஞ் சோறும் கொடுக்கவும் நிற்கும்.

க்ஷயத்துக்கு:-

கோதும்பை கொண்டு வந்து தண்ணீர் வார்த்து நனைத்து ஒரு நாழிகை தரிச்சுக் காயப் போட்டு உமி போகக் குத்தி கருங் குறுவை யரிசி படி.க, திரிகையிலிட்டு அரைத்து நாலு பங்காய்ப் பரிச்சு நேரத்துக்கு ஐந்து பலம் ராயப்பூர்ச் சர்க்கரை உழக்கு, நெய் பாகு சேர்ந்து வருகிற சமயத்திலே விட்டுத் து ராவி மல்லாந்து படுத்துக் கொண்டு கொள்ள இப்படி நாலு நாள்க் கொள்ளவும். தேத்தாங் கொட்டை இளநீரில் ஊறப் போட்டுப் பாக்குப் போலே சீவி இளநீர் விட்டு அரைத்து அவ்வளவு பசுவின் வெண்ணெயில் குழப்பித் தின்னவும். மூன்று நாள் தின்னவும். கர்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

அமுர்தாதிக் குளிகை:-

முத்தமொடு திப்பிலி யொடொத்த மரு சுக்கு முக்கடுகு ரோசனை கொள் சீதகமோடேலம்
ஒத்த யிருவேலி வெழுமிச்ச மிது மிச்சம் ஒளி தவ்வு கோலமுடன் ஒரு மிலவங்கம்
கொத்தமல்லி அதிமதுரம் கோரோசனை கொள் கோஷ்டக் கடுகுரு தங்கிள நீரிலரைத்தே
உத்த பரிதாப சுரம் உடன் மெடுத்தால் ஓடும் பிறங்காலும் அமுர்தாதி யிதுவே.

வல்ஞ் சலமடைத்ததுக்கு:-

உத்தாமணிப் பால் சீலையிலூட்டித் திரி திரிச்சு விளக் கெண்ணெயில் தோய்த்து பவன வாயிலேற்றவும். குப்பை மேனிச் சாறு தொப்புளில் தடவவும். தலை மயிர் சுட்டு வென்னீரில் கொடுக்கவும். இது கை கண்டது.

மேகத்தின் மேல் வலஞ் சல மடைத்ததுக்கு:-

வெடி மருந்து வென்னீரில் கொடுக்கவும் விடும்.

வீக்கத்துக் கெல்லாம் மருந்து:-

ச்வுச்சாரம் நவச்சாரம் யெவட்சாரம் வெங்காரம் இது ஐந்தும் எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து ஒரு விராகன் கடினமானால் ஒரு கொட்டைப் பாக்களவு புளியங் கொட்டை மாத்திரம் இது ஒருநேரங் கொடுக்கவும்.

பீனிசத்துக்கு நெய்:-

குங்குமப்பூ, மாதளம் பூ, கரிசலாங் கண்ணி, வாய்விளங்கம்; அதிமதுரம், கோட்டம், சுக்கு வகைக்கு விராகனிடை.க, பசுவின் நெய் உழக்கு அருகம் வேர்ச் சாறு உழக்கு பசுவின் பாலுழக்கு இவை யெல்லாம் வகையா லரைத்துப் பதத்தில் வடித்து நாசியில் மூன்று துளி விடவும்.

தலைக்கு முக்கூட்டெண்ணை:-

தேய்த்து முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி ரத்தப் பீனிசம், சுக்கிலுப் பீனிசம் சலப் பீனிசம் மூக்கில் நாற்றம், சீராய்ப் பீனிசம் இவை யெல்லாம் தீரும். குளிர்ந்த தண்ணீர், பழஞ் சோறு, காடி தவிர்க்கவும்.

விப்புருதிக் குணபாடம்:-

நோவெல்லாம் வாதம் எரிப் பெல்லாம் பித்தம் தினவெல்லாம் சேற்றுமம் வயற்றின் மலடு ஆனாலும் முத்தின மலடு ஆனாலும் கெற்ப விப்புருதியானாலும் தன்னுட உடம்பின் பொல்லாப் பானாலும் புழுவினாலே யானாலும் பேயினால் ஆனாலும் குணம் சொல்லு கிறேன். ஊரமாகிற போது அரிசி கழுவின தண்ணீர் போலே யிருக்கு மானாலும் சுரி கழுவின தண்ணீர் போலே சீலையில் பற்றி யிருக்கும். அடிக்கடி காற்றுக் கழிஞ்சாலும் பேறென்பது பேயின் வந்த குற்றமானால் கரைபடும். யிடது புறங் கீழ் வயறு நொந்திருக்கும். அழன் றிருக்கும்.

மருந்து:-

மான் செவி கள்ளி வேரும்; குன்றி வேரும் புன்னைக் காயளவு அரைத்துப் பசுவின் நெய்யில் குழைத்து மாதாவை வேண்டிக் கொண்டு முழுங்கவும். குளித்த அன்று முதல் நாலு நாளும் முழுங்கத் தரிக்கும். புழுவினால் வந்த குற்றமானால் கறைப்படும் போது இறச்சி கழுவின தண்ணீர் போலே யிருக்கும். இதக்--

இதுக்கு மருந்து:-

சீந்தித் தண்டு முக்கழஞ்சு இலைக் கள்ளி வேர் கழஞ்சு அரைத்துப் பசுவின் நெய்யில் குடிக்கத் தரிக்கும். மருந்து செரித்தால் பசுவின் பாலுஞ் சோறு முண்பது.

கெற்ப சூலை யுண்டாகில் குணபாடம்:-

இதுக்கு கெற்பந் தரித்த முதல் மாதம் உள்ளங் காலும், கையும் நெஞ்சும் எரிக்கும். சீழ் வயறு நோவும். இதுக்கு ஏலம் விலாம்பிச்சம் வேர், சந்தனம், தாமரை அல்லி இவை அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கவும். தாமரைப்பூவும் விலாமிச்சம் வேரும் அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கவும்.

ரெண்டா மாசம் சூலை தோன்றினால் குணம்:-

நீர் கலங்கிக் கழுநீர் போலே விழும். இதுக்கு மருந்து:- கொட்டிக் கிழங்கு, கோட்டம், ஏலம் இவை ஒரொன்று அரைக் கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துக் குடிக்கவும். மூன்றுந் திங்களில் சூலை தோன்றினால் கண் பஞ்சடைந்திருக்கும். இரண்டு நேரமும் வயறும் நொந்திருக்கும். இதுக்கு மருந்து:-

கொட்டிக் கிழங்கும், தாமரை வளையமும் அல்லிக் கிழங்கும் நீரிலரைத்து பசுவின் பாலில் குடிக்கவும்.

நாலாந் திங்களில் சூலை தோன்றினால்: உதிரம் கட்டியும் நீருமாக விழும். வயறு வலிக்கும். நீர் கடுக்கும்.
இதுக்கு மருந்து:- கொட்டிக் கிழங்கும், நெருஞ்சில் வேரும் சந்தனமும் நீரிலரைத்துப் பசுவின் பாலில் குடிக்கவும்.

அஞ்சாந் திங்களில் சூலைக்கு:- உதிரம் கலங்கி விழும்.

இதுக்கு மருந்து:- தற்கோலம், கோட்டம், கொட்டிக் கிழங்கு, தாமரை வளையம் ஒரொன்று கால் கழஞ்சு கூட்டி நீரிலரைத்து பசுவின் பாலில் குடிக்கவும்.
உள்ளடி நோகுமாகில்:- ஆமல்க் கிழங்கும் பூவும், சந்தனமும் அரைத்துப் பாலில் கொடுக்கவும்.

ஆறு மாத சூலைக்கு:- பிள்ளைப் பெறுவாரைப் போலே நோவும்.

இதுக்கு மருந்து:- அத்திப் பட்டை, துளசி, சந்தனம் நீரிலரைத்துப் பாலில் குடிக்கவும்.

ஏழாந் திங்களில் சூலைக்கு:- கண்ணோவும். உடம்பு காயும். சோறு செல்லாது.

இதுக்கு மருந்து:- தற்கோல மரைத்துப் பசுவின் பாலில் குடிக்கவும்.

எட்டாந் திங்களில் சூலைக்கு:- பசி தாகம் போலே நோவும். வாய் நீர் விழும். பிள்ளை பெறுமாப் போலே நோவும்.
இதுக்கு மருந்து:- கொட்டிக் கிழங்கும், தாமரை வளையமும், அத்தித் தொலி ஒரொன்று ரெண்டு காசிடை அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கவும். நெஞ்சும் வயறும் நோம். அதில் செந்தாமரைப் பூ பாலில் குடிக்கவும்.

ஒன்பதாந் திங்களில் சூலைக்கு:- வயறு நோவும். கை கால் நொந்திருக்கும். வயறு வீங்கும்.
இதுக்கு மருந்து:- தற்கோலம், விலாம்மிச்சம் வேர் அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கவும். சிறு பயறு தாமரை வளையம் நெய்தல் கிழங்கும், இரு நாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சிக் குடிக்கவும்.

பத்தாந் திங்களில் சூலைக்கு:- தோன்றினால் வயறு நொந்தால் சர்க்கரையும் நெய்தல் பூவும் இலுப்பைப் பூவும் சிறு பயறும் நீரிலரைத்து ஆவின் பாலில் குடிக்கவும். சகலத்துக்கும் கெற்ப வியாதி யெல்லாந் தீரும்.

ஆண் கட்டுக்கு:-

அத்தி மரத்தின் கீழே வெட்டி அதின் கீழே கலசம் வைத்து நீரெடுத்து சனிப் பேயன் வாழைப் பழத்தில் கலங் கொம்பு சீவி யரைத்த விழுதும் இளநீரும் இது வெல்லாம் சரியாக விட்டுக் கலக்கிக் குடிக்கவும். இப்படி எட்டு நாள் குடிக்கவும். சந்தனம், விரு தண்டில் பூசிடவும்.

தலைக்கு எண்ணை:-

ஆடாதோடை நொச்சி கரு நொச்சி, கையாந் தகரை யிது நாலும் சரியாகக் கொண்டு வந்து யிடித்து சாறு ஒரு படி பிழிந்து மிளகும் மஞ்சளும் இரண்டும் இரண்டு எலுமிச்சங் காயளவு அரைத்து சாற்றில் கலந்து ஒரு படி

நல்லெண்ணை கூட விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கட்டிக் கொண்டு முழுகி வரவும். இதுக்குத் தீரும் வியாதி மண்டை சன்னி தலைநோவு தொண்டைத் தினவு இது எல்லாந் தீரும்.

வில்வாதி எண்ணை:-

வில்வப் பத்திரி யிடிச்சுப் பிழிந்த சாறு படி.க, இரண்டு படி விஷ்ணு கிராந்தியும் பிடி சோறு பிடி, சீரகமும் சட்டியிலிட்டு ஐந்து படி தண்ணீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சின கசாயம் ஒரு படி வசுத்தாத்தின விளக்கெண்ணை படி.க, ஈர வெங்காயம் அரிஞ்சு ஒரு பிடி கோழி வசம்பு நிறையளவு ஒரு கட்டை வெள் வெங்காயம் ஒன்று இது வெல்லாம் எண்ணை சட்டியில் விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து கலசத்தில் இறுத்து வைத்துக் கொண்டு மாத மொருக்கால் வயறு கழியக் கொடுக்கவும். சரீர முலந்திருந்தால் தினமொரு காசிடை நக்சி வரவும். கார்ப்பு, புளி விடவும். இதுக்குத் தீரும் வியாதி கணைக் காச்சல், இருமல், ஏங்கல், இளைப்பு, கால் கை ஒஞ்சு போறது இவை எல்லாந் தீரும்.

எலும்புருக்கி கடுப்புக் கழிச்சலுக்கு:-

ஆட்டுக் கறி நெய். 3/4, மறுவரிசியிட்டுச் சுட்டு நெய் கூட விட்டு மூன்று நாள் உப்பு விட்டுக் கொள்ளவும். பிரமியம் எலும்புருக்கி நிற்கும். ஆட்டுக் கறி நெய் 3/4, பசுவின் பால் கலந்தவுடனே நெய்யூற்றிக் கொள்ளவும். பிரமியம் எலும்புருக்கி குணமாம். சுக்கு பலம் பொடி செய்து நல்லெண்ணையில் அடை தட்டித் தின்னவும். எருமைத் தயிரில் கொள்ளவும். கஞ்சாவிலை ஆமணக்கிலை எருமைத் தயிரில் கொள்ளவும். கஞ்சாவிலை, ஆமணக்கிலையில் உமிக் காந்தலில் வேகப் பண்ணி எருமைத் தயிரில் கொடுக்கவும். முட்டை வெள்ளைச் கருவும் கஞ்சாப் பொடியும் நல்லெண்ணையில் சாரித்துக் கொடுக்கவும். இலந்தையிலை பொன்னிறமாய் வறுத்து பொரி மாக் கூட்டி கருப்புக் கட்டி கடிச்சுத் தின்னவும். அடப்பம் பட்டை மாம் பட்டை, ஒதியம் பட்டை இது மூன்று மிடித்துக் காச்சிக் குடிக்கவும். எந்தக் கடுப்புக் கழிச்சலுங் கிருணியும் நிற்கும்.

எரி குன்மத்துக்கு:-

• முருங்கையிலை வாய் பேசாமல் பறித்து உழக்குச் சாறு மூன்று நாள் நக்க எரிகுன்மம் சத்தி குன்மம் நிற்கும்.

சூலைக் கிரந்திக்கு:- சிவனார் வேம்பு, சங்கம் வேர்ப் பட்டை, வெள்ளறுகு இது மூன்றும் சமன் கொண்டு யிடித்து வஸ்திர காயம் பண்ணிச் சிறுநீரில் கொள்ளவும். சூலை கிரந்தி யெல்லாந் தீரும்.

குட்டம் பதினெட்டுக்கு:-

தில்லையிலை பானை ரெம்ப யிட்டு வேடு கட்டி மறுவரிசியிடிச்சுப் பிட்டிட்டு காலமே யாகுதல் சாயங்காலமாகுதல் ஒரு நேரமாய் தின்னவும். ஒரு நாளைக்கு வைத்த யிலை நாலு நாளைக்கு அதிலே பிட்டிட்டுத் தின்னவும். இலை வேரும் புங்கம் வேரும் வேறு காய்ச்சி மேலுக்கு விட்டுப் புண் வாயுங் கழுவிப் போடவும். ஒரு நாளைக்கு யிட்ட வேர் நாலு நாளைக்குத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி சாயங் காலத்துக்கு உடம்புக்கும் புண் வாயிலும் விட்டு வரவும். புண் வாய் கழுவின பிறகு இரசம் அஞ்சு காசிடை பருத்திச் சாற்றில் முறிச்சு வெள்ளைக் குங்கிலியம் அரைப்பலம் இவை சீலையிலூட்டிப் புகை காட்டவும். சோவை வெள்ளைக் குங்கிலியம் எருமை வெண்ணையும் அரைத்து நுணவிலையில் பூசிப் புண் வாயில் போடவும். உள் வியாதி மேலே விசிறும். இந்தப் படி மூன்று முறை பண்ணவும். கற்பு புளிப்புத் தவிர்க்கவும். உண்ணாமல் எருமை மோருஞ் சோறும் உண்ணவும். கை கண்டது.

விஷ பாகம் சகலத்துக்கும்:-

வெள்ளாட்டுக் கோமியம் கடுக்காய் உத்தாமணிச் சாறு வெள்ளாட்டுக் கோமியம் கடுக்காய், உத்தாமணிச் சாறு தண்டு கூட்டிக் குடிநீர் வைத்துக் குடிக்கவும். பசுவின் கோமியமும் கடுக்காயும் குடிக்கவும். நீர் முள்ளி சுட்டுச் சாம்பலும் சிறுநீரும் குழைத்து துவலை யிடவும். கறிக் கோழிக் கொழுந்து மிளகும் அரைத்து முழுங்கவும். செங்கத் தாரிப் பட்டை பலமும் உள்ளி வசம்பு யிவை ஒரு பலமும் சுத்திப் புழிஞ்சது ரெண்டுழக்கு விளக்கெண்ணை நாழி உரிய கொட்டைக் கரந்தை.ச சாறும் கூட்டி வடித்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசவும். விழுதியிலை அவிச்சு இறுத்துக் கொடுக்கவும்.

காதில் புழுவுக்கு:-

பேய்த் தும்பை குப்பை மேனி நல்ல வேளை, உள்ளி வசம்பு கூட்டி நருக்கிச் சாறு புழிந்து காதில் ஓதுக்கி யதவும். பூச்சி புறப்படும். கை கண்டது.

வெருகெண்ணை சுரத்துக்கு:-

நல்லெண்ணை உரி, வெருகிலைச் சாறு உரி, வெருகங் கிழங்குச் சாறு உரி இவ்வை எல்லாம் சாரித்து இதுக்கு மருந்து அரத்தை சதகுப்பை, உள்ளி வசம்பு இவை ஒரொன்று இரு கழஞ்சு அரைத்து வடித்துக் கொண்டு நேரமும் ஒரு நேரத்துக்கு ரெண்டு காசிடை உள்ளுக்குக் கொடுத்து நெற்றிக் கட்டிலும் கழுத்திலும் தடவவும்.

எலும்புருக்கிக்கு:-

முத்தின ஒதியம் பட்டை அவைத்து நல்லெண்ணையுங் கலந்து நக்க எலும்புருக்கி

தீரும்.

<u>சகல குணத்துக்கு:-</u>

குப்பை மேனி நல்ல வேளை பிரண்டை நொச்சில் நீர் மேல் நெருப்பு எருக்கிலை சதிரக் கள்ளி கழக்கொடி நார்த்தம் பூம் இவை யோரொன்று சாறு உரி பசுவின் நெய் உரி, கடுககாய்த் தூள், இந்துப்புக் கல்லுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, பொட்டி உப்பு ஒரொன்று பலம். $\frac{1}{2}$, சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளுள்ளி, வாய்விளங்கம், அசமதாகம் இவை யோரொன்று பலம். $\frac{1}{2}$ பெருங்காயம் பலம். $\frac{1}{4}$, பசுவின் நெய் கடைச் சரக்கு எல்லாம் பச்சிலைச் சாத்திலரைத்து நெய் என்ணெயில் கலந்து எரித்து கழஞ்சு மருவாதி கொடுக்கவும்.

<u>பிரமியத்துக்கு:-</u>

கழல் கொடி பருப்பு, மெழுகு முட்டை, வெள்ளைக் கரு, நல்லெண்ணெயில் பொரித்துக் கொடுக்க நிற்கும்.

<u>மூலத்துக்கு:-</u>

எருமைக் காஞ்சொறி சமூலமும உலத்தி யிடித்து தூளாக்கி பேய்ப் பீர்க்கந் தூள் கூட்டி சுண்ணம்பு கூட்டிக் குடுக்கையி லடைத்து தேள்க் கொடுக்கியிலைச் சாற்றில் குழைத்துத் தேனில் சாரித்து விரலில் தடவி ஆசனத்திலேற்றவும்.

பிற மூலத்துக்கு நெய்யில் குழைத்துப் பூச ஊமத்தையிலை போட்டுக் கட்டவும். ஆடாதோடை யிலை நாழி தண்ணீரில் காச்சிக் கொடுக்கவும். பிறண்டை வேரும் அரிசியும் பிட்டுச் சுட்டுத் தின்னவும்.

<u>மூலத்துக்கு:-</u>

சீத மண்டலி யீருக்கிடாரிச் சாணகத்தில் சுட்டு உள்ளுங் கொடுத்து மேலும் பூச வாங்கும். நாயுருவி சுட்ட சாம்பலும், ஈர வெங்காயமும் அரிந்து கூடப் போட்டு வேக வைத்து மத்தாலே கடைந்து கோரோசனை போட்டு மத்திச்சு தினமொரு பாக்களவு கொள்ளவும். சிவந்த நாயுருவி யிலையும் ஈர வெங்காயமும் விளக்கெண்ணெயில் எரித்து நக்கவும். சாறணை வேர், நல்ல வெல்லம் அரைத்துப் பவனத்திலேத்திக் கச் சட்டங் கட்ட விழும். ஒரிலைத் தாமரை சமூலமும், எலுமிச்சங் காயளவு பசுவின் தயிரில் ஒன்பது பொழுது கொடுக்கவும். அடிப் பிறப்பட்ட மூலந் தீரும்.

கருணைக் கிழங்கு, மேல் முட்டையும் அரைத்து வாழைப் பழத்தில் கொடுக்கவும் மூலக் கடுப்புத் தீரும். சங்கம் வேர் எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து அடிப் பிற்பட்டதில் ஒன்பது பொழுது தடவ ஏற வாங்கும். அசையாமலிருக்கவும். பத்தியம் தயிர் கூட்டவும். ஆகில் பட்டை பசுவின் பாலில் கொடுக்கவும். ஆருக் கடுப்பு மூலமுந் தீரும்.

<u>நாபிச் சூரணம் விபரம்:-</u>

பாக்கு வெட்டியினாலே நாபியைக் கொட்டைப் பாக்குச் சீவிளுப் போலே சீவிக் கொண்டு சின்னக் கலசத்தில் போட்டு நற மூத்திரத்தில் அறுபது நாழிகை ஊறப் போட்டு மறுபடியும் கோமூத்திரத்தில் அறுபது நாழிகை ஊறப் போட்டு நல்ல கலத்தில் நாழிகை ஊறப் போட்டுக் காய வைத்துக் கொள்ளவும். யிதுவும் நாபி சுத்தியாம்.

அப்படி சுத்தியான நாபி பலம். க, சுக்கு பலம். 4, அந்தச் சுக்கை நாபி சீவிளுப் போலே சீவிக் கொண்டு நாபி வேறே சுக்கு வேறே பொன்னிறமாய் வறுத்துக் கொட்டிக் கொள்ளவும். அம்மியில் வைத்து அரைத்துச் சூரணம் பண்ணிக் கொள்ளவும். நெறுத்து ஒரு விராகனிடை சூரணம் கொடுக்கவும். இந்தப்படி ஒரு மண்டலம் கொடுக்கவும். இதுக்கு பத்தியம் பசுவின் மோர் அரைக்கீரை புளி பசுவின் வெண்ணை தாம்பூலமாகும். மற்றது ஒன்று மாகாது.

<u>முக்கூட்டு என்னை:-</u>

மஞ்சள் சாம்பிறாணி வெள்ளைப் பூண்டு மிளகு போட்டுக் காய்ச்சி தலைக்குத் தேய்த்து முழுகவும். மறுப்டி பத்து நாளைக்குப் பிறகு முறை நாலு நாளைக் கொருக்கால் முழுகி வரவும். யிதுக்குத் தீரும் வியாதி க்ஷயம், ஷேகம், மேகம் ரணம், மேகக் கிரந்தி, கொடிப் பவுத்திரம், ஆசனப் பவுத்திரம், பக்கப் பவுத்திரம், அண்டப் பவுத்திரம், பீனிசம், பல்லறணை, கபால சூலை, கன்னசூலை, சூலைக் கட்டு, தியிர் வாய்வு, முதுகுப் பிளவை, கண்டமாலை, வாய்வுப் பத்து நாக்குப் புத்து, துடை துறசம் உஷ்ண வாய்வு, மூல வாய்வு சூசிகா வாய்வு யிது முதலான ரோகமுந் தீரும்.

<u>முலை சுரக்கு:-</u>

புத்தில் மண்ணும் நாயுருவி வேரும் காடி வார்த்தரைத்து முலையில் பூச முலை சுரக்கும். பாதிரி வேரை ஆவின் பாலில் குடிக்கவும். பசுவின் பாலில் ஆலந் தோலரைத்து தயிரில் தின்ன முலை சீரக்கும்.

<u>ரத்தக் கழிச்சலுக்கு:-</u>

கருவேலங் கொழுந்து ரெண்டு பாக்களவு எருமைத் தயிரில் கொடுக்கவும். பசுவின் பாலில் மருதம் பட்டைச் சாறு விட்டுக் கொடுக்க ரத்தக் கழிச்சல்

கவுசை குன்மம் குலை முட்டி பெரு வயறுக்கு:-

இந்துப்பு கல்லுப்பு இரண்டும் அரைத்துச் சுட்டு ஆற வைத்து யித்துடன் சுக்கு பலம். உ, யிளகு பலம்.4, வசம்பு பலம்.½, திப்பிலி பலம்.½, சீரகம் சீனக் காரம் களஞ்சு கெந்தகம் களஞ்சு கடுக்காய்த் தூள் 1/8, பெருங்காயளம் களஞ்சு கடுகு 1/8 வெள்ளுள்ளி உரி, வாளுருவை யரிசி 3/4, இவை தூளாக்கி நாற் களஞ்சி தூளில் நல்லெண்ணை காய்ச்சி விட்டுக் கொடுக்க வயற்றில் வியாதி பலவுந் தீரும். மூல வாதம் மலட்டு வலி குடல் வாதம், அண்ட வாதம் எல்லாந் தீரும். கை கண்டது.

⁂⁂

சு.ச:5.5.64.

முற்றும்

২৭২